


# ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளது ஆனால்....

05



# உஸ்தாத் மன்ஸூர், அகுரணை உலமா சபை முரண்பாடு:

10



# ஜனாதிபதியின் வேண்டாப் பெண்டாட்டி

03







# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 409 • 21 டிசம்பர் 2018 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1440 • விலை 40.00







# ரணில் பிரதமர்:

## மேற்கு நாடுகள் முண்டியடித்து ஆதரவு





உறவுகளைப் பலப்படுத்த விரும்புகிறோம்

யாப்புச் சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும்

ஜனநாயகத்தின் பாலான மக்களின் அர்ப்பணம்

தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும்

நல்லிணக்கத்துக்கான முயற்சிக்கு எங்களது ஆதரவு

உறவு இனிமேல் முன்னோக்கிப் பயணிக்கும்

ஒக்டோபர் 26 ஆம் திகதி இருந்தவாறு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தொடர்ந்து இருப்பதற்கு ஜனாதிபதி சிறிசேன எடுத்த முடிவினை மேற்கு நாடுகள் பல முண்டியடித்துக் கொண்டு ஆதரித்திருக்கின்றன.

ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கும் போது, அவர் மேற்கின் பொரு ளாதாரத்துக்கு வக்காலத்துக்கு வாங்குபவர், மேற்கின் நிகழ்ச்சி நிரலுக்கு எம்மால் செயற்பட முடியாது என ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். அதேபோல பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதும் மேற்கின் தூதுவராலயங் களிடமே ரணில் சரணடைந்தார் எனவும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமரான துடன் பல மேற்கு நாடுகளும் ரணில் அரசாங்கத்துக்கு ஆதர வளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளன. (பக். 15)

## பாராளுமன்றத்தின் நாசகாரிகள் தொடர்பில் சிஐடி விசாரணை



நடந்து முடிந்த அரசியல் கலவரக் காலப்பிரிவில் பாராளுமன்ற உறுப்பினர் கள் சிலர் பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட மோசமான நடவடிக்கைகள் தொடர்பிலான விசாரணை தற்பொழுது சிஐடி க்கு ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 15. 16 ஆம் திகதி களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு (பக். 12)

## வடக்கு கிழக்கு மாகாணங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் புதிய அமைச்சரவையின் கவனத்துக்கு



வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதி பதி செயலணியின் ஐந்தாவது அமர்வு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற போது வடக்கு கிழக்கு அபிவிருத்தி யின் போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி யிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (பக். 14)

## தமிழ்க் கூட்டமைப்புக்கு பிரதமர் எழுத்து மூலம் உத்தரவாதம்



பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளதோடு, இதனை எழுத்து மூலம் உத்தரவாதப்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், புளொட் கட்சியின் தலைவருமான தர்மலிங்கம் சித் தார்த்தன் தெரிவித்துள்ளார். (பக். 12)

## நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதில் யாரிடமும் தூய்மையான எண்ணம் இல்லை



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான தேவை உணரப்பட்டுள்ள போதும் இந்த முயற்சி எந்தவோர் அரசியல் தலைவரி னதும் தனிப்பட்ட தேவையை நிறை வேற்றும் வகையில் அமையக்கூடாது என, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர் பாக ஜே.வி.பி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது பாராளு மன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரி வித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூன்று தலைவர்கள் மீதும் நாட்டில் தற்பொழுது அதிக கவனம் குவிந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு விடயத்தில் இந்தத் தலைவர்களின் நிலைப்பாடுகள் வேறுவேறாக இருக் கின்றன. (பக். 12)

## வடக்கு கிழக்கில் காணி விடுவிப்பு தீவிரம்



டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தினால் குறித்துரைக்கப்பட்டதன்படி வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த காணியில் 23, 773.62 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதில் இருந்து 2018 நவம்பர் வரையான காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட காணியின் அளவே இதுவாகும்.

வடக்கு கிழக்கில் இராணுவம் பயன்படுத்திய 45,980.97 ஏக்கர் காணி யில் இருந்தே தனியாருக்குச் சொந்தமான இந்த 23,773.62 (பக். 12)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# உலகம் வியக்கும் கண்டுபிடிப்புகளைத் தந்த அல்-ஹாபிழ் சர்ஜூன்

அல்-ஹாபிழ் வைத்தியர் M.A.C.M. சர்ஜூன் அவர்கள் இலங்கை திருநாட்டின் ஏறாவூரை பிறப் பிடமாகக் கொண்டவர். அல்-ஹாஜ் அப்துல் காதர் - பௌசியா மரீனா தம்பதிகளின் அன்புப் புதல்வ ரான இவர், பொறியியலாளர் ஹுஸைன் ரிஸ்வி, முர்ஷிதா சீரின் ஆகியோரின் சகோதரர் ஆவார்.

கடந்த வருடம் (2017) அமெரிக்காவின், சிகாகோ நகரில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் அல்-ஹாபிழ் சர்ஜூன் அவர்களின் கண்டுபிடிப்பொன்று முதலிடம் பெற்று இளம் ஆராய்ச்சியாளர் விருதை (Young Investigator Award) வென்றது. அமெரிக்கா வில் ஒவ்வொரு வருடமும் American Association of Immunologists ஏற்பாட்டில் சர்வதேச ரீதியான மாபெரும் விஞ்ஞான மாநாடு இடம்பெறும். இதில் உலகின் பல நாடுகளிலும் உள்ள விஞ்ஞானிகள் பங்குகொண்டு தத்தமது கண்டுபிடிப்புக்கள் தொடர் பாக முன்னிலைப்படுத்துகையை (Presentation) மேற்கொள்வர். இதில் 1,2,3 என சிறப்பான மூன்று கண்டுபிடிப்புக்களுக்கு சர்வதேச விருதுகள் வழங் கப்படும். இந்த மாநாட்டிலேயே இவரது கண்டு பிடிப்பு முதலிடம் பெற்றுள்ளது.

மட்டுமன்றி, வருடாந்தம் ஒரு சிறந்த கண்டு பிடிப்பாளரை கௌரவித்து வழங்கும் ரிம்லர் ஞாப கார்த்த விருது (Rimler Memorial Award) வழங்கல் நிகழ்வு இவ்வருடம் (2018 இல்) அமெரிக்காவின் டென்வர் நகரில் இடம்பெற்றது. இதில் இவ்வருடத் துக்கான கண்டுபிடிப்பாளர் விருதையும் அல்-ஹாபிழ் சர்ஜூன் தட்டிக் கொண்டார்.

இவரது கண்டுபிடிப்புக்கள் வைரஸ் கிருமிகள் சார்ந்தவை. அதிலும் குறிப்பாக, மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் தொற்றும் இன்ப்ளுவன்ஸா (Influenza Virus) எனும் தடுமல், காய்ச்சலை உரு வாக்கும் வைரஸ் கிருமிகளின் (பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், H1N1, H4N6, H2N2, H5N7 etc.) தாக்கத்திற்கு எதிராக உடலினுடைய நோயெதிர்ப் புச் சக்தியை அதிகரிக்கும் ஒரு பதார்த்தத்தை கண்டுபிடித்ததே இளம் ஆராய்ச்சியாளர் விருதை (Young Investigator Award) இவருக்குப் பெற்றுத் தந்த ஆய்வாகும். அடுத்து வென்ற ரிம்லர் ஞாப கார்த்த விருது (Rimler Memorial Award) இவரது பல கண்டுபிடிப்புகளுக்குமானது.

**அடுத்து இவர் குறித்து..**

ஏறாவூர் அரபா வித்தியாலயத்தில் தரம்-6 வரை மட்டுமே கல்வி பயின்ற இவர், அல்-மத்ரஸதுல் ரஷாதியாவில் அல்-குர்ஆன் மனனம் செய்யும் நோக்கில் 1989-90 காலப்பகுதியில் கொழும்புக்கு வந்தார். இலங்கையில் இன்றும் உள்ள பெரும் பாலான அரபு மத்ரஸாக்களைப் போன்றே, இங்கும் பாடசாலைக் கல்வி வழங்கப்படவில்லை. நாட்டில் யுத்தம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்ந்ததால் மீண்டும் ஏறாவூருக்கே திரும்பினார். பின்னர், ஏறா



வூர் குல்லிய்யத்துல் ஹிப்ழுள் குர்ஆன் மத்ரஸா வில் குர்ஆன் மனனத்தை பூர்த்தி செய்தார். குர்ஆன் மனனத்தைத் தொடர்ந்து கிதாப் (மௌலவி) கற் கைக்கு பிறிதொரு அரபுக் கல்லூரிக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது.

குல்லிய்யத்துல் ஹிப்ழுள் குர்ஆன் மத்ரஸாவில் கிதாப் பிரிவு இல்லாததால் இன்னொரு மத்ரஸா வுக்கு அனுமதி கிடைக்க ரமழான் வரை காத்திருக்க வேண்டும். ரமழான் மாதத்திற்கு இன்னும் மூன்று மாதங்கள் இருந்தன. ஏக காலத்தில் தன்னுடன் பாடசாலையில் படித்த மாணவர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சையை எதிர்நோக்க தயாராகி வருவதை அறிந்து, தரம்-6 வரையே கற்ற இவர் ஒரு திடீர் ஆசை உந்துதலால், பொழுதுபோக்கிற் காக தானும் அப்பரீட்சைக்கு (Private Candidate) விண்ணப்பித்தார்.

தரம்-6 இல் கற்ற அறிவுடன் மூன்றே மாதங்க ளில் தயாராகி ஒருவரால் க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற முடியுமா?

ஆம், குர்ஆனை சுமந்த இதயத்தின் சக்தியால், இறைவனின் மகிமையின் வெளிப்பாடாக தனக்கு க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் வெற்றி சாத் தியமானது என்கின்றார் இந்த ஹாபிழ்.

முதலில் சாதாரண தர கணிதம் உள்ளிட்ட பாடப் புத்தகங்களைப் பார்க்கும்போது சுத்த சூனியமாக (புரியாத புதிராக) இருந்ததாகவும், பின்னர் ஊரில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் சத்தார் ஆசிரியரை அணுகி கணிதம் கற்பிக்கக் கூறியவுடன், அவர் சிரித்து விட்டார். ஆறாம் ஆண்டு கணித அறிவுடன் எப்படி இது சாத் தியம் என்று கேட்டிருக்கின்றார். பரவாயில்லை சேர், எப்படியாவது கற்பியுங்கள் என ஆர்வம் ததும்பக் கேட்டார் ஹாபிழ் சர்ஜூன். மஃறிப் முதல் இஷா வரையான அந்த வகுப்புக்களுக்கும் சென்று தன்னைத் தயார்படுத்திய இவர், சாதாரண தரம் மூன்று பாடங்களில் அதி விஷேட சித்தியுடன் சகல பாடங்களிலும் சித்தி கண்டார், மாஷா அல்லாஹ்!

அதுதான் இவரது வாழ்வின் திருப்புமுனை என்கின்றார். மௌலவியாக வர கிதாப் கற்கைக்கு செல்ல இருந்த இவருக்கு படிப்பின் பக்கம் ஆர்வம் ஏற்பட்டது. தொடர்ந்து நன்றாகக் கற்க வேண்டும் என்ற வேட்கையுடன் க.பொ.த. உயர்தரம் கற் கையை கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கற்று, பல் அறிவியல் துறையில் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றார். குடும்பத்தாரினதும், பிறரி னதும் ஆலோசனையின் பிரகாரம் பல் அறிவியல் துறைக்குச் செல்லாமல், கால்நடை மருத்துவத் துறையில் பட்டப் படிப்பைத் தொடர்ந்து பேராத னைப் பல்கலைக்கழகத்தில் 2nd upper தரத்தில் பட்டம் பெற்றார்.





பட்டப் படிப்பின் பின்னர், ஹலால் விழிப் புணர்வு செயற்குழுவின் தொழில்நுட்பப் பிரிவு தலைமை அதிகாரியாக 2-3 வருடங்கள் பணி யாற்றினார். அடுத்து, கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட விரிவுரையாளராகக் கடமையாற்றி னார். அங்கு நுண் உயிரியல், குருதிச் சுற்றோட்டத் தொகுதி, நோயெதிர்ப்புச் சக்தி சம்பந்தமான பாடங் களைக் கற்பித்தார். அங்கு விரிவுரை நிகழ்த்திவரும் காலத்தில் பேராதனை பல்கலைக்கழக விரிவுரை யாளர் ஒருவர் மூலம் கனடா அரச புலமைப் பரிசில் குறித்து அறிமுகம் கிடைக்க, அதற்கு விண்ணப் பித்ததில் கனடா University of Calgary முதுமாணிக் கற்கைக்குத் தெரிவானார்.

தற்போது கனடா, கல்கரி நகரில் வசிக்கும் இவரது குடும்பத்தின் முழு செலவையும் கனடா அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளதாகக் குறிப்பிடு கின்றார். கனடா வந்து முதுமாணிக் கற்கையை முடித்து விட்டு, வைரோலோஜி (Virology) எனப் படும் வைரஸ் சார்ந்த துறையிலேயே PhD கற்கை யையும் ஆரம்பித்துள்ளார்.

சாதாரணமாக PhD கற்கையை மேற்கொள்வோர் தமது PhD ஆய்வு குறித்த 2 அல்லது 3 Journal Publications செய்ய வேண்டும். சிலர் அதையும் செய்ய கஷ்டப்படுவதுண்டு. ஒரு Journal என்பது 4-5 கண்டுபிடிப்புக்களை உள்ளடக்கிய ஒரு ஆய் வறிக்கை. ஆனால், இவர், தனது PhD ஆய்வு குறித்து கடந்த நான்கு வருடங்களில் 15 Journal Publications மேற்கொண்டுள்ளார். இவர் எனக்கு அனுப்பிய ஒரு Journal ஒன்றில் மட்டும் 7 கண்டு பிடிப்புக்கள் உள்ளடங்கியிருப்பதாக குறிப்பிடுகின் றார் (மன்னிக்கவும், அது முற்றிலும் மருத்துவ குறியீடுகளும், மருத்துவ சொற்றொடர்களும் அடங்கியிருப்பதால் என்னால் இங்கு விபரிக்க முடியவில்லை).

மேலும், ஒரு புத்தக அத்தியாயமும் (A Text Book Chapter) எழுதியுள்ளார். 20 இற்கும் மேற்பட்ட சர்வதேச மாநாடுகளில் தனது ஆய்வு முன்னிலைப் படுத்துகைகளை (Research Presentations) மேற் கொண்டுள்ளார். PhD பூரணப்படுத்தியவர்களுக்கே இவ்வளவு அங்கீகாரமும், சந்தர்ப்பங்களும் கிடைப் பது அரிது, என்றாலும் தான் இன்னும் PhD கற்று வரும் நிலையில் இறைவனின் மாபெரும் கிருபை யால் இத்தனை நகர்வுகளை மேற்கொண்டிருப்பது ஒரு சாதனைதான் என்று கூறுகின்றார்.

சிறு வயதுமுதலே விஞ்ஞானத் துறைக்கு ஊக் கப்படுத்தியது இவரது உறவுமுறை சகோதரர் ரஷீத் என்பதாகவும், இவர் நியூயார்க்- இலங்கை தூதர கத்தில் அலுவலராக கடமையாற்றுவதாகவும் தெரி விக்கின்றார். ''சிறு வயதில் நான் மத்ரஸாவில் ஓதி வரும் காலங்களில் சகோதரர் ரஷீதின் உயர்தர விஞ் ஞான கற்கைத் திறனைக் கண்டு ஆச்சரியப்படுவ துண்டு. அது ஒரு உற்சாக வித்தாக இருந்தது.

அடுத்து, தற்போது கனடாவில் இருக்கும் எனது பேராசிரியர் அவர்கள் மற்றும் எல்லாம் வல்ல இறைவனின் உதவி ஆகியனவே இந்த விருதுகள் என்னை வந்தடையக் காரணமாகின'' என்று குறிப் பிட்ட இவர், ஈருலகிலும் வெற்றியை எதிர் பார்த்தவராக, இறை பொருத்தத்துடன் வாழ்ந்து, தன்னால் இயன்ற இவ்வுலக முயற்சிகளுக்குப் பிரதி பலனாக, மரணித்தபின், மறுமையில் உயர்ந்த சுவர்க்கத்தை அடைவதே தனது இலக்கு என்பதாக குறிப்பிடுகின்றார்.

''பணிவும், அவமானங்களைத் தாங்கும் இதய முமே ஒரு மனிதனை சிறந்த அடைவுகளை நுகர வழி சமைக்கும், இது இறைவனின் வாக்கு. தீராத தாகம், அயராத முயற்சி இருந்தும் பெருமை என்ற குணம் இருந்தால் இறைவன் அவனை கேவலப் படுத்துவான். பொறுமையுடன் இருப்போர்க்கு வெற்றி நிச்சயம்'' என இளையோர்க்கு தனது அறிவுரைகளையும் உதிர்க்கின்றார்.

''அல்ஹம்துலில்லாஹ் (புகழனைத்தும் அல் லாஹ்வுக்கே), பெற்றோர், ஆசிரியர்கள் (உஸ்தாத் மார்), பேராசிரியர்கள், சகோதரர்கள், உறவினர், கனடா வாழ் சகோதரர்கள், பல வழிகளிலும் உதவிய மனிதர்கள், மனைவி மற்றும் குடும்பத்திற்கும் நன்றி'' பகர்கின்றார்.

அண்மையில் ஏறாவூர் தாருல் உலூம் ஹாபிழ்கள் ஒன்றியமும், உயிரோட்டமான வள நிலையமும் இணைந்து இலங்கையில் விழா ஒன்றை ஏற்பாடு செய்து ''ஆச்சரியமான ஆராய்ச்சியாளர் விருது'' வழங்கி இவரை கௌரவப்படுத்தினர்.

அருமை நபி முஹம்மத் நபி (ஸல்) அவர்களை தனது முன்மாதிரியாக வைத்து வாழ்ந்துவரும் அல்-ஹாபிழ் சர்ஜூன் அவர்கள், மிருக வைத்திய ராகி, அரச பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரை யாளராகி, சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஒரு கண்டுபிடிப்பாளராக இன்று மிளிர்ந்து வரு கின்றமை உலக அறிவைப் புறக்கணித்துப் பேசு வோருக்கு ஒரு அதிசய பாடம்!


O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான

RESIDENTIAL TRAINING PROGRAMME

LEVEL -1 (45 DAYS) & LEVEL -2 (45 DAYS) ONLY FOR BOYS

AN OPPORTUNITY TO OBTAIN CERTIFICATE AND DIPLOMA LEVEL QUALIFICATIONS

ENGLISH LANGUAGE
you will...
- Learn from the basic grammar.
- Read more than 20 books in English.
- Listen to the news and speeches.
- Translate paper articles and stories.
- Take part in conversations and role plays.
- Participate in discussions.
- Do presentations.

THARBIYYA
- Thafseer
- Hifl
- Thajweed
- Dua
- Hadees

INFORMATION MANAGEMENT
MOTIVATION & COUNSELLING
PHYSICAL FITNESS & GAMES
CAREER GUIDANCE

LEADERSHIP TRAINING & PERSONALITY DEVELOPMENT
- Management & Leadership
- Soft Skill Development
- Planning Process (Vision, Mission, Goals & Objectives)
- Decision Making
- Critical & Creative Thinking
- Strategic Thinking
- Time Management
- Stress Management
- Self-Regulated Learning

Commencement Date 06/01/2019

- பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்
- 9 வருட கால அனுபவம்
- துறை சார்ந்த வளவாளர்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

Text your name & address for additional information & application
0777 23 1234

MINDRICH
College of Management Studies
كلية الدراسات الإدارية
Enrichment of Excellence

No. 49, Second Lane, Dehiwala 0115 23 1234 infomindrich@gmail.com



SUBSCRIPTION FORM

Name :......................................................

Address :......................................................

......................................................

Tel :......................................................

Amount : Rs. ............................ Sing: ............................

Publication: மீள்பார்வை ☐ வைகறை ☐ பயணம் ☐ சர்வதேசப் பார்வை ☐

| | | | | |
|---|---|---|---|---|
| வருட இதழ்கள் | 24 | 04 | 04 | 04 |
| உள்நாடு | 1200/- | 300/- | 300/- | 300/- |

உங்கள் பணத்தை காசோலை மூலமாகவோ அல்லது வங்கியில் வைப்புச் செய்வதன் மூலமாகவோ அனுப்பலாம்.

Meeparvai Publishers, Bank: People's Bank, A/C No.: 056100153078164, Branch: Sri Sangaraja Mw, Colombo 10.

No 49, Sri Mahinnda Dhamma Mawatha Colombo 09 T.P 0777581661


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதியின் வேண்டாப் பெண்டாட்டி

• பியாஸ் முஹம்மத்

38 நாட்களுக்குள் ஒருவர் பாராளுமன்ற றுப்பினராக இருந்து, பிரதமராகப் பதவி உயர்வு பெற்று பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக மாறிய அதிசயத்துடன் அரசியல் கலவரம் நிறைவுக்கு வந்திருக்கிறது. மஹிந்தவை ஓரங்கட்டி ரணிலுடன் நடத்திய ஒட்டுறவில்லாத வாழ்க்கை, மீண்டும் பழைய குருடியை நாடச் செய்து, பின்னர் வேண்டாப் பெண்டாட்டியுடன் காலந்தள்ள மீள வேண்டிய நிலைக்கு ஜனாதிபதி மைத்திரியைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. இனி வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று தான் காலாவதித் திகதி வரை அரசாங்கம் ஓடப் போகிறது.

ரணில் வந்தால் நான் ஓடிவிடுவேன், ஒரு நாளும் அவருடன் இணைந்து வேலை செய்ய மாட்டேன், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து என்னையும் அவரையும் இணைக்க முயற்சித்தாலும் அது நடக்காது என்றெல்லாம் வீராப்புப் பேசிய ஜனாதிபதி மீண்டும் அவரையே பிரதமராக்கியது வேண்டா வெறுப்பில் தான் என்பதை, பிரதமர் பதவியேற்பின் போது ஜனாதிபதி ஆற்றிய உரை தெளிவாகச் சொல்லியது.

''பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் கைச்சாத்திட்டாலும் ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்க மாட்டேன்'' என்று நான் தெரிவித்ததை அடிப்படையாகக் கொண்டு சிலர் கேள்வி எழுப்பலாம். என்னை தரக் குறைவாகப் பேசலாம். எனது பேச்சை கேலிக்குள்ளாக்கலாம். ஆனால் அது எனது தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடாகும். அதன் தீவிரத் தன்மை காரணமாகவே நான் அவ்வாறு தெரிவித்தேன். அப்போது நீங்கள் பாராளுமன்றத்தில் 117 பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டினீர்கள்.

பிரதமரை நியமிப்பதற்காக ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை வழங்கவோ கட்டளையிடவோ அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்திற்கு எவ்வித அதிகாரமும் வழங்குப்படவில்லை. நான் அறிந்த வரையில் நீதிமன்றத்திற்கும் அந்த அதிகாரமில்லை. அந்த அதிகாரம் தெளிவாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மதிப்பளித்து பாராளுமன்றத்திலும் 117 வாக்குகளின் மூலம் பெரும்பான்மையை நிரூபித்ததால், ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்க நான் முடிவு செய்தேன். 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கைச்சாத்திட்டாலும் ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்க மாட்டேன் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. இன்றும் அதில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால் பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளித்து அவருக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டுமென்று நான் முடிவெடுத்தேன்.''

கலவரம் நிலவிய 50 நாட்களிலும் பிரதமர் ரணிலுடனான மூன்றரை வருடங்களில் தான் அவரிடம் கண்ட குற்றங்களை ஜனாதிபதி பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தியிருந்தார். இந்த அளவில் இனி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் மிஸ்டர் கிளீன் இல்லை என்பதை ஜனாதிபதியே பகிரங்கமாகப் போட்டுடைத்திருந்தார். ரணில் விக்கிரசிங்க தொடர்பில் அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால் அது ரணில் விக்கிரமசிங்க என்ற தனிமனிதனை மட்டுமன்றி தனது தலைவரை மாற்றுவதற்குக் கூட கட்சியில் ஜனநாயகமில்லாத ஐக்கிய தேசியக் கட்சியையும் அரசியல் வரலாற்றில் இருந்து துடைத்தெறிவதற்குப் போதுமானதாகும். அந்த வகையில் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பை தன் மீதுள்ள கறைகளைப் போக்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

ஐந்தாவது தடவையாக பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்கும் போது ஜனாதிபதி அவரது முன்னிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக முன்வைத்தார். ''2015' தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அமைச்சரவை நியமிக்கப்பட்டது முதல் எமது தேர்தல் உறுதிமொழிகள் மீறப்பட்டமை பற்றி நான் உங்களுக்குக் கூறியுள்ளேன். விஞ்ஞானபூர்வமான அடிப்படையில் அமைச்சரவை ஒதுக்கப்பட வேண்டும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நிபுணர் குழுவொன்றை அமைத்து அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. என்றாலும் அந்த ஆவணங்கள் பார்க்கப்பட்டனவா என்பது பற்றி எனக்கு தெரியாது என ஜனாதிபதி கூறியிருந்தார். பிரதமர் இதற்கு விளக்கமளிக்க வேண்டும்.

19 ஆவது திருத்தத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதை போன்று நாட்டின் ஏனைய பதவி நியமனங்களில் அரசியலமைப்பு சபை எவ்வளவு தூரம் பக்கசார்பற்றதாக, நியாயமானதாக இருந்தது என்பதில் எனக்கு பிரச்சினை உள்ளது என ஜனாதிபதி கூறியிருந்தார். ''இன்று பிரதம நீதியரசரிலிருந்து சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், சுயாதீன ஆணைக்குழுக்கள் வரை அனைத்தையும் அரசியலமைப்பு சபையே நியமிக்கின்றது. நான் கண்ட முக்கியமான விடயம் என்னவென்றால் அரசியலமைப்பு சபையில் நீதித்துறை நியமனங்களின் போது நீதித்துறையில் உள்ள சிரேஷ்ட நீதிபதிகளின் பெயர்கள் முன்வைக்கப்படுகின்றபோது அவை நிராகரிக்கப்பட்டன. நீதித்துறையில் சில நீதிபதிகள் தொடர்பில் அவர்களுக்கு சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் நியமனங்களை வழங்குவதில்லை என என்மீது குற்றச்சாட்டு உள்ளது. அவ்வாறு குற்றச்சாட்டுக்குள்ளாக காரணமாக பெயர்களையும் நான் அரசியலமைப்பு சபைக்கு அனுப்பியிருக்கிறேன் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அரசியலமைப்பு சபை அவற்றை நிராகரித்துள்ளது. இதன் மூலம் நீதித்துறையில் சிரேஷ்ட நீதிபதிகளாக இருக்கின்றவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே நீதிபதிகளை நியமிக்கின்றபோது அரசியலமைப்பு சபை பின்பற்றும் நடைமுறைகள் எவ்வளவு தூரம் பக்கசார்பற்றது, நடுநிலையானது என்பதில் பிரச்சினையுள்ளது'' என ஜனாதிபதி கூறியிருந்தார். நீதித்துறை பக்கச்சார்பற்றது என்பதில் எழுகின்ற சந்தேகம் மக்களின் கடைசி அஸ்திரத்திலேயே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகும். நீதித்துறை பக்கச்சார்பற்றது என்பதை பிரதமர் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தத் தொடரில் முக்கியமானது பிரதமரே நேரடியாகச் சம்பந்தப்படுகின்ற மத்திய வங்கிக் கொள்ளையாகும். இது தொடர்பில் ஜனாதிபதி குறிப்பிடும் பொழுது, ''அப்போதைய அரசாங்கத்தில் இருந்த பாரிய தவறுகளின் காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தோல்வியுறச் செய்து, 62 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். அந்த வகையில் அடிப்படையான விடயம் ஊழல், மோசடி என்பனவாகும். ஊழலுக்கும் மோசடிக்கும் எதிராகவே மக்கள் நேய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது. 2015 ஜனவரி 08 ஆம் திகதி தமது வாக்குகளின் மூலம் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு மூன்று மாதம் நிறைவடைவதற்கு முன்னரே இடம்பெற்ற மத்திய வங்கி கொள்ளை, 2015 ஆம் ஆண்டு இரண்டு சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் என்பனவற்றின் ஊடாக நாம் ஊழலுக்கு எதிராக முன்னெடுத்த போராட்டம் முழுமையாக வீண்போனது. அது மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாகத் தகர்த்து, நல்லாட்சி அரசியல் எண்ணக்கருவையும் அழித்து விட்டது.

நான் இன்று காலையில் மத்திய வங்கி ஆளுநருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட முக்கிய பரிந்துரையான தடையவியல் கணக்காய்வு இன்று வரை மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்று கேட்டேன். இன்றுவரை அது செய்யப்படவில்லை. மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடியின் பெறுமதி இவ்வளவுதான் என்று இன்னும் சரியாக கூறமுடியாதுள்ளது என ஜனாதிபதி ஆணைக்குழு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

இன்றுவரை எந்தவொரு கணக்காய்வின் மூலமும் இது பற்றி கண்டறியப்படவில்லை என ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிரச்சினை பற்றி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளதனால் மத்திய வங்கிக் கொள்ளை விவகாரத்தில் தான் நிரபராதி என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரூபிக்க வேண்டும்.

அர்ஜுன் மகேந்திரனை இதுவரை கைதுசெய்யாமல் இருப்பது பற்றியும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ''அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டபோது நான் அதனை கடுமையாக எதிர்த்தேன். என்றாலும் நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு ஒரு வாரத்தில் நன்றியுள்ள ஒருவன் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்கவுடன் எனக்கு எவ்வித பிரச்சினையும் அவசியமற்றது என்ற காரணத்தினால் அவரது அழுத்தமான கோரிக்கையின் பேரில் நான் அர்ஜுன் மகேந்திரனை (பக்.14)

# ஜனநாயகத்தைத் தூக்கிலிடல்: பாகிஸ்தானிலிருந்து ஒரு பாடம்


• அமீன் இஸ்ஸதீன்

இலங்கையின் அரசியல் சதிப்புரட்சி அல்லது அரசியல் நெருக்கடி அது எதுவானாலும், வியப்பூட்டும் வகையில் அது 1953 இல் பாகிஸ்தானில் நடந்த அரசியல் நெருக்கடிக்கு இணையாக அமைந்துள்ளது. இதன் பின்னர் அடிமைத்தனத்தில் இருந்து மேலாதிக்கம் நோக்கி அந்த நாடு கண்ட வளர்ச்சி நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

பாகிஸ்தானின் அரசியல் சதிப்புரட்சி எமக்கு ஒரு முக்கிய விடயத்தைக் கற்றுத் தருகிறது. அரச தரப்பு, ஜனநாயக நாடொன்றின் யாப்பினை தேசத்தின் இருப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தினால் அது அடுத்த தலைமுறையைப் பாதிக்கிறது என்பதை இது எமக்கு எடுத்துக் காட்டுகிறது. அரசியல் சதிப்புரட்சி நடந்து நாடு சட்டரீதியான ஆட்சிக்கு மாறி 65 வருடங்கள் கழிந்த பின்னும் பாகிஸ்தான் ஒரு முழுமையான ஜனநாயகத்தை நோக்கி மீள முடியாமல் தடுமாறுகிறது. சட்ட ஆட்சியை நடைமுறைப்படுத்த விடாமல் மிரட்டும் வகையில் தொங்கிக் கொண்டிருக்கின்ற இராணுவம், ஜனநாயகத்துக்கான பாரிய அச்சுறுத்தலாக அங்கு உருவெடுத்திருக்கிறது.

1953 சதிப்புரட்சியின் சட்டரீதியான தீர்ப்பினை வழங்கிய பெடரல் நீதிமன்றம், நீதியின் பக்கம் சாய்ந்தும், வளர்ந்து வரும் நாட்டுக்கு ஜனநாயகம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்தும் செயற்பட்டிருந்தால், பாகிஸ்தானின் ஸ்திரப்பாட்டுக்கும் சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் தடையாக அமைந்த எத்தனையோ சதிப்புரட்சிகளை தவிர்த்திருக்க முடியும்.

முதலில், பாகிஸ்தானிய இயக்கத்தின் முக்கிய புள்ளியான பிரதமர் குவாஜா நஸீமுத்தீன் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். புதிய நாடு ஒரு சுதந்திர நாடாக தனது சொந்தக் காலில் நிற்பதற்குத் தள்ளாடிக் கொண்டிருந்தது. முஹம்மதலி ஜின்னா காலமாகிவிட்டார். நாடு தனது முதலாவது யுத்தத்தை இந்தியாவுடன் எதிர்கொண்டிருந்தது. அதனது முதலாவது



பிரதமரான லியாகத் அலி கான் கொல்லப்பட்டார். முடிவுறாத போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வியாபித்து நாட்டின் ஸ்திரத்தன்மை சீர்குலைந்தது. காதியானிகள் முஸ்லிம்கள் அல்ல என்று பிரகடனப்படுத்துமாறு கோரிய சுன்னி முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டத்தினால் நாடு பதற்ற நிலைக்குள்ளானது. பெங்காலியை தமது மொழியாக அங்கீகரிக்கும் படி கிழக்குப் பாகிஸ்தானியர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியினால் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மேலும் அதிகரித்தன.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் தான் பிரதமர் நம்பிக்கைத் தீர்மானத்தை வென்றிருந்த போதிலும், இந்த நிலைமைகளை சரிவரக் கையாளத் தெரியாத குற்றத்தில், கவர்னர் குலாம் முஹம்மத் 1954 ஏப்ரலில் அரசாங்கத்தைக் கலைத்தார். சில வருடங்களுக்குப் பின்னர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற நாட்டின் முதலாவது இராணுவப் புரட்சியின் முதலாவது இராணுவச் சர்வாதிகாரியான இராணுவத் தளபதி ஐயூப் கான், கவர்னரின் தீர்மானத்துக்கு வெளிப்படையாகவே ஆதரவளித்தார்.

நாடு தனது முதலாவது யாப்பை வரைந்து கொண்டிருந்த வேளையிலேயே சதிப்புரட்சி நடைபெற்றது. யாப்பொன்று இல்லாதிருந்த நிலையில் பிரித்தானியக் காலனித்துவச் சட்டமான 1935 இன் இந்திய அரசுச் சட்டமே இடைக்கால யாப்பாகத் தொழிற்பட்டு வந்தது.

ஜனநாயகம் எதிர்நோக்கிய அபாயத்தை உணர்ந்த அரசியலமைப்புப் பேரவை, 1935 இன் இந்திய அரசுச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் செப்டம்பர் 1954 இல் ஆளுநரின் அதிகாரத்தைக் குறைத்தது. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று மாத்திரமே அரசாங்கத்தைக் கலைக்க முடியும் என்றவாறு சட்டம் திருத்தப்பட்டது.

இதனால் கோபமடைந்த ஆளுநர் அரசியலமைப்புப் பேரவையையே கலைத்து விட்டார். இந்தக் கலைப்புக்கு எதிராக அரசியலமைப்புப் பேரவையின் தலைவர் பாகிஸ்தான் பெடரல் நீதிமன்றில் முறையிட்டார். பாகிஸ்தானின் அத்திவாரக் கல்லையே ஆட்டம் காணச் செய்யும் வகையில், நீதிபதிகள் சபையில் ஒருவரைத் தவிர அனைவருமே கலைப்பினை ஆதரித்துத் தீர்ப்பு வழங்கினார்கள்.

பிரதம நீதியரசராக இருந்த முஹம்மத் முனீர், மக்களின் நலனே உயர்ந்த சட்டம் என்ற கோட்பாட்டில் இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தார். பாகிஸ்தான் பிரித்தானியாவின் இறைமையின் கீழ் உள்ள ஒரு பிரித்தானிய காலனித்துவ நாடே அன்றி அரசியலமைப்புப் பேரவையின் மேலாதிக்கத்தையோ மக்களின் இறைமையையோ உறுதிப்படுத்துகின்ற ஒரு குடியரசல்ல என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பழமைவாத நீதிபதிகளினால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு, பாகிஸ்தானின் ஜனநாயக அரசுகளைக் கவிழ்ப்பதற்கும் இராணுவத்தின் செயற்பாடுகளை மக்களின் நலனுக்கானது எனப் புனைவதற்கும் இராணுவத் தளபதிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கியதாக அமைந்தது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

அலன் மக்ராத்தின் பெருமளவில் அங்கீகரிக்கப்பட்ட ''பாகிஸ்தான் ஜனநாயகத்தின் அழிவு'' (the Destruction of Pakistan's Democracy'') எனும் நூலில், பாகிஸ்தான் ஜனநாயகத்தில் இருந்து இராணுவச் சர்வாதிகாரத்துக்கு மாறியதற்கான காரணம், இராணுவப் பிரிவு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து பயன்படுத்திக் கொண்டமை அல்ல. மாறாக நாட்டின் நிறைவேற்று அதிகாரிகளின் முறைகேடான, ஜனநாயகத்தைக் கொலை செய்யும் செயற்பாடுகளுக்கு நீதித்துறை அங்கீகாரம் வழங்கியமை தான் பிரதான காரணம் என்கிறார். அரசியலமைப்புப் பேரவையின் இருப்புக்கான இறைமையை மறுத்ததன் ஊடாக பாகிஸ்தான் கொண்டிருந்த யாப்பின் அடிப்படையையே பிரதம நீதியரசர் முனீர் மறுதலித்ததாக அவர் கூறுகிறார்.

சதிப் புரட்சிகளை நாட்டின் ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நீதித்துறையின் எழுச்சியாகக் கருதி சட்டத்துக்கு அடிமைப்பட்டிருந்த நாடு, ஏழு தசாப்தங்களுக்குப் பின்னர் தற்போது பரிணாமமடைந்திருக்கிறது. உயர்நீதிமன்றம் இதுவரை இரண்டு பிரதமர்களை பதவியிழக்கச் செய்து நீதித்துறையின் சுயாதீனத்தை வக்கிரத்தனமாக வெளிக்காட்டியுள்ளது. பதவி நீக்கப்பட்ட பிரதமர்களின் ஆதரவாளர்கள் இந்த நீதிபதிகளின் நடத்தைகளை நீதித்துறையின் சர்வாதிகாரம் என வர்ணித்தார்கள்.

விமர்சனங்களுக்கப்பால், பாகிஸ்தானின் நீதித்துறை நிறைவேற்றதிகாரத்தின் எச்சங்களைச் செவ்வை பார்க்கும் இடத்துக்கு வந்திருக்கிறது. இந்த ஒரே நிறுவனத்துக்குத்தான் இராணுவமும் அஞ்சுகிறது. முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷர்ரபின் ஆதிக்கத்துக்கு எதிராக நீதித்துறை உற்சாகமளிக்கும் வகையில் துணிந்து நின்றமை இதனை இன்னும் அதிகப்படுத்தியது. முஷர்ரபை பதவியில் இருந்து கவிழ்ப்பதற்கான நாடு தழுவிய இயக்கத்துக்குத் தலைமை வழங்கியதால் சர்வதேச ரீதியில் அறியப்பட்ட பிரதம நீதியரசர் இப்திகார் சௌத்ரி, உயர் நீதிமன்றத் தீர்ப்பை பொருட்படுத்தாமல் விட்டதனால் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டி பிரதமர் யூஸுஃப் ரஸா கிலானியை 2012 இல் தகுதி நீக்கினார். பாகிஸ்தானின் அப்போதைய ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு எதிரான மோசடி விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறு சுவிஸ் அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு நீதிமன்றம் கிலானியைக் கேட்டிருந்தது. கிலானி இதனைப் பொருட்படுத்தாமல் விட்டதனால் அவர் தண்டனைக்குரிய குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு அவர் பிரதமர் அல்லது (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, 5/1, Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## போராட்டங்களின் முடிவு

நாடு மீண்டும் ஐம்பது நாட்களுக்குப் பின்னால் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. அரசியல் கலவரம் காரணமாக நாடு அல்லோலகல்லோலமாய் இருந்த நிலை படிப்படியாக மாறி வருகிறது. மக்களும் தாம் வெளிக்காட்டிக் கொண்டிருந்த நாட்டின் மீதான அக்கறையை அரசியல்வாதிகள் போலவே மறக்கத் தொடங்கிவிடுவார்கள். மீண்டும் அரசியல்வாதிகளின் அராஜகம் நாட்டில் மேலெழும்.

இந்தத் தலைவிதியை இனியாவது மாற்றி புதியதொரு விதி செய்யாவிட்டால் இந்த நாட்டில் மீண்டும் அடிமைகளாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக வேண்டியது தான் விதியாக அமையப் போகிறது. நடந்து முடிந்த அரசியல் கலவரத்தின் போது நாட்டுத் தலைவர்களின் பற்று எங்கே இருக்கிறது என்பதை மக்கள் தெளிவாகக் கண்டு கொண்டார் கள். தமது அதிகாரப் போட்டியினால் நாட்டைச் சீரழித்த தலைவர்கள் மூவருக்குமே நாட்டுப் பற்றை விட தமது பதவியின் மீதான மோகம் தான் அதிகமாக இருப்பதை மக்கள் தெரிந்து கொண்டார் கள். நீதித்துறை சுயாதீனமாகத் தொழிற்படும் பாக்கியம் மட்டும் கிட்டாதிருந்தால் மீண்டும் இந்த நாடு இப்படியானதொரு நிலைக் குத் தள்ளப்படும் வாய்ப்புத் தான் அதிகமாக இருந்திருக்கும்.

இந்த நிலைமையில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்குப் போராடிய சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பணி மெச்சத் தக்கதாகும். கட்சி பேதங்கள் இன்றி நீதிக்காகவும் ஜனநாயகத் தைப் பாதுகாப்பதற்காகவும் அயராது உழைத்த இவர்களின் பணி அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமானால், இந்தப் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் நீதியான இலங்கையை வேண்டி நின்ற மக்களின் தேவையை நிவர்த்திக்கின்ற மாற்றமல்ல. நாடு முழு வதும் நீதியை மதிக்கும் மக்கள் ஒன்று திரண்டு கூட்டங்களை யும் பேரணிகளையும் நடத்தியது ரணில் விக்கிரமசிங்கவுக்கோ, மஹிந்த ராஜபக்ஷவுக்கோ, மைத்திரிபால சிரிசேனவுக்கு அதிகா ரத்தை வழங்கி அழகு பார்ப்பதற்கல்ல. இவர்கள் எவருமே நாட்டின் மீது பற்றில்லாதவர்கள் என்ற உண்மையை மக்கள் உணர்ந்த பின்னாலும் தற்போதைய இந்த மாற்றத்துடன் தமது போராட்டத்தை சுருக்கிக் கொள்வார்களாக இருந்தால் அது சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் மக்களை ஏமாற்றியதாக அமையும். இந்த நிலை மக்களை விரக்தி நிலைக்கு இட்டுச் சென்று நாட்டை மீட்பதற்கு எந்தச் சக்திகளும் முன்வராத ஒரு கையறு நிலையைத் தோற்றுவிக்கும்.

எனவே சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் அர்ப்பணிப் புடனான பணி தொடர வேண்டும். இடைக்காலத்தில் இவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகளினால் மக்கள் மத்தியில் துளிர் விட்டிருக்கின்ற நம்பிக்கையை கருகச் செய்துவிடாது இவர்கள் பாதுகாக்க வேண்டும். மக்கள் இனி அரசியல்வாதிகளை நம்பு வதற்குத் தயாராக இல்லை. அவர்கள் வழங்குகின்ற வாக்குறுதி களுக்குப் பெறுமானம் வழங்குவதற்குத் தயாராக இல்லை. அவர்கள் நம்பக் கூடியதாக இருந்தது அரசியல் யாப்பினூடான காப்பீடுதான். அதனைக் கூட மீறுகின்ற அளவுக்கு நாட்டை ஆட்சி செய்பவர்கள் வந்திருக்கிறார்கள். இதனால் மக்களின் நம்பிக்கையின் அத்திவாரமே தகர்க்கப்பட்டிருக்கிறது. முன்னொரு பொழுதும் இல்லாத அளவுக்கு மக்கள் அரசியல் யாப்பைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் இந்த யாப்பு நெருக்கடி வழி வகுத்திருக் கிறது. இருந்தாலும் சட்டவசனங்களையும் வார்த்தை ஜோடனை களையும் வைத்து மக்களைத் திசை திருப்புவதற்கான வேலை களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

இந்த நிலை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கி நீதியின் பால் மக்களைக் கட்டி இழுப்பது சிவில் அமைப் புக்களின் பொறுப்பாகும். இதற்கான நல்லதொரு அவகாசம் மக்க ளுக்கு மத்தியில் உருவாகியிருப்பதை இந்த நிறுவனங்கள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் இதுபோன்ற விடயங்களை இலகுவில் மறந்து விடக் கூடியவர்கள். ஆகவே இடை விடாத தொடர்ச்சியான முயற்சி மக்களுக்கு மத்தியில் நடக்க வேண்டும்.

சோபித தேரர் தலைமையிலான நீதியான சமுதாயத்துக்கான இயக்கம் ஒருவகையில் சிவில் சமூகத்திடையே எழுச்சியை ஏற் படுத்தியது. மாற்ற முடியாத சக்தியாகக் கட்டமைக்கப்பட்டிருந்த விம்பங்களை அது உடைத்துக் காட்டியது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்தச் சமூக எழுச்சி மங்கத் தொடங்கியதனால் இன்றைய அரசியல் கலவரம் வரை அது பாதிப்புச் செலுத்தியிருக்கிறது.

அநீதி எப்போதும் கோலோச்சுவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டே இருக்கிறது. தொடராக முயற்சிக்காத போது அநீதி வென்று விடுகிறது. ஆகவே தொடங்கப்பட்டிருக்கின்ற இந்த நீதிக்கான போராட்டம் ஓயாத அலையாகப் பரிணமிக்க வேண் டும். ஓயாத போராட்டம் தான் நிலையான வெற்றியைத் தரும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்ககோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# அரசியல் நெருக்கடி: உருவாக்கப்பட்டிருப்பதன் பின்னணி என்ன?



• சன்ஜுன லீலாரத்ன

புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் தாஸ்தோவெஸ்கி (Fyodor Dostoyevsky) தனது குற்றமும் தண்டனையும் என்னும் நாவலில் எடுத்தாளும் ஒரு கூற்று, பத்திரிகையியலில் பிரதானமாக எடுத்தாளப்படுவதுண்டு. அதாவது, பிழையான விடயங்களைச் செய்ப வர்கள் என்று நாம் கருதுபவர்களைக் கண் டிப்பது மிகவும் இலகுவானது. ஆனால் அவர்களை விளங்கிக் கொள்வது மிகவும் சவாலானது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக் கும் நெருக்கடி நிலைமைக்கு காரணமானவர் கள் என்று நமது பார்வையில் அகப்படுபவர் களை கண்டிப்பது மிகவும் இலகுவானது. அதனை எவரும் செய்யலாம். ஆனால் அவ்வாறானவர்களை விளங்கிக் கொள்வதும் அவர்களை இயக்கும் அரசியல் பின்னணி களை விளங்கிக் கொள்வதும் மிகவும் சவா லானது.



இன்று நடைபெறும் அனைத்துப் பிரச்சி னைகளுக்குமான காரணம் யார்? இப்படி யொரு கேள்வியை எழுப்பினால் அனை வரது பதிலும் தடுமாற்றமின்றி மைத்திரிபால சிறிசேன என்பதாக இருக்கும். மைத்திரி பால திடீரென்று, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை பதவி நீக்கம் செய்து, மஹிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக நியமித்தார். அதிலிருந்து ஏற்பட்ட நெருக்கடிகள் இறுதி யில் அரசாங்கமே இல்லாத நாடாக இலங் கையை மாற்றியிருந்தது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது போன்றதொரு நெருக்கடி முன்னர் எப்போதும் ஏற்பட்ட தில்லை. எனவே இந்த அனைத்து பிரச்சினை களுக்கும் வித்திட்ட சூத்திரதாரி மைத்திரி பால சிறிசேன என்பதுதான் முதல் பார்வை.

இரண்டாவது பார்வை மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகார வெறியே இதற்குக் காரணம் என்பது. இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை மேலோட்டமாகப் பார்த்தால் இந்த இரண்டு பார்வையும் சரிதான். ஆனால் அது முற்றிலும் சரியானதா?

2009 இல் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வருடம் இருக்கின்ற நிலையில், மஹிந்த தேர்தலுக்கு செல்லும் முடிவை எடுக்கின் றார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை வாக்குகளாக மாற்றிக் கொள்ளும் ஒரு உத்தியாகவே மஹிந்த அவ்வாறான தொரு முடிவுக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் பிறிதொரு விடயம் நிகழ்கிறது. அதாவது, அதுவரை மஹிந்தவின் முகாமில் முக்கிய நபராக இருந்த ஜெனரல் சரத்பொன்சேகா மஹிந்த விற்கு எதிராக களமிறக்கப்படுகின்றார். இந்தத் தேர்தலில் பொன்சேகாவை விடவும் 20 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் மஹிந்த வெற்றி பெறுகின்றார். மஹிந்த யுத்த வெற்றி யைப் பிரதான விடயமாக முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொண்டபோது, அந்த யுத்த வெற்றி வாக்குகளை இரண்டாகப் பிளக்கும் நோக்கில்தான் பொன்சேகா களமிறக்கப்பட் டார். ஆனால் அது எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

2010 இல் ஒரு வருடம் முன் கூட்டியே தேர்தலை வைத்தது போன்று, இரண்டு வருடங்கள் இருக்கின்ற நிலையில் 2015 இல் [illegible] நிகழ்ந்தது போன்றதொரு நிகழ்வே மீண்டும் நிகழ்கின்றது. ஆனால் இம்முறை மஹிந்த வின் முகாமில் இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான மைத்திரிபால சிறிசேன மஹிந்தவிற்கு எதிராகக் களமிறக்கப்படுகின்றார். மஹிந்தவிற்கு எதிராக அனைத்துத் தரப்பின ருமே ஓரணியில் நிற்கின்றனர். 5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் மைத்திரி வெற்றி பெறுகின்றார். இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் வேறு. அதனை வெளிக்கொணரவே மேற்படி விடயங்களை இங்கு குறிப்பிட நேர்ந்தது.

மேற்படி இரண்டு தேர்தல்களிலும் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரம சிங்க முன்னிறுத்தப்படவில்லை. ஏன்? ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து சிங்கள மக்களின் பெரும்பான்மையான செல்வாக்கை ரணிலால் பெற முடியாது. இதன் காரணமாகவே இரண்டு சந்தர்ப்பங்க ளிலும் பொது வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட னர். ஆனால் மைத்திரிபாலவின் வெற்றியை பயன்படுத்தி, ரணில் தன்னை பாராளுமன்றத் தில் ஒரு வலுவான பிரதமராக நிலைநிறுத் திக் கொள்வதில் வெற்றிபெறுகின்றார்.

கடந்த மூன்று வருடங்களாக உத்தியோக பூர்வமற்ற ஒரு ஜனாதிபதியாகவே ரணில் செயற்பட்டுக் கொண்டிருந்தார். இவ்வாறான தொரு பின்புலத்தில்தான் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த தலைமை யிலான பொதுஜன பெரமுன மைத்திரி-ரணில் இரண்டு தரப்பினரையும் தோற்கடித் தது. இது கூட்டரசாங்கத்தின் தோல்வியை பறைசாற்றியது, முக்கியமாக ரணிலின் தோல்வியை பதிவுசெய்தது. இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் தேர்தல் களில் பெரும் வெற்றியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்பதும் வெள்ளிடைமலையானது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை வேண்டுமென்றே தோற்றுவிக்கப்பட்டிருக் கிறது. இந்த நெருக்கடி நிலைமையை தோற்றுவித்திருப்பது மைத்திரியின் சில அதிரடியான நடவடிக்கைகள்தான் என்றா லும் கூட, மைத்திரி இவற்றையெல்லாம் தனது சுயபுத்தியில்தான் செய்திருப்பார் என்பதை எவ்வாறு நம்பலாம்? அவ்வாறு சிந்திப்பது நிலைமைகளை சரியாக விளங்கிக் கொள்ள உதவுமா?

இது ரணில் விக்கிரமசிங்கவிற்கான நான்காவது ஆடுகளம். முதலாவது களம் 2005 இல் கிடைத்தது. அன்று ரணில் ஆட்சி யைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் பிரகாசமாக இருந்தன. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறியதன் விளைவாக தமிழ் மக்களின் ஆதரவின்றி, ரணில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வி யடைந்தார். 2010 இன் ஆடுகளத்தில் ரணில் ஒரு அவதானிப்பாளராக தன்னைச் சுருக்கிக் கொண்டார். 2015 இல் தன்னை ஒரு வலுவான பிரதமராக நிறுவிக் கொண்டார். தற்போது அந்த பிரதமர் பதவியில் அவர் இருக்க முடியுமா? அல்லது இல்லையா? என்னும் புதியதொரு நெருக்கடி நிலை வலிந்து தோற்றுவிக்கப்பட்டது. உண்மை யில் இந்த நெருக்கடி நிலையின் உண்மை யான இலக்கு ரணிலை அகற்றுவதா அல்லது ரணிலைப் பலப்படுத்துவதா?

மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கை கடந்த மூன்று வருட ஆட்சியால் சிதைக்க முடியவில்லை. இவ்வாறானதொரு நிலை யில்தான், மஹிந்த அதிகார வெறியால், அரசியல் யாப்பிற்கு முரணாக பதவியில் இருக்கின்றார் என்றவாறான சூழல் ஏற்படுத் தப்பட்டது. அதற்கான வாய்ப்பை மஹிந் தவே கொடுத்திருந்தார். மஹிந்தவிற்கு நெருக்கமானவர்களே மஹிந்த பொறுமை யாக இருந்திருந்தால், அடுத்த தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கலாம் அவசரப்பட்டு விட்டார் என்று விமர்சிக்கும் அளவிற்கு நிலைமைகள் மாறியிருந்தன.

இந்த விடயங்களை தொகுத்து நோக்கி னால், மைத்திரியின் ஊடாக மஹிந்தவிற்கு எதிராக மீண்டுமொரு களம் திறக்கப்பட்டி ருக்கிறதா? தற்போதுள்ள நிலைமையில் ஒரு தேர்தலை எதிர்கொண்டால் மஹிந்தவின் வாக்கு வங்கியில் ஒரு சரிவு ஏற்படலாம் என்றவாறான கணிப்பும் உண்டு.

கடந்த மூன்று வருடகால ஆட்சியால் சாதிக்க முடியாததை, தற்போது உருவாக்கப் பட்டிருக்கும் நெருக்கடியை கொண்டு, சாதிப்பதற்கான ஒரு திட்டம் இதற்குப் பின் னால் இருக்கிறதா என்னும் கேள்வியை மிக இலகுவாக நிராகரிக்க முடியுமா? மைத்திரி இதில் தெரிந்தும் ஈடுபடலாம், தெரியாமலும் ஈடுபடலாம். வெளித்தோற்றத்தில் மைத்திரி யின் நடவடிக்கைகள் முதிர்ச்சியற்ற, கோமா ளித்தனமான ஒரு செயலாகவே அவரது எதிரிகளால் பார்க்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அதன் ஆழ அகலங்களோடு பார்க்க முற்படுவது தான் சரியானது. அவ்வாறு சிந்தித்தால், தற்போது வலிந்து திணிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் அதிகார நெருக்கடியின் உண்மையான இலக்கு பிறிதொன்றாகவே இருக்கும். பொதுவாக அரசியல் இலக்கு களை திட்டமிடுகின்ற போது, ஒன்று பிழைத் தால் இன்னொன்று என்னும் அடிப்படையில் தான் திட்டமிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளது ஆனால்....

• மாலிக் பத்ரி

மைத்ரியின் ஒக்டோபர் புரட்சி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் முடிவுக்கு வந்துள்ளது. அரசியல்வாதிகள் எவ்வளவு தூரம் வீறாப்புப் பேசக் கூடியவர்கள் என்பதை இந்நாட்டின் முதல் பிரஜை நிரூபித்துள்ளார்.

முன்வைத்த காலை பின்னால் நகர்த்த மாட்டேன், 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டுத் தந்தாலும் ரணிலைப் பிரதமராக்க மாட்டேன், ரணில் மீண்டும் பிரதமரானால் ஒரு மணித்தியாலமேனும் எனது பதவியில் நீடிக்க மாட்டேன், ஏற்கனவே 113 ஆசனங்களை நாம் பெற்று விட்டோம்... இப்படி பொரி கிளப்பியவர்தான் சிறிசேன.

நாட்டின் அரசியலமைப்பை மீறிச் செயற்படும் உரிமை ஜனாதிபதிக்கும் இல்லை என்பதனை உச்சநீதிமன்றத் தீர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது. சட்டத்தின் ஆட்சி நீதிமன்ற ஆணையால் நிலை நிறுத்தப்பட்டிருப்பது ஜனநாயகம் குறித்த மக்கள் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது. உச்சநீதிமன்றத் தீர்ப்பு 50 நாள் தொடர்ந்த அரசியல் சூறாவளியை அமைதிப்படுத்தியுள்ளது. ஒரு வழியாக ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளது. ஆனால், அதனைத் தொடர்ந்தும் தக்க வைக்கும் சக்தி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அவரது ஐ.தே.க.வுக்கும் உள்ளதா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

மைத்ரி குறிப்பிட்டது போன்று ஐ.தே.க.வுக்குள்ளேயே இல்லாத ஜனநாயகத்தை நாட்டில் தக்கவைப்பது ரணிலுக்கு அவ்வளவு எளிதல்ல. குறிப்பாக, ஐ.தே.க.வின் தலைமைத்துவம் குறித்த கட்சி உயர் பீடத்தின் விடாப்பிடியான நிலைப்பாடு ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கு முரணானது.

ஜனநாயக வெற்றிக் களிப்பில் கலந்து கொண்ட விக்ரமசிங்க, நாட்டு மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவேன் என்று முழங்கினார். ரணில் இலங்கை மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்ட ஒரு தலைவரா? வீரவன்ச சொல்வது போன்று அவர் இலங்கையைப் பீடித்துள்ள ஒரு புற்றுநோயா?

ரணிலின் வெளிநாட்டுக் கொள்கை குறித்து நாட்டுப் பற்றுள்ள உண்மையான ஜனநாயக சக்திகளிடையே நிலவும் சந்தேகத்தைக் களையும் பொறுப்பு ரணிலுக்கு உள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் முதற் பணி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது தான். இரண்டே கால் கோடி மக்களின் தலைவிதியை ஒற்றை பூதத்தின் கையில் ஒப்படைத்து விட்டு விழி பிதுங்கி நிற்கும் மக்களுக்கு முன்னால் உண்மையான ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கு மைத்ரிக்கோ ரணிலுக்கோ என்ன அருகதை உள்ளது?


100 நாள் அரசியல் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு மூன்றரை ஆண்டுகள் கடந்தும் கிடப்பில் போடப்பட்டிருப்பது ரணிலின் உண்மையான ஜனநாயக முகத்தைத் தோலுரிக்கின்றது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, கல்வித் துறையிலுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பது, வறுமையை ஒழிப்பது, முன்னாள் ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகளை விசாரணை செய்வது என்ற ரணிலின் வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தமக்குப் பின்னால் சர்வதேச நாடுகள் உள்ளன எனவும் அவர்களின் ஆதரவு இல்லாமல் நாட்டை முன்னெடுக்க முடியாது என்றும் தொடர்ச்சியாகக் கூறிவரும் ரணில், சிங்கப்பூர் மற்றும் இந்தியாவுடன் செய்துகொண்ட, செய்து கொள்ள எத்தனிக்கும் வணிகத் துறை உடன்படிக்கைகள் எந்தளவு ஜனநாயகத் தன்மை வாய்ந்தது?

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், பிராந்தியத்தின் புவி அரசியல் பொறிக்குள் சிக்கிய ஒன்றாகவே தோன்றுகிறது. இந்தியா இன்னொரு புறம் சிங்கப்பூர் மற்றொரு புறம் அமெரிக்கா என்று பிராந்திய ஆடுகளத்திற்கு இலங்கையைப் பலியாக்கும் அரசியலைத்தான் இவர்கள் கையாள்கிறார்கள்.

அமைச்சரவை தேசிய அரசாங்கமாக இல்லாத நிலையில், வெறும் 30 பேராகச் சுருங்க வேண்டும் என அரசியலமைப்பு நிபுணர்கள் வாதிடுகின்றனர். இந்நிலையில், அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்வதில் ஐ.தே.க.வுக்குள்ளேயே -தொடக்கத்தில் இல்லாவிடினும்- காலப் போக்கில் முரண்பாடுகள் எழ வாய்ப்புண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டணியினரின் வாய்வழி வாக்குறுதியை நம்பியே ரணிலின் அரசாங்கம் பதவியேற்றுள்ளது. கூட்டணிக்கும் ரணிலுக்கும் இடையில் எழுத்து மூல ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்று இரு தரப்பும் கூறுகின்றன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டணி சில முக்கிய நிபந்தனைகளை முன்னிறுத்தியே ரணிலுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளது. அதேவேளை, ஐ.தே.க. அரசாங்கத்தின் ஒரு பகுதியாக தாம் இருக்க மாட்டோம் என்று மைத்ரிக்கு எழுதிய கடிதத்தில் சம்பந்தனார் கூறியுள்ளார்.



தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர்களின் காணிகளை மீளப் பெறல் என்பன தமிழ்த் தேசியக் கூட்டணி தொடக்கமாக முன்வைத்துள்ள நிபந்தனைகளாகும். இவற்றை நிறைவேற்றுவதற்கு ரணில் தாமதிக்கும் பட்சத்தில் சம்பந்தனாரின் கூட்டம் தமது ஆதரவை விளக்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு பெரிதும் உள்ளது. இது ரணிலின் ஆட்சியை மீளவும் ஒரு முறை ஆட்டங் காணச் செய்யலாம்.


அதேபோன்று நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்செய்வதற்கு ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் தேவையான முன்னெடுப்புக்களில் கவனம் குவிக்காவிடின் பாரிய மக்கள் அதிருப்தி அலைகள் எழலாம். அதுவே தேர்தல் ஒன்றுக்கான நியாயமாகக் கொள்ளப் படலாம்.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது சமூகம் சார்பாக பல முக்கிய நிபந்தனைகளை முன்வைத்து பொறுப்புடன் செயல்படுகின்றது. தமது வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கே அதற்கு ரணில் அரசாங்கம் தேவைப்படுகின்றது. முஸ்லிம் கட்சிகளோ எந்தத் தெளிவான அரசியல் நிலைப்பாடுகளுமின்றி மஹிந்தவிற்கு எதிரான சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டமைப் பொன்றை உருவாக்க முனைந்தால் அது முற்றிலும் அபத்தமான ஒரு முயற்சியாகும். அதில் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தப் புண்ணியமும் ஆகப் போவதில்லை.

இதற்கிடையில் 50 நாட்கள் சுற்றிச் சுற்றி அதே இடத்திற்கு வந்து சேர்ந்த







மைத்ரி, இலங்கையின் இராணுவத்தை தம் வசம் இழுக்கும் வியூகங்களை வகுத்து வருகின்றார். போருக்குப் பிந்திய இலங்கை இராணுவம் மிகுந்த சொகுசான ஒரு வலயத்தில் வாழ்ந்து வருகிறது. அது பெற்றுள்ள சலுகைகளையும் சொகுசுகளையும் இழப்பதற்கு அது ஒருபோதும் தயாரில்லை. இம்மனோ நிலையை ஆட்சியாளர்கள் தமது வசதிக்கேற்ப கையாளும் அரசியல் சூழலை உருவாக்கிக் கொள்ளலாம். இது ரணில் அரசாங்கம் எதிர்கொள்ளும் இன்னொரு சவாலாகக் கூட இருக்கலாம்.

டொலருக்கெதிரான இலங்கை நாணயப் பெறுமதி வீழ்ச்சியை சீர்செய்வதற்கு ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது. நாட்டின் பொருளாதாரம் கடந்த மூன்றரை ஆண்டுகளில் எதிர்பார்த்த வளர்ச்சியினை எட்டவில்லை. மறுதலையாக படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகிறது.

இவற்றையெல்லாம் இந்த அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பது சிக்கலான கேள்வியே. ஜனநாயகம் காப்பற்றப்பட்டது என்பது உண்மையே. ஆனால், அதனைத் தக்கவைக்கும் திராணி அரசாங்கத்திற்குள்ளதா என்பதே முக்கிய கேள்வியாகின்றது.

## சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டணி

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அவசரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் முன்மொழிந்த சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டணி தற்போது செயல்பட ஆரம்பித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அடுத்த வாரம் சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டம் நடைபெறும் எனவும் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து அதில் ஆராயப்படும் எனவும் கூறியுள்ளார்.

மேம்போக்காக நோக்கும்போது இலங்கையில் சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டணி வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்குத் தேவையான ஒன்றுதான். ஆனால், தமிழ் தரப்பினர் முஸ்லிம் தரப்பினரை பரஸ்பர சமத்துவத்தோடும் கௌரவத்தோடும் அணுக வேண்டியுள்ளது. இரு சமூகங்களின் பிரச்சினைகளையும் நீதியாக அணுக வேண்டியுள்ளது.

மஹிந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கெதிரான இனவாத அலைகளைத் தூண்டியே அரசியல் வியாபாரம் நடத்துகின்றது. இன்னொரு புறம் தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழர்கள் கோரும் அதிகாரப் பரவலாக்கத்திற்கு மஹிந்த அணி எதிராக நிற்கின்றது. இந்த இரண்டு புள்ளிகளுமே தமிழ்-முஸ்லிம் கட்சிகளை ஒன்றுபடுத்தும் நியாயங்களாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வரும் இணைந்த வடகிழக்கு மற்றும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கம் என்பன முஸ்லிம் அபிலாசைகளுக்கு எதிரானவை. மஹிந்தவை தோற்கடிக்கும் அவசரத்திலும் ரணிலைப் பாதுகாக்கும் முனைப்பிலும் உருவாக்கப்படும் சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டு எந்தளவுக்கு முஸ்லிம் அபிலாஷைகளை உள்ளீர்க்கும் என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும்.

ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது சமூகம் சார்பாக பல முக்கிய நிபந்தனைகளை முன்வைத்து பொறுப்புடன் செயல்படுகின்றது. தமது வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கே அதற்கு ரணில் அரசாங்கம் தேவைப்படுகின்றது. முஸ்லிம் கட்சிகளோ எந்தத் தெளிவான அரசியல் நிலைப்பாடுகளுமின்றி மஹிந்தவிற்கு எதிரான சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டமைப் பொன்றை உருவாக்க முனைந்தால் அது முற்றிலும் அபத்தமான ஒரு முயற்சியாகும். அதில் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தப் புண்ணியமும் ஆகப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டணி அதன் அரசியல் இலக்குகளை அடையும் பாதையில் இழுபட்டுச் சென்று இறுதியில் அடையாளத்தையும் அபிலாஷைகளையும் தொலைத்த நிலைக்கே முஸ்லிம் கட்சிகள் வந்து சேரும்.

சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்தவரை, குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் அஷ்ரபுக்குப் பிந்திய நகர்வுகளில் அபிவிருத்தி அரசியலையே முன்னிலைப்படுத்தின. அடையாள அரசியலின் அடிப்படை இலக்காக இருந்த ''முஸ்லிம்களின் உரிமைகளைப் பெறல்'' என்பதை அவை முற்றாக மறந்து போயின. முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள காணிப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், நிருவாகத் துறையில் முஸ்லிம்களின் பங்கேற்பு தொடர்பான பிரச்சினைகள், பிரதேச ரீதியான அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் என அடிப்படைப் பிரச்சினைகள் அப்படியே இருக்க, வெறுமனே சில வீதிகள் போடுவதும், தமது குடும்பத்திற்கு தொழில் கொடுப்பதும் என உரிமை அரசியலிலிருந்து சலுகைகளுக்காக இயங்கும் அரசியலாக மாறி விட்டது.

கிழக்கு மாகாணத்தில் 50,000 ஏக்கர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலம் தமிழர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாக மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கூறுகிறார். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து 11,000 கோடி ரூபா மோசடியோடு தொடர்பான பிரதமரைக் காப்பாற்றும் முனைப்பு முஸ்லிம் கட்சிகளுக்கு எப்படி வந்தது?

எதிர்வரும் ஒன்றரை ஆண்டுகளுக்கு ரணில் தலைமையிலான அரசாங்கம் தாக்குப் பிடிக்குமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்குமா? எதிர்க்கட்சி ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் தென்னிலங்கை இனவாதிகளின் எதிர்வினை எப்படியிருக்கும்? இராணுவத்தை ஆசுவாசப்படுத்தும் மைத்ரியின் வியூகங்கள் எவ்வாறு அமையும்? இவற்றுக்குள் முஸ்லிம் கட்சிகள் அடையப் போவது என்ன?

இந்தக் கேள்விகள் எதிர்வரும் காலங்களைப் பொறுத்தவரை முக்கியமானவை. ரணிலை றவூப் ஹக்கீம் ஆதரிப்பது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நலன்கள் சார்ந்த நிலைப்பாடா அல்லது முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் சார்ந்த நிலைப்பாடா? இன்று மாவை சேனாதிராஜா பேசும் சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டமைப்பு அடையப் போகும் இலக்கு என்ன? வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு கால் நூற்றாண்டு கடந்த நிலையிலும் அவர்களை மீளக் குடியேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நடவடிக்கை எடுத்தது? நடவடிக்கை எடுப்பது எப்படிப் போயினும் அதற்குக் குறுக்கே நிற்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் பலமுறை குற்றம் சாட்டியுள்ளார். இதே தமிழ்த் தேசியக் கூட்டணியோடு ரிஷாதின் கட்சி எப்படி இணைந்து செயலாற்றப் போகின்றது?

வடக்குக் கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம் காணிகளை மீட்டெடுப்பதில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் விதிவிலக்கின்றி அனைவருமே தோற்றுப் போனார்கள். ரணிலுடன் பேச்சுவார்த்தை நடத்தி இவற்றை மீட்டெடுப்பதற்கான திராணி அவர்களுக்கு உள்ளதா? எந்த அரசியல் குறிக்கோளும் இல்லாமல் கூட்டணி உருவாக்குவதும் ஜனநாயகம் குறித்து குதூகலிப்பதும் நமது உண்மையான சமூக விடுதலைக்கு வழிவகுக்குமா?

ரணில் யாரையும் கணக்கில் கொள்ளாத தனது சொந்த அஜன்டாவுடன் செயல்படும் ஒரு தலைவர். தேசியத் தன்மை வாய்ந்த உள்ளூர் மக்களின் தேவை அறிந்த ஒரு தலைவரல்ல அவர். பிராந்திய புவி அரசியலின் ஆடுகள முகவர். தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு அவர் மூலம் ஆக வேண்டிய ஒரு அஜன்டா உள்ளது. முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளுக்கு ஏதேனும் உருப்படியான அஜன்டா உள்ளதா?

குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் வாய் வீரத்தையும் அறிக்கைகளை விட்டுத் தள்ளும் அரசியலையும் தவிர நமது கட்சித் தலைவர்களுக்கு வேறென்ன யோக்கியதை உள்ளது? முஸ்லிம் அரசியல் கட்சிகள் எடுக்கும் எந்த முடிவும் முஸ்லிம் சமூக நலனை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

நல்லாட்சி மற்றும் தேசிய நலன் என்ற பெரு விருட்சத்தின் கீழே முஸ்லிம் சிறுபான்மை எனும் கொடிகள் அகற்றப்படுவதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. இந்த உண்மையை நமது அரசியல் தலைவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். ஏனெனில், தேர்தல் ஒன்று நெருங்கி வருவதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுவது நலம்



இஸ்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## முன்மாதிரிகளைப் படிப்பினையாகக் கொள்வோம்

தேசிய நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை தொடர்பில் பேசப்பட்டு வருகின்ற இக்காலப்பகுதியில் அதற்காக வேண்டி சிறந்த முன்மாதிரியை வழங்கிய பௌத்தப் பிக்கு ஒருவரது மரணச் சடங்கில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் கடந்த தினம் எனக்குக் கிடைத்தது. அவர் பேருவலை பிரதேசத்திலுள்ள கந்தே விகாரையின் விகாராதிபதியாகக் கடமையாற்றிய படுவன்ஹேனே புத்தரக்கித தேரர் ஆவார். இவர் பௌத்த சமயத்திற்காக வேண்டியும் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவதற்காக வேண்டியும் நல்லிணக்கத்திற்காக வேண்டியும் அரும் பாடுபட்டவராவார்.

பேருவலையிலுள்ள மிகப் பழமை வாய்ந்த கந்தே விகாரையுடன் இப்பகுதி முஸ்லிம் மக்களுக்கு சிறந்தொரு உறவுள்ளது. எனது தந்தையாருக்கும் குறித்த தேருக்கும் இடையில் மிகச் சிறந்த நட்பு காணப்பட்டது. நான் இந்த விகாரைக்கு வரும்போது "உமது தந்தை அடிக்கடி இங்கு வருவார். ஆனால் நீங்கள் இங்கு வருவது குறைவு" என அவர் குறிப்பிடுவார். இதிலிருந்து விளங்குவது என்னவெனில் முன்னைய காலத்தில் முஸ்லிம்களுக்கும் இந்த விகாரைக்கும் இடையில் நல்லதொரு தொடர்பு காணப்பட்டு வந்துள்ளது என்பதாகும்.

இது மாத்திரமல்லாமல் தர்காநகரைச் சேர்ந்த மர்ஹூம் நிஸாம் என்பவரே கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இந்தத் தேருக்கு உணவு, தேனீர் போன்றவற்றை தயாரித்துக் கொடுத்திருக்கிறார். எனக்கு நினைவிருக்கிறது நான் ஒரு முறை புத்தரக்கித தேரரை பார்வையிடச் சென்ற போது நிஸாம் அவர்கள் விகாரைக்குள் சத்தமாக சலாம் சொல்லிக் கொண்டு எனக்குத் தேனீர் கொண்டு வந்து தருவார். அவ்வேளையில் புத்தரக்கித தேரர் இதைப் பார்த்துப் புன்னகைப்பார். விகாரைக்குள் இவர் சத்தமாக எனக்கு சலாம் சொல்லும் போது அந்தத் தேரர் இதனைப் புன்னகையோடே நோக்கினார்.

எனவே இந்தப் பல்வகைமையை அவர் விளங்கியிருந்தார். அதற்கு மதிப்பளித்தார். ஒரு நாட்டை நல்லிணக்கத்தால் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் பல்வகைமையை மதிக்க வேண்டும். அதனை புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பண்பு குறித்த தேரரிடம் காணப்பட்டது.

முஸ்லிம் ஒருவரை தனது விகாரையின் சமயற்காரராக நியமித்ததன் மூலம் அவர் எந்தளவுக்கு முஸ்லிம்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தார் என்பது புலப்படுகிறது. இன்றும் கூட கந்தே விகாரைக்கு தேவையான உணவுப் பொருட்கள், அரிசி உள்ளிட்ட பொருட்களை தர்காநகரிலுள்ள கடையொன்றிலிருந்தே கொள்வனவு செய்கிறார்கள். அதிக பிரச்சினைகள் ஏற்பட்ட காலப்பகுதிகள் இருந்தும் இதில் வேறுபாடுகளோ வித்தியாசங்களோ ஏற்படவில்லை.

இதுவே முக்கியமானது. இப்படியொரு பிணைப்பு பேருவலை முஸ்லிம்களுக்கும் கந்தே விகாரைக்கும் இடையில் காணப்பட்டது. எனது தாயார் ஒரு முறை என்னிடம் கூறிய விடயமொன்று நினைவுக்கு வருகிறது. எனது தாயாரின் தந்தையின் தந்தை அதாவது எனது பூட்டனுக்கும் மாலேவன விகாரையின் தேருக்கும் இடையில் சிறந்த உறவு காணப்பட்டுள்ளது. மாலேவன ஞானீஸ்ஸர தேருக்கு முன்பு மாலேவன பஞ்சாசேகர என்னும் தேரர் ஒருவர் இருந்தார். எனது பூட்டனுக்கு அவரோடு நெருங்கிய உறவுகள் காணப்பட்டு வந்துள்ளது. அதுபோன்று எனது தாயாரின் தந்தைக்கு மாலேவன ஞானீஸ்ஸர தேருடன் நல்ல உறவு காணப்பட்டு வந்துள்ளது.

மாலேவன ஞானீஸ்ஸர தேரரின் காலத்தில் பேருவலை சீனங்கோட்டைக்கு பக்கத்திலுள்ள சைலபிம்பாராம விகாரையின் தங்கப் பேழைக்கு எனது பாட்டன் உள்ளிட்ட சீனங்கோட்டை தனவந்தர்கள் பெறுமதியான மாணிக்கக் கற்களை நன்கொடையாக கொடுத்த நிகழ்வையும் என்தாயார் எனக்கு ஞாபகப்படுத்தியுள்ளார். இது எமக்கு மத்தியிலான நெருக்கத்தையும் ஒற்றுமையையும் பறைசாற்றிய தருணம். மக்கொனை இளம் பௌத்த மத்தியநிலையத்தின் தலைமை தேரர் மக்கொனை பள்ளிவாசலில் கஞ்சி காய்ப்பதற்கு இடமில்லாமல் போன போது தனது விகாரையின் ஒரு பகுதியை அதற்காக வேண்டி கொடுத்து உதவியிருக்கிறார். இவையனைத்து நிகழ்வுகளும் எமக்கு மத்தியிலான பிணைப்பையே எடுத்துக் காட்டுகின்றன.

இன்று ஐக்கியம், சகவாழ்வு குறித்துப் பேசுபவர்கள் எங்கும் செல்ல வேண்டியதில்லை எமது வரலாற்றை மீள ஆராய்ந்து பார்த்தால் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. பௌத்த சமயத்தின் உள்ளர்த்தத்தை சிறந்த முறையில் விளங்கியமையினாலேயே இந்தத் தேரர்கள் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்காக வேண்டி பாடுபட்டுள்ளார்கள். 500 தேரர்களுக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றிய புத்தரக்கித தேரரின் இறுதிச் சடங்கில் முஸ்லிம்கள் சார்பில் உரையாற்றும் வாய்ப்பினை குறித்த விகாரையின் நிர்வாக சபை எனக்கு வழங்கியது. இதன்போது நான் 'புத்தரக்கித தேரரை பார்வையிடுவதற்கு சகல கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் வந்திருக்கிறார்கள், எனினும் அவர் எந்தவொரு கட்சிக்கும் கூஜா தூக்கவில்லை. அடிவருடியாக செயற்படவில்லை' என்றேன்.

எனவே நாம் எந்த இனத்தை சேர்ந்தவராயினும் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள எமக்கு நிறைய விடயங்கள் உள்ளன. இவரது வாழ்க்கைப் பாடங்களை கற்று எமது மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாக கொண்டு ஒருவரை ஒருவர் மதித்து வாழக்கூடிய நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் எமக்கு முன்னால் உள்ளது.

# முஸ்லிம் அரசியலும் சாதிக்குமா?



• அருவியெம்



ஒக்டோபர் 26 ஆம் திகதி கிடைத்த பிரதமர் பதவியை, தன்னுடைய முழுப் பலத்தையும் பயன்படுத்தி தக்கவைத்துக் கொள்வதற்காக மஹிந்த ராஜபக்ஷ முயற்சி செய்திருக்கிறார். ஆனால், அனைத்து முயற்சிகளும் படு தோல்வியுற்றதும் அப்பதவியை டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி இராஜினாமா செய்தார்.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மீது தனது வெறுப்பையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்ததிலிருந்து, அயராது உழைத்து இறுதியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனது பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்டிய மஹிந்தவை அழைத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன பிரதமர் பதவியைக் கொடுத்தார். அப்பதவியின் மூலம் மீண்டும் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த அதிகார ஆசையை 50 நாட்களில் அவர் மீண்டும் பிடித்து வைத்திருந்த செல்வாக்கை இழக்கும்படிச் செய்தது சமகால அரசியல்.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தத் தொடர் தோல்விக்கு சிறுபான்மையினர் பெரும் பங்கினை ஆற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. பிரதானமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றோடு சில சிறிய கட்சிகளும் பங்காற்றியுள்ளதாக பரவலாகப் பேசப்படுகின்றது. இவற்றில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரிய பங்காற்றியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஏனெனில், இக்கால கட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை அழைத்துப் பேசிய மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக சில நிபந்தனைகளை விதித்து எழுத்து மூலமான உறுதியைக் கேட்டு இருக்கிறார் சம்பந்தன். அவரின் கோரிக்கையை வழங்க மறுத்த மஹிந்த ராஜபக்ஷ கோபத்துடன் வெளியேறிச் சென்றுள்ளார்.

இவ்வாறு கொள்கைத் தெளிவோடும், சமூக சிந்தனையோடும், பிரதிநிதித்துவ அரசியல் மூலம் தன்னாலான அனைத்து விடயங்களிலும் சமூக விழுமியங்களை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அயராது செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

### முஸ்லிம் அரசியல்

ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அரசியல் யாப்பை மதித்து மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாடுபட்டது. அதே நிலைப்பாட்டோடு தான் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் செயற்பட்டன.

இங்கு முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காகவும், அவர்களின் எழுச்சிக்காகவும் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள்? பிரதிநிதித்துவ அரசியலில் இம்முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?


நாட்டில் முஸ்லிம்களுக்கு எந்தத் தேவையும் இல்லையா? இம்மக்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், வடமாகாண மக்களின் வாழ்வியல் பிரச்சினை, கிழக்கு முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை என இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இம்முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் தெரியாதா?

ஏனெனில், இந்த முஸ்லிம் கட்சிகள் உட்பட சிறுபான்மைக் கட்சிகள் ரணிலுக்கான ஆதரவை கொடுக்காமல் இருந்திருந்தால், ரணிலை தோற்கடித்திருக்க முடிந்திருக்கும் என்று நம்பினார் மஹிந்த ராஜபக்ஷ. எல்லாவற்றையும் தங்கள் ஆதரவினால் சிதறடிக்கச் செய்துவிட்டார்கள் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

எனவே, இங்கு உண்மையில் என்ன நடந்தது என்றால், 103 ஆசனங்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியை கூட்டமைப்பு தன்வசம் வைத்திருந்தது. கூட்டமைப்பின் கருத்துக்களுக்கு இணங்கவில்லை என்றால், ஐக்கிய தேசியக் கட்சி எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கக் கூடும்.

பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் கருவியை கூட்டமைப்பே இப்போது வைத்திருக்கிறது. அப்படியென்றால், ஜனநாயகத்தைப் பாதுப்பதற்காகப் போராடிய ஏனைய சிறிய கட்சிகளின் நிலை என்ன? விஷேடமாக முஸ்லிம் கட்சிகளின் பங்களிப்பு என்ன? இதில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு என்ன? முஸ்லிம் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் முஸ்லிம் சமூகம் சார்பாக தங்களது ஆதரவை வழங்கிய புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் என்ன நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்கள்?

இவற்றில் எதுவுமில்லையென்றால் பிரதிநிதித்துவ அரசியலில் இவர்களின் வகிபாகம் என்ன? குறைந்தது, அளுத்கமையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி குறித்துப் பேசினார்களா? அல்லது திகன மக்களுக்கான நஷ்டஈடு





பற்றி ஒப்பந்தம் செய்தார்களா? இவை எதுவும் இல்லாமல் ஆதரவு வழங்குவதிலுள்ள பிரதிநிதித்துவ அரசியலின் நோக்கம் என்ன?

### சிவில் சமூகப் பங்களிப்பும் முஸ்லிம் அரசியலும்

எனவே, இவர்களின் நிலைப்பாடு குறித்து சிவில் சமூக அமைப்புக்கள் என்ன பங்களிப்பை மேற்கொள்ளப் போகிறது? அதாவது, "தற்போது அரசியலில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களும் முஸ்லிம் மக்களும்" என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்குகளை நடாத்தி மக்களுக்கு கருத்துக்களை பகிர்வதா?

முஸ்லிம்களுக்கு இப்போதுள்ள சாத்தியமான வழியாகத் தெரிவது பிரதிநிதித்துவ ஜனநாயக வழிமுறைதான். இந்த வழிமுறையில் முஸ்லிம்கள் தமது பேரம் பேசும் சக்தியை உச்சமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பேரம் பேசும் அரசியலை முன்னெடுப்பதற்காக அல்ல, அதன் மூலம் முஸ்லிம்களின் நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக.

அவ்வாறு சிந்திக்குமாறு முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீது முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் முழுமையான அழுத்தத்தைப் பிரயோகித்து அவர்களை சரியான வழியில் செலுத்த வேண்டும் என்பதே இப்போதைய பாடம் எடுத்துக் காட்டுக்காட்டுகிறது.

2015 ஆட்சி மாற்றத்தின் போது சோபித தேரர் தலைமையிலான சிவில் அமைப்புக்களின் தலையீட்டினால்தான் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அவ்வாறு முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

சிவில் சமூக செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து சீராக இயங்கும் போதுதான், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம். இல்லையாயின், மக்கள் பிரதிநிதிகள் தனது செயற்பாடுகளை தனது இஷ்டம்போல் முன்னெடுப்பார்கள். இங்கு, நீதி, ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளோடு சேர்ந்து குரல் கொடுத்த சிவில் அமைப்புக்களின் நிலை என்ன? இவ்வாறு பாடுபட்ட சிவில் அமைப்புக்களின் செயற்பாடுகள் யாவும் அர்த்தமற்றதாகிப் போய்விடுமா?

இதன் பிரதிபலனாக பிரதான முஸ்லிம் சிவில் அமைப்பான தேசிய ஷூறா சபை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நாம் பாடுபட்டோம் எனத் தெரிவித்துள்ளது.

மேலும், கூட்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் போது, தங்களது அமைச்சரவைத் தெரிவானது, அரசியல் நன்மைகளுக்காக விட்டுக் கொடுத்து மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாக அல்லாமல், தேசத்தின் நலன் கருதி, தூரநோக்குடனும் விவேகத்துடனும் மேற்கொள்ளப்படும் ஒரு முன்னெடுப்பாக இருக்கும் என நம்புவதாக தெரிவித்திருக்கின்றது.

எனவே, மக்களது சமூக பொறுப்புடைமையும் சிறப்பான சேவை வழங்கலில் ஒரு அங்கம் வகிக்கிறது. உரிய கண்காணிப்பை மேற்கொள்ளவும் அது தொடர்பில் பின்னூட்டல்களை செய்யவும் மக்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் சரிவரச் செயற்பட வேண்டும்.

அதே போன்று தம்மால் வழங்கப்படும் சேவைகள் குறித்த தெளிவை மக்களிடம் ஏற்படுத்தி மக்களின் நம்பிக்கையை பெற்று சிறப்பான முறையில் சேவையை முன்னெடுக்க மக்களின் கருத்துக்கள் பின்னூட்டல்களை உரிய முறையில் கையாள முன்வர வேண்டும்.

அதற்கு உறுதுணையாக இருந்து செயற்படுவதற்காகவே சமூகப் பொறுப்புடைமைக் கருவிகள் பயன்படுத்தப்படுகிறன. இத்தகைய செயன்முறைகள் சமூகம் இணைந்து சேவை மேம்பாட்டை உறுதிப்படுத்துவதன் மூலம் சிறந்த சமூக அபிவிருத்திக்கு வித்திட முடியும்.

எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்த சமூக நோக்கோடு, சமூக நன்மைக்காக, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக ஆதரவளித்துள்ளார்களோ, அதேபோல் யுத்தத்தின் போது காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் கூடிய அக்கறையோடு செயற்பட்டார்களோ, அவை குறித்துத் தெளிவாகப் பேசி உடன்படிக்கை செய்துள்ளார்களோ, அவ்வாறு ஏன் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் செயற்பட முடியாது?

இங்கு முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்ததன் நோக்கம் என்ன என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீமோ, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீனோ கூற முடியுமா? அல்லது அவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன என்பதை பகிரங்கமாக ஊடகங்களுக்கு வெளிப்படுத்த முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# "காலகாலமாக புரையோடிப் போன பிரச்சினையின் அறிகுறிகளில் ஒன்றே தற்போதைய அரசியல் நெருக்கடி."



**காமினி நந்த குணவர்தன**
- தலைவர், ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கம் (UPM)

- **ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கம் (United Professionals Movement) உருவாக்கப்பட்டதன் நோக்கமும் பின்னணியும் என்ன?**

இந்நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தொழில்வல்லுனர்களின் பங்களிப்பை எவ்வகையில் பெற்றுக்கொடுப்பது என்கின்ற நோக்கிலேயே இவ்வமைப்பு தாபிக்கப்பட்டது. இங்கு தொழில்வல்லுனர்கள் எனும் போது ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டு வருவோரையே குறிக்கும். உதாரணமாக கல்வித் தகைமையுள்ள பொறியியலாளரையும் கல்வியும் நடைமுறை அறிவும் உள்ள குழாய் பொருத்துனரையும் நாம் தொழில்வல்லுனர்களாகவே கருதுகின்றோம்.

ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்களின் இயக்கத்தில் பலதரப்பட்ட தொழில்வல்லுனர்கள் தன்னார்வத் தொண்டர்களாக இணைந்து பணியாற்றி வருகின்றார்கள். பொறியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், சூழலியலாளர்கள், பொருளியலாளர்கள், கல்வியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், விவசாயிகள், கைவினைஞர்கள், கலைஞர்கள், அரச அதிகாரிகள், வியாபாரிகள், அரச நிர்வாகிகள், கழ்பனி நிறைவேற்று அதிகாரிகள், விஞ்ஞானிகள், ஓய்வு பெற்ற பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஆய்வாளர்கள், மகளிர் சங்கத் தலைவிகள், சமூகப் புரட்சியாளர்கள் போன்றோரை உள்ளடக்கியதாக இவ்வமைப்பு தாபிக்கப்பட்டிருக்கின்றது. அறிவு, அதிகாரம், சக்தி என்னும் மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

- **ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கத்தினால் (UPM) தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் என்ன?**

மூன்று வருட காலமாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்தோம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திட இருந்த 'சீபா' இரு தரப்பு உடன்படிக்கை தொடர்பில் தொழில்வல்லுனர்கள் என்ற அடிப்படையில் நாம் முதற்கட்டமாக ஒரு கருத்தை கட்டியெழுப்பினோம். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் கர்ணப்பட்டாலும் பொருத்தமான விதிமுறைகளைப் பின்பற்றாது இந்தியாவுடனான 'சீபா' உடன்படிக்கையிலும் ஏனைய சில சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களிலும் அரசு கைச்சாத்திடுவதை எதிர்த்து முதற் கட்டமாக 2016 ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான தொழில்முறையாளர்களை விகாரமகாதேவிப் பூங்காவில் ஒன்று திரட்டினோம். அதனைத் தொடர்ந்து ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கம் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் ஓரளவுக்கு நாம் அங்கத்தவர்களின் வலைப்பின்னலொன்றைக் கட்டியெழுப்பியுள்ளோம். இது பௌதிக ரீதியிலான வலையமைப்பல்ல.

எமது இயக்கம் ஒன்றிணையும் வகையில் ஓரமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது போன்று நாம் இந்நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமெனில், எவ்வகையான கொள்கைத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் நீண்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். உதாரணமாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கான கொள்கைத் திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்த ஆய்வுகளைச் செய்துள்ளோம்.

நாம் அழுத்த சக்தியாக (Pressure Group) ஏவ்வாறு அரசுடன் கொடுக்கல் வாங்கல் புரிவது என்கின்ற சிந்தனையிலேயே இவற்றை முன்னெடுத்துச் சென்றோம். எனினும் இற்றைக்கு 6 மாதங்களுக்கு முன்னர் எமது இயக்கத்துக்குள்ளால் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. அதாவது, அழுத்த சக்தியாகச் செயற்படுவது அவ்வளவு நடைமுறைச் சாத்தியமானதல்ல என்பதால் நாம் ஓரளவுக்கேனும் அரசியல் பிரவாகத்துடன் தொடர்புபடும் அளவுக்கு பணியாற்ற வேண்டும் என்பதாகும்.

இதன் பிரகாரம் நாம் எதிர்வரும் தேர்தல்களில் எவ்வாறு நடுநிலையாக நின்று செயற்படுவது என்றும் அதற்கு சமூகத்திலுள்ள தொழில்வல்லுனர்களை இணைத்துக் கொள்வதற்கு எவ்வாறு பின்னணியை உருவாக்குவது என்பது குறித்தும் சிந்தித்து வருகின்றோம். இதன் முதற்கட்டமாக நாம் தேசிய மக்கள் இயக்கத்தை (National Peoples Movement) கட்டியெழுப்பியுள்ளோம். இது தொடர்பாக நாம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தி மக்களுக்கு அறியப்படுத்தியுள்ளோம்.

- **ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கத்திலிருந்து (UPM) தேசிய மக்கள் இயக்கத்திற்கு (NPM) மாறியமைக்கான காரணங்கள் என்ன?**

ஒன்றிணைந்த தொழில்வல்லுனர்கள் இயக்கம் என்பது ஒரு சிறு குழுவாகும். ஒரு அழுத்த சக்தியாக செயற்படுவதற்கு இந்த அமைப்பு போதுமானது. ஆனால் அரசியல் அதிகாரத்தை நோக்கிய பயணத்திற்குச் செல்லும் போது எமக்கு வாக்குகள் வேண்டும். வாக்குகளைப் பெற வேண்டுமென்றால் இது போன்ற சிறு இயக்கத்தை வைத்து அதை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியாது. அதற்கு பரந்ததொரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதனால் நாம் சிவில் சமூக அமைப்புக்கள், மக்கள் அமைப்புக்கள், தொழிலாளர் நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து பரந்ததொரு அணியாக முன்னகர்கிறோம். இந்த இயக்கம் தற்போதிருக்கும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியின் அங்கமாக செயற்படப் போவதில்லை. நாம் தனித்துவமானதொரு அடையாளத்துடன் எமக்கான அரசியல் நோக்கத்துடன் முன்னகர்கிறோம்.

இந்நாட்டில் மக்கள் ஏதாவதொரு அரசியல் கட்சிக்கு வாக்களித்து விட்டு வருகிறார்கள். வாக்களித்ததன் பின்னர் வேட்பாளர் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி நடக்க முற்படுவார். அவர் ஏதாவது தவறிழைத்தாலும் கூட எமக்கு பார்த்துக் கொண்டிருக்க வேண்டியே ஏற்படும். இதனாலேயே நாம் இவ்வமைப்பை வித்தியாசமான முறையில் அமைத்திருக்கிறோம். சிவில் சமூக அமைப்புக்கள் அப்படியே இருக்கும். இதைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவார்கள். அவர்கள் தவறு செய்யும் போது கட்டுப்படுத்தும் விடயமும் இவ்வமைப்புக்களுக்கூடாக நடைபெறும். அவர்கள் தவறிழைக்கும் போது அதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளையும் நாம் ஏற்படுத்தவுள்ளோம். இந்தப் பணி இத்தோடு முற்றுப் பெறுவதில்லை. எம்முடன் இன்னும் 20 இற்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள் இணையவுள்ளன. இந்நாட்டிலுள்ள எந்தவொரு அமைப்பும் எமது தலைமையகத்திற்கு வந்து பணியாற்றக் கூடிய சூழலையே நாம் உருவாக்கி வருகின்றோம். அதற்காக வேண்டியே நாம் முயற்சிக்கிறோம்.

- **முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியிலும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் இயக்கங்களும் செயற்பட்டு வருகின்றன. இவற்றையும் தேசிய மக்கள் இயக்கத்துடன் எவ்வாறு தொடர்புபடுத்த முடிகின்றது?**

தற்பொழுது எம்முடன் பெரும்பாலான முஸ்லிம் சமூக அமைப்புகள் கைகோர்த்துள்ளன. அவற்றுடன் நாம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, ஜமாஅதுஸ் ஸலாமா, தேசிய ஷூறா சபை, முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்கா போன்ற அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். மௌலவி முஜீப் அவர்கள் இதற்குரிய வழிகளை அமைத்துக் கொடுத்தார். இவ்வமைப்புக்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் எமக்குச் சாதகமான பதில் கிடைத்தது. தற்போதைய அரசியலில் முஸ்லிம் தலைவர்கள் என்றாலும் தமிழ்த் தலைவர்கள் என்றாலும் எமக்கு இன்னின்ன பகுதிகள் வேண்டுமென்று பேரம் பேசும் அரசியலையே செய்கிறார்கள். ஆனால் நாம் இன மத பேதமில்லாமல் இந்நாட்டிற்கு பொருத்தமான சிறந்த மனிதர்களை ஆட்சி அதிகாரத்திற்கு அனுப்பும் பணியையே செய்யவுள்ளோம். இதற்கான தேவையும் நம்பிக்கையும் மேலெழுப்பப்பட்டிருக்கிறது.

- **எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தயார் நிலைகள் எப்படியுள்ளது?**

நாம் மூன்றாம் சக்தியாக எம்மை சொல்லிக் கொள்வதில்லை. நாம் மாற்றுச் சக்தியாகவே தொழிற்படுவோம். அதிகாரத்தைக் கைப்பற்ற எம்மால் முடியுமாக இருக்க வேண்டும். அதுவே எமது குறிக்கோள். இங்கு அரசியல் நோக்கு இருந்தாலும் கூட சிவில் சமூகங்களின் கூட்டமைப்பையே நாம் இணைத்திருக்கிறோம். சிவில் சமூகக் கூட்டமைப்பின் மூலம் கட்டியெழுப்பப்படுகின்ற கட்சியொன்றின் மூலமே நாம் அரசியலில் குதிப்போம். இதன் போது எம்முடன் ஒத்துப்போகும் ஒரு சில அரசியல் கட்சிகளுக்கும் எம்முடன் இணைந்து கொள்ள முடியும்.

- **சிவில் சமூக அமைப்புக்களது கட்டமைப்பும் செயற்பாடும் எவ்வாறு அமையப் பெற வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இங்கு எமது பொது எதிரி யார் என்பதை நாம் இனங்கண்டுகொள்ள வேண்டும். பொது எதிரியை இனங்காணாமல் எமது சுயவிருப்பின் பேரில் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொள்ளும் போது எமது வாக்குகளே சிதைந்து போகும். ஒரு சில அமைப்புக்கள் சில அரசியல் கட்சிகளுடன் மாத்திரமே இணைந்துகொண்டுள்ளன. ஆனால் எமக்கு ஒரு நோக்குள்ள, எதிர்காலம் குறித்து சிந்திக்கக் கூடியவர்களின் வாக்கு கிடைக்கிறது. சிறு சிறு குழுக்கள் எம்மை விட்டு உடையும் போது அது பாரிய அழிவை ஏற்படுத்தும்.

எமது கருத்தியலோடு ஒத்துப் போகுமாக இருந்தால் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவும் தயாராக உள்ளோம். ஜேவிபிக்கு ஒரு பகுதி என்றும் இன்னுமொரு கட்சிக்கு ஒரு பகுதியென்றுமாக வாக்குகள் உடைந்து போவதற்குப் பதிலாக நாம் இணைந்து செயற்படும் போது வெற்றியை பதிவுசெய்ய முடிகிறது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) என்கின்ற முஸ்லிம் கட்சி எம்முடன் இணைந்து பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமக்கு தனிநபர்கள் முக்கியமல்ல. எமது இலக்கை நோக்கிச் செல்லப் பொருத்தமானவர்கள் யாரென்பதே முக்கியமானது. எமது பயணத்தில் பொருத்தமான நபர்கள் எம்மைச் சந்திப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

- **கடந்த 50 நாட்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற அரசியல் நெருக்கடி நிலையின் பின்னணி என்ன என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இந்நெருக்கடி திடீரென ஏற்படவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலப்பகுதியிலிருந்து இந்நெருக்கடிக்கான பின்னணி உருவாக்கப்படுகிறது. சுதந்திரத்திற்கு பின்னர் இந்நெருக்கடி பிறிதொரு வகையில் வெளிக்கிளம்ப ஆரம்பித்தது. அதன் பின்னர் இந்நாட்டை ஆட்சி செய்த தலைவர்களுக்கு இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுக்கொடுக்க முடியாமல் போயுள்ளது. அதாவது, தாக்கமான சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்தினால் மக்கள் அதிகாரத்தை ஏற்படுத்தும் உந்துசக்தியாக அவர்கள் இருக்கவில்லை. சமத்துவம், நீதி, ஊழல் இல்லாத மரியாதை நிலவுகின்ற மக்கள் நட்பு கொண்ட நவீன திறனான சமூகமொன்றை கட்டியெழுப்ப முடியாமல் போயிருக்கிறது. (பக்.14)



# எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## சீ... சீ... சீ...

அக்குரணையின் அசனாப் பள்ளி தற்போதைய பேசுபொருளாக மாறி இருக்கிறது. பள்ளிவாசல்கள் எல்லாம் ஏனைய மதத்தவர்களும் வந்து அனுசாசனம் வழங்கி விட்டுச் செல்லும் அளவுக்கு சகவாழ்வுக்காகத் திறக்கப்படுகின்ற பொழுது, ஓபன் மஸ்ஜித் திட்டத்தின் மூலம் மாற்றுக் கருத்துக்கள் உள்ளவர்களையெல்லாம் உள்ளே அழைத்து சமரசம் பேணுவதற்கான முயற்சிகள் நடக்கின்ற பொழுது, அக்குரணை வெள்ளத்தில் அசனாப் பள்ளி எதிர்த் திசையில் நீச்சலடிக்கிறது.

எதிர்பாராத வெள்ளம் இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாகவும் வந்து மக்களின் வாழ்வாதாரங்களை கோடிக் கணக்கில் காவுகொண்டு சென்ற போதும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில், ஷரீஅத் விவகாரங்களில் தீர்வுகளை எட்டுவதற்கான நோக்கில் அசனாப் பள்ளி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் அக்குரணைக் கிளைக்கு அனுமதி வழங்கியிருந்தது. இந்த வகையில்தான் உஸ்தாத் மன்ஸூர் வெளியிட்டு வரும் கருத்துக்கள் ஷரீஅத்துக்கு முரணானவை என மக்களுக்குத் தெளிவுபடுத்தும் மாநாடொன்றை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் அக்குரணைக் கிளை ஏற்பாடு செய்திருந்தது.

உண்மையில் இது ஒரு கருத்து வேறுபாடுதான். ஆனாலும் பாரம்பரிய மௌலவிமார்களுக்கும் இஸ்லாமிய அறிஞர்களுக்கும் இடையில் தோன்றிய கருத்து வேறுபாடு. தீன் என்பது இன்னது தான் என்று வரையறுத்துப் பேசுபவர்களுக்கும் தீன் என்பதை விசாலமானதொரு பரப்பில் பேசுபவர்களுக்கும் இடையில் உருவான சிந்தனைச் சிக்கல். ஷரீஆ என்பதன் வரையறைகளைத் தெரிந்து முற்படுத்திப் பேசுபவர்களுக்கும் ஷரீஆவை ஏழாவது இடத்தில் வைத்துப் பேசுபவர்களுக்கும் இடையிலான பிரிகோடு.

இஸ்லாம்தான் தீன் என்று ஏற்றுக் கொண்டாலும் தீன் என்றால் என்ன என்பதை விளங்குவதில் நாட்டிலுள்ள உலமாக்களுக்கும் இஸ்லாமிய அறிஞர்களுக்கும் இடையில் பெரியதொரு இடைவெளி இருக்கின்றது என்பதன் வெளிப்பாடு, நடந்து முடிந்த பல்வேறு விவாதங்களின் ஊடாகவும் தென்பட்டு வருகிறது. இதனால் தீன், ஷரீஆ என்பவற்றையெல்லாம் முதலில் உலமாக்கள் ஓரிடத்தில் சேர்ந்து கலந்துரையாடி ஒரு கருத்தாக சமூகத்தின் முன்வைத்து தெளிவு வழங்க வேண்டிய நிலையில் இருக்கையில், பொதுமக்களையெல்லாம் கூட்டி ஒருபக்கச் சார்பாக ஷரீஆவை விளங்கப்படுத்தினால் சமூகத்தின் நிலை என்னாவது? கவனமாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நடத்தப்படுகின்ற வகுப்பறைப் பாடங்களை, எல்லோருக்குமான பள்ளிப் பாடமாக நடத்தினால் சமூகம் குழம்பிப் போகாதா என்ன?

சமூகத்தில் இருக்கின்ற உலமாக்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று தான். சமூகத்தில் இருக்கின்ற எல்லோருமே மார்க்கம் படித்தவர்கள் அல்லர். மார்க்கம் படித்த உலமாக்கள் தான் சமூகத்துக்கு மார்க்கத்தை எடுத்துச் சொல்ல வேண்டியவர்கள். இனி நீங்கள் படித்த இஸ்லாத்துக்கிடையில் கருத்து வேறுபாடுகள் வந்தால் அதனை நீங்கள் கூடிப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். பொதுமக்களை வம்பில் இணைத்துக் கொள்ளாதீர்கள். மக்கள் தமக்குத் தெரியாதவற்றின் எதிரி. தமது வெற்றிக்கு கட்சிகள் இனவாதத்தைப் பயன்படுத்துவது போல மக்களின் இந்தத் தெரியாத்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதீர்கள்.

இந்த இடத்தில் உலமாக்கள் சபைக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. அக்குரணை ஜம்இய்யதுல் உலமா என்பது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கிளை நிறுவனம். அந்த வகையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கட்டுக்கோப்புக்குள் அது இயங்கி இருக்க வேண்டும். கருத்து வேறுபாடுகளின் போது எப்படி நடந்து கொள்வது என்பது தொடர்பிலான ஒரு ஒற்றுமைப் பிரகடனம் ஒன்றை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கீழால் இயங்குகின்ற சீ.சீ.சீ. (ஒருங்கிணைப்புக்கும் ஒத்துழைப்புக்குமான கமிட்டி) பல ஆண்டுகளுக்கு முன்னரே, ஏனைய கொள்கைகளுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளையில் வெளியிட்டிருந்தார்கள். இதனை சகல பள்ளிவாசல்களிலும் தொங்க விட்டால் சமூகத்தில் ஒற்றுமை நிலவும் என்று சொன்னார்கள். ஆகவே அசனாப் பள்ளியில் அது பிரதிபலித்திருக்க வேண்டும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மேலே இருந்து விடுக்கின்ற கட்டளைகள் கீழே எப்படி அமுலாகின்றன என்பதற்கு இந்தச் சான்று போதுமானது. ஒற்றுமைப் பிரகடனத்தைத் தொங்க விடுங்கள், குனூத் ஓதுங்கள் என்று மேலே இருந்து வருகின்ற கட்டளைகள் எல்லாம் கீழே நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று நாங்கள் பல தடவைகள் கேள்வி எழுப்பி இருந்தோம். நடைமுறைப் படுத்தினார்களோ இல்லையோ நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்ற தோரணையில் மட்டும் செயற்பட்டதனால் தான் இன்று அது தனது மடியிலேயே எரியத் தொடங்கியிருக்கிறது.

சீசீசீ இன் ஒற்றுமைப் பிரகடனம் முக்கியமானதொரு ஆவணம். அதிலே சிறந்த வழிகாட்டல்கள் நிச்சயமாக இருக்கின்றன. ஆனால் வெறுமனே அதனைத் தொங்கவிடுவதன் பரக்கத்தினால் மட்டும் சமூகத்தில் மாற்றம் வரப் போவதில்லை. அதற்காக உழைக்க வேண்டும். களத்துக்குச் சென்று மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

இதற்கு முன்னர் மார்க்க விவகாரங்களில் இருதரப்பு விவாதங்கள் நடந்திருக்கின்றன. அவை கருத்து வேறுபாட்டுக்குரிய விடயங்கள் என்பதனால் அவை தொடர்பில் இது போல பொதுவெளியில் அதிகம் பேசப்படவில்லை. ஆனால் இப்போது சகலரும் இது தொடர்பில் பேசுவதற்கான காரணம் ஜம்இய்யதுல் உலமாவே முன்னின்று இந்த முரண்பாட்டைத் தோற்றுவித்தமை தான்.

தனது யாப்புக்கு முரணாக தானே நடந்து கொள்ளும் சிரிசேனத்தனமான செயற்பாடுகள் தலைமை வழங்கும் உலமா சபைக்குப் பொருந்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பை ஜனாதிபதியாக்குவதற்கு ரஷ்யா சமூக ஊடகத்தைப் பெரிதும் பயன்படுத்தியது



2016 ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பை வெற்றியடையச் செய்யும் நோக்கில் சமூக ஊடகங்களை ரஷ்ய அரசாங்கம் பெருமளவு பயன்படுத்தியதாக புதிய அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அமெரிக்கர்களை இன ரீதியிலும் கருத்தியல் ரீதியிலும் பிரிப்பதற்கு ஊடகங்களை ரஷ்யா பயன்படுத்தியதாக 2016 ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய்ந்த தனிப்பட்ட நிபுணர் குழுவொன்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

சென். பீட்டர்பேக்கை தளமாகக் கொண்ட இணைய ஆராய்ச்சி முகவர் நிறுவனம் அமெரிக்க அரசியல் போக்குகளை பிழையாக வியாக்கியானம் செய்துள்ளது என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

கிராஃபிக்கா எனப்படும் ஆராய்ச்சி நிறுவனத்தோடு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக குழுவொன்று இது தொடர்பாக ஆராய்ந்து வந்தது. ஐக்கிய அமெரிக்காவின் புலனாய்வு முகவர் நிறுவனங்களும் கடந்த தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து ஆராய்ந்து வந்த நிலையிலேயே இவ்வறிக்கை வெளிவந்துள்ளது. தொடர்ந்தும் ரஷ்யா அமெரிக்க அரசியலில் செல்வாக்குப் பெற்றுள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

அமெரிக்க மக்கள் அபிப்பிராயத்தைக் கூறுபோடுவதே ரஷ்ய சமூக ஊடகங்களின் நோக்கம் என இவ்வறிக்கைகள் தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் ஜனநாயக நிறுவனங்கள் மீதுள்ள நம்பிக்கையை இல்லாதொழிப்பதே ரஷ்ய முகவர் நிறுவனங்களின் இலக்கு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, அமெரிக்காவிலுள்ள ஆபிரிக்க பூர்வீகத்தினரை திசை திருப்புவதே சமூக ஊடகங்களின் பிரதான நோக்கம் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

# சர்வதேசப் பார்வை

## யெமனில் போர் நிறுத்தம்



யெமனில் இறுதிப் போர்முனையான ஹுதைதாவில் அரச படையினருக்கும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளது. இதன்படி சவூதி தலைமையிலான அறபு நாடுகளின் வான்வழித் தாக்குதல்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

2018-12-17 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து இப்போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ளது. நிலையான சமாதானத்திற்கான தொடக்கமாக போர் நிறுத்தம் கருதப்படுகின்றது. 2015 மார்ச் மாதமளவில் யெமன் மீதான -குறிப்பாக ஷீஆ ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து அறபுக் கூட்டணி தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது. மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் யெமனில் கூர்மையடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடிகளைக் கவனத்திற் கொண்டு ஐ.நா.வின் தலையீட்டுடன் கடந்த வாரம் அமைதிப் பேச்சு வார்த்தை நடந்தது. (விரிவான விளக்கங்களுக்கு 09 பக்கக் கட்டுரையைப் பார்க்க)

## அமெரிக்கா பலஸ்தீனத்துக்கான நிதியுதவியை நிறுத்தியுள்ளதால் பாரிய நெருக்கடி




வருடா வருடம் அமெரிக்க காங்கிரஸ் பலஸ்தீன் அகதிகளுக்கு வழங்கி வந்த நிதியாதரவை ட்ரம்ப் நிருவாகம் நிறுத்தியுள்ளதனால் பலஸ்தீனர்கள் பெரும் மனிதாபிமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். 2019 இல் இதன் மோசமான விளைவுகளை மேற்குக்கரையிலும் காஸாவிலும் உள்ள மக்கள் அனுபவிக்க நேரிடும் என்று கவலை வெளியிடப்படுகின்றது.

ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த உதவியின் மூலம் 5 மில்லியன் பலஸ்தீன அகதிகள் நிவாரணம் பெற்று வந்தனர். தற்போது ஐ.நா. மற்றும் பலஸ்தீன அதிகார சபை என்பன இணைந்து 2019 ஆம் ஆண்டுக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஆதாரவைத் திரட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

தேவையான நிதி இத்தொகையை விட அதிகமாக உள்ள போதும் அடிப்படைத் தேவைகளுக்கான ஆகக் குறைந்த தொகையாக 350 மில்லியன் டொலர் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பலஸ்தீன் அதிகார சபை தெரிவித்துள்ளது.

2018 இல் சர்வதேச சமூகத்திடம் 539 மில்லியன் டொலர்களுக்கான உதவி கோரப்பட்டது. 200 திட்டங்களுக்காக 1.4 மில்லியன் பலஸ்தீனர்களுக்கு இத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. 2018 ஆரம்பத்தில் அமெரிக்கா பலஸ்தீனத்திற்கான நிதியாதரவை முழுமையாக நிறுத்தியது. ஐ.நா. அகதிகள் நிவாரண அமைப்பினூடாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பலஸ்தீனர்களுக்கு நிதியாதரவாகக் கிடைக்கப் பெற்று வந்தது.

உணவு, சுகாதாரம், உறைவிடம், குடிநீர், கழிப்பறை வசதிகள் போன்றவற்றிற்கு காஸா பள்ளத்தாக்கு, மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் என்பவற்றில் வாழும் பலஸ்தீனர்களுக்கு 2019 இல் 350 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என ஐ.நா. கணிப்பிட்டுள்ளது.

2018 இல் 365 மில்லியன் டொலர்களைத் தருவதாக வொஷிங்டன் வாக்குறுதியளித்தபோதும் 60 மில்லியன் டொலர்களோடு இதற்கு மேல் பலஸ்தீனத்திற்கு எந்த நிதியாதரவும் வழங்கப்படாது என அறிவித்தது.

இஸ்ரேலின் நிபந்தனைகளுக்கு பலஸ்தீனத் தலைவர்களைக் கட்டுப்பட வைப்பதே அமெரிக்காவின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## அமீரகத்தில் தாலிபான்களைச் சந்தித்த அமெரிக்க அதிகாரிகள்

அமீரகத்தின் தலைநகரில் சவூதி, பாகிஸ்தான், மற்றும் அமீரக பிரதிநிதிகளோடு அமெரிக்க அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தாலிபான்களின் பேச்சாளர் ஸபியுல்லாஹ் முஜாஹித் தெரிவித்துள்ளார்.

17 ஆண்டுகளாக நடைபெறும் ஆப்கான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதே இச்சந்திப்பின் நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் இது குறித்து கருத்து வெளியிட்டபோது, அபூதாபியில் நடந்த சந்திப்புகள் ஆப்கானிஸ்தானில் குழு மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்கிடையில் அமைதி ஒப்பந்த மொன்றை எட்டுவதே எனத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானியர்கள் ஒன்றாக அமர்ந்து தமது பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து எதிர்கால அரசியல் வரைபடத்திற்கான அடிப்படைகள் குறித்துக் கலந்துரையாடுவதே நிலையான சமாதானத்திற்கான மார்க்கம் என அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.



## காஸா விமான நிலையத்திற்கு இஸ்ரேல் எதிர்ப்பு

காஸாவில் விமான நிலையமொன்றை அமைப்பதற்கும் அதன் மூலம் காஸா மக்களுக்கான மனிதாபிமான நிவாரணப் பணிகளை முன்னெடுக்கத் தயார் என்று கட்டார் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கான திட்டத்தை கட்டார் அரசாங்கம் தயாரித்துள்ளது. ஆயினும், இஸ்ரேல் இது குறித்து எந்த எதிர்வினையையும் ஆற்றவில்லை.

தொடக்கத்தில் அமைதியாக இருந்த இஸ்ரேல், தற்போது காஸாவில் விமான நிலையம் உருவாவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவித்துள்ளது. கட்டார் அரசாங்கம் காஸாவில் பல்வேறு நலத் திட்டங்களுக்கு பல மில்லியன் டொலர் நிதி ஆதாரவை வழங்கி வருகின்றது. காஸாவில் சிவில் சேவை ஊழியர் களுக்கும் கட்டார் அரசாங்கமே ஊதியம் வழங்கி வருகின்றது. இஸ்ரேல் வெளி விவகார அமைச்சர் லீபமென், கட்டாரின் இந்நடவடிக்கை குறித்து கவலை கொள் வதாகத் தெரிவித்துள்ளார்.

தோஹாவிலிருந்து காஸாவுக்கு விமான சேவைகள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் காஸாவின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று கட்டார் கருதுகின்றது. காஸா ஹமாஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதனால் இத்திட்டத்திற்கு இஸ்ரேல் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

## சவூதி இடைநிலைப் பாடசாலை கலைத் திட்டத்தில் தத்துவம் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

சவூதியின் இடைநிலைப் பாடசாலைகளில் தத்துவம் என்ற பாடத்திற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. கடந்த பல தசாப்தங்களாக பாடசாலைகளில் தத்துவம் கற்பிக்கப்படுவது உத்தியோகபூர்வமாக தடைசெய்யப்பட்டிருந்தது. தற்போது 200 ஆசிரியர்கள் தத்துவப் பாடத்தைக் கற்பிப்பதற்கு விஷேட பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக அல் அறபி அல் ஜதீத் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



சமீபத்தில் சவூதியில் இடம்பெற்ற சர்வதேச மாநாடொன்றில் சவூதியின் கல்வி அமைச்சர் அஹ்மத் அல் இஸ்ஸா இதனைத் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், சவூதியின் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் தனது மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் மெய்யியலைக் கற்பிப்பதற்கான சுற்றுநிரூபம் எதுவும் இது வரை தமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பயிற்சிக்கான ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். சவூதியின் தலைநகர் ரியாதிலுள்ள பாடசாலைகளிலேயே சர்ச்சைக்குரிய மெய்யியல் பாடம் ஆரம்பமாகக் கற்பிக்கப்படும் என்று தான் நம்பிபுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

காலம் சென்று ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் பாஸ் போன்ற சிரேஷ்ட முப்திகள் பலர் பலமுறை வெளியிட்ட பத்வாக்களின் அடிப்படையில் சவூதி அறேபிய பாடசாலையின் கலைத் திட்டத்தில் மெய்யியல் பாடம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல்-லெபனான் எல்லைப் புற நிலக்கீழ் சுரங்கம் 2006 ஒப்பந்தத்தை மீறுகின்றது

லெபனானிலுள்ள ஐ.நா. அமைதிப் படையினர் இஸ்ரேல் லெபனான் எல்லைப் புறங்களில் உருவாக்கப்பட்டுள்ள நிலக் கீழ் சுரங்கங்கள் 2006 இல் இடம்பெற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை மீறுவதாகத் தெரிவித்துள்ளன. லெபானிலுள்ள ஐ.நா. உள்ளகப் படை இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1701 ஆவது தீர்மானத்தையும் இத்தகைய நிலக்கீழ் சுரங்க உருவாக்கம் மீறியுள்ளதாக ஐ.நா. பாதுகாப்புப் படையினர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றஊப் ஸெய்ன்

# அமெரிக்க செனட் சபை தீர்மானம்

## கஷோகி படுகொலை தொடர்பில் சவூதி ஆட்சியாளர்களுக்கு மற்றொரு பேரிடி


அமெரிக்காவின் செனட் சபை கடந்த வாரம் கஷோகியின் படுகொலை மற்றும் யெமனில் சவூதி நடத்தி வரும் போர் குறித்த தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் 49 பேரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 7 பேரும் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். குடியரசுக் கட்சியின் சில உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஒக்டோபர் 02 இல் ஸ்தன்பூலிலுள்ள சவூதிஅரேபியாவின் துணைத் தூதரகத்தில் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட கஷோகியின் படுகொலைக்கு அரச ஆணை பிறப்பித்தவர் முஹம்மத் பின் சல்மானே என்றும், யெமனில் சவூதி நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போருக்கு டொனால்ட் ட்ரம்ப் அளித்து வரும் ஆதரவை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் சவூதி அரேபியாவின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் அதன் பிராந்திய பங்கேற்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜமால் கஷோகியின் படுகொலை தொடர்பில் தொடக்கத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான அறிக்கைகளை சவூதியின் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டு வந்தது. கஷோகி துணைத் தூதரகத்திலிருந்து வெளியேறி விட்டதாகத் தெரிவித்திருந்த சவூதி ஆட்சியாளர்கள், பின்னர் அவர் படுகொலை செய்யப்படவில்லை என்று கூறிவந்தது.

துருக்கிய புலனாய்வு அதிகாரிகளின் ஆதரங்கள் திரண்டு வருவதைக் கண்டு விழி பிதுங்கிய முஹம்மத் பின் சல்மான், தூதரகத்தின் உள்ளே அவர் கொல்லப்பட்டார் என்று ஏற்றுக் கொண்டிருந்தார். துருக்கிய ஊடகங்களிலும் middleasteye எனும் இணையத்தளத்திலும் பின்னர் CNN இலும் கஷோகியின் படுகொலைக்கும் சவூதியின் உயர் மட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து அதிர்ச்சியூட்டும் பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருந்தன.



இறுதியாக உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த உளவு ஸ்தாபனம் என அறியப்படும் அமெரிக்காவின் மத்திய உளவு நிறுவனம் (CIA) முஹம்மத் பின் சல்மானே கஷோகியை படுகொலை செய்வதற்கு உத்தவிட்டார் என்று அதன் உளவறிக்கையை நிறைவு செய்தபோது, சவூதி ஆட்சியாளர்கள் அதிர்ந்து போனார்கள்.

முஹம்மத் பின் சல்மானுக்கு கண்ணை மூடிக்கொண்டு ஆதரவளித்து வரும் இஸ்ரேலின் சேவகன் டொனால்ட் ட்ரம்பிற்கும் CIA இன் அறிக்கை மிகப் பெரிய தலையிடியாக மாறியது. மத்திய உளவு நிறுவனத்தின் அறிக்கை சற்று அவசரமான முயற்சி என்றும், முஹம்மத் பின் சல்மானுக்கும் இப்படுகொலைக்கும் இடையில் தொடர்பில்லை எனவும் ட்ரம்ப் அறிவித்தார்.

ஆயினும், அமெரிக்காவின் செனட் சபையில் ட்ரம்பின் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் ட்ரம்பின் இந்தக் குருட்டுத் தனமான சவூதி விசுவாசத்தையும் ஆதரவையும் கடந்த வாரம் கேள்விக்குள்ளாக்கினர். ட்ரம்பின் நிருவாகத்திற்கு செனட் சபையின் தீர்மானம் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளது. 10 நிமிடத்திற்கு ஒரு குழந்தை பட்டினியால் இறக்கும் யெமன் போருக்கு சவூதி மன்னர்களுக்கு ஆயுதம் வழங்குவதை ட்ரம்ப் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், முஹம்மத் பின் சல்மானே கஷோகியின் படுகொலைக்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் செனட் சபை சவூதி ஆட்சியாளர்களைக் குற்றம் சுமத்தியுள்ளது. ட்ரம்பின் மீதும் அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள சவூதியின் வெளிவிவகார அமைச்சு வழமை போன்று செயற்கையாகவும் நம்புவதற்கரிய வார்த்தையாடல்களிலும் அமெரிக்க செனட் சபையின் நிலைப்பாட்டை மறுத்துள்ளது. சர்வதேச ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் முக்கிய பங்காற்றி வருகின்ற சவூதி அரேபியா குறித்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலம் எமது சாம்ராஜ்யத்தின் உள்விவகாரங்களில் செனட் அனாவசியமாகத் தலையீடு செய்வதாக சவூதி வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 02 இல் வொஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளரும் சவூதி அரேபியாவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளருமான ஜமால் கஷோகி ஸ்தன்பூலிலுள்ள துணைத் தூதரகத்தில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். ''என்னால் மூச்சு விட முடியாதுள்ளது'' என்பதே அவரது இறுதி மரண ஓலமாக இருந்தது என்று துருக்கிய புலனாய்வுக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஷோகி கடும் சித்திரவதைகளுக்குப் பின்னரே கொல்லப்பட்டுள்ளார். அதன் போது முஹம்மத் பின் சல்மானுடன் சித்தரவதைக் கும்பல் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் தம் வசம் உள்ளது என்று துருக்கியின் புலனாய்வுத் துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி துருக்கிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டது.

சித்தரவதைக்குள்ளான கஷோகியின் அவலக் குரல்கள் வெளியே கேட்காமல் தூதரகத்தினுள்ளே இசையை சப்தமாக ஒலிபரப்பியுள்ளனர். இவற்றுக்கான ஆதாரங்களை துருக்கிய பத்திரிகை மட்டுமன்றி, middleasteye, CNN என்பனவும் வெளிப்படுத்தியுள்ளன. இந்நிலையிலேயே சவூதி ஆட்சியாளர்கள் மீது சர்வதேச நாடுகள் தமது கண்டனங்களையும் எதிர்வினைகளையும் ஆற்றி வருகின்றன. சுவீடன், கனடா போன்ற நாடுகள் சவூதி அரேபியாவுக்கான ஆயுத இறக்குமதியை நிறுத்தியுள்ளன.

2015 மார்ச் மாதம் யெமன் மீது சவூதி அரேபியா தொடங்கிய பிரமாண்டமான வான்வழித் தாக்குதல்களில் இதுவரை 60,000 இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 85,000 குழந்தைகள் பட்டினியால் இறக்கும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இவ்விரு விடயங்களையும் முன்னிறுத்தியே அமெரிக்க செனட் சபை முஹம்மத் பின் சல்மானுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலாளர் என்ட்ரோனியோ, கஷோகியின் படுகொலை குறித்து நம்பகமான சர்வதேச விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். செனட் சபையின் தீர்மானத்தை சவூதி ஆட்சியாளர்கள் நிராகரிக்கின்றபோதும், சவூதி அரேபியாவின் சர்வதேச பிரதிமைக்கு இதனால் பெரும் இழுக்கு ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் முஹம்மத் பின் சல்மானை பல நாட்டுத் தலைவர்கள் சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர். சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் இவ்விடயம் குறித்து தொடர்ந்தும் குரலெழுப்பி வருகின்றன. ஜமால் கஷோகி ஒரு கருதுகோளல்ல. ஒரு அரசியல் யதார்த்தம் என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

செனட் சபை தீர்மானத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எவ்வாறு எதிர்வினை ஆற்றப் போகிறார். எதிர்வினை ஆற்றுவாரா இல்லையா என்ற கேள்விகளுக்கு அப்பால், கடந்த சில தசாப்த காலமாக வொஷிங்டன் - ரியாத் ராஜதந்திர உறவில் இந்தத் தீர்மானம் குறிப்பிடத்தக்க அரசியல் உராய்வை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்னொரு புறம் சவூதி அரேபியா குறித்த சர்வதேச சமூகத்தின் பிரதிமையில் இதற்கொரு தாக்கம் உள்ளது என்பதையும் நாம் இலகுவில் தட்டிக் கழிக்க முடியாது.

# யெமன் போர் நிறுத்தம்

## நிலையான சமானத்தின் தொடக்கம்

கடந்த மூன்றரை ஆண்டுகளாக சவூதி தலைமையிலான அறபு நாடுகளின் கூட்டணி (சவூதி அரேபியா, பஹ்ரைன், ஐக்கிய அறபு அமீரகம்) 18,000 வான்வழித் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. 2015 பெப்ரவரியில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் யெமன் தலைநகர் சன்ஆவைக் கைப்பற்றியதை அடுத்து ஜனாதிபதி அப்துர் ரப் மன்ஸூர் ஹாதி ரியாதுக்குத் தப்பியோடினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க அவரது ஆட்சியை மீள நிலைநிறுத்தும் நோக்கத்துடன் இத்தாக்குதல்களை ஆரம்பித்ததாக ரியாதும் அதன் நேச நாடுகளும் கூறி வருகின்றன.

ஆனால், கடந்த மூன்றரை ஆண்டு கால இடைவெளியில் யெமனில் தேசிய விமான நிலையம் மற்றும் முக்கிய அரச அலுவலகங்கள் ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. ஹூதிகளுக்கான படைப் பலம் மற்றும் நிதி ஆதரவினை இதுவரை ஈரானே வழங்கி வருவதாக ரியாத் குற்றம் சாட்டுகின்றது. ரியாதுக்கும் தெஹ்ரானுக்கும் இடையிலான போரின் ஆடுகளமாகவே யெமன் கையாளப்பட்டு வந்தது. இதற்கு யெமனியர்கள் கொடுத்த விலை மிகப் பாரியது.

மத்திய கிழக்கிலேயே மிக வறிய நாடு எனக் கருதப்படும் யெமனியர்களின் தலாவீத வருமானம் சவூதி தாக்குதல்களுக்கு முன்பாக 4500 அமெரிக்க டொலர்களாகும். இது சவூதி அரேபியாவில் 28,000 அமெ. டொலர்களாகும். பஹ்ரைனில் 26,000 அமெ. டொலர்களாவும் ஐக்கிய அறபு அமீரகத்தில் 33,000 அமெ. டொலர்களாகவும் உள்ளன. மூன்றரை ஆண்டுக்குப் பின்னர் 60,000 மக்களையும் நாட்டின் கீழ்க்கட்டுமான வசதிகளையும் இழந்து நிற்கும் யெமனில், மிகப் பெரும் மனிதாபிமான நெருக்கடி தலையெடுத்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கோட்டை எனக் கருதப்படும் ஹுதைதா, யெமனின் பொருளாதாரத்திலும் தங்கு தடை இல்லாத அத்தியவசியப் பொருள் விநியோகத்திலும் முக்கிய பங்கு வகிக்கும் துறைமுக நகராகும். நகரினுள்ளே குறுக்குச் சமரில் சிக்குண்ட மக்களின் மனிதாபிமான நெருக்கடி கூர்மையடைந்து வந்த நிலையிலேயே ஹூதிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை சுவீடனின் ரிம்போ நகரில் ஆரம்பமானது.

கடந்த வாரம் ஆரம்பித்த இப்பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையூட்டக் கூடிய சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக இடையீட்டாளராகக் கலந்துகொள்ளும் ஐ.நா. தெரிவித்துள்ளது.



இதனது ஆரம்ப சமிக்ஞையாக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹூதைதா மீதான போர் நிறுத்தம் சாத்தியமாகியுள்ளது.

சவூதி தலைமையிலான கூட்டணியும் ஹூதி கிளர்ச்சியாளர்களும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டுள்ளனர். ஜனாதிபதி அப்துர் ரப் மன்ஸூர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஹூதி இயக்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் ரிம்போவில் நடந்த இப்பேச்சுவார்த்தைகள் மூலம் அத்தியவசிய பொருட்களை விநியோகிப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

போர் நிறுத்தத்திற்கு சற்று முன்பாக கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றதாக ஹுதைதா வாசிகள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர். இயந்திரத் துப்பாக்கிகளின் சத்தம் வழமைக்கு மாறாக அதிகம் கேட்டது என்று ஹுதைதாவின் குடியிருப்பாளர்கள் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், பட்டினியின் விளிம்பில் நின்ற யெமனியர்களுக்கு போர் நிறுத்தம் மிகப் பெரும் வரப்பிரசாதம் என்று மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.நா. சபையின் படி ஹுதைதா நகரிலிருந்து இரு தரப்புப் படையினரும் மூன்று வாரங்களில் வெளியேறுவர். சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் அங்கு நிலைநிறுத்தப்படுவர். ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்பாக 16,000 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவர். ஒப்பந்தத்தின்படி ஹுதைதா, ராஸ்இஸா மற்றும் சலீப் ஆகிய மூன்று துறைமுகங்களும் உள்நாட்டுப் படையினரிடம் வழங்கப்படும் அவற்றின் மூலம் கிடைக்கும் வரிப்பணம் நாட்டின் மத்திய வங்கிக்குச் செல்லும். முன்னைய அரசாங்கப் படையினரே நாட்டின் மொத்தப் பாதுகாப்பை யும் ஏற்பார்களா என்பது குறித்து யெமன் வெளி விவகார அமைச்சர் காலித் யெமனி எந்தக் கருத்தை யும் வெளியிடவில்லை.

ஹூதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கும் ஜனவரி முதல் மத்திய வங்கி ஊதியம் வழங்கும். கடந்த இரண்டு ஆண்டுகளாக 12 இலட்சம் அரச ஊழியர்கள் சம்பளம் பெறவில்லை. குறிப்பாக சுகாதாரம், கல்வித் துறை சார்ந்தவர்கள் சம்பளம் பெறவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

சுவீடனில் இரு தரப்பும் ஒப்புக் கொண்ட விடயங்கள் களத்தில் எந்தளவு நடைமுறைக்கு வரும் என்பது குறித்து பல கேள்விகள் உள்ளன. உதாரணமாக, நாட்டின் உத்தியோகபூர்வப் பாதுகாப்புப் படையினராகச் செயல்படப் போவது யார்? ஹூதி கிளர்ச்சியாளர்கள் அரச படையினரோடு இணைவார்களா? ஏற்கனவே, பல நகரங்களில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் புதைத்து வைத்துள்ள நிலக் கன்னிகள் மற்றும் வெடிபொருட்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு அவர்கள் ஆதரவளிப்பார்களா? நாட்டின் நிதி நிர்வாகம் எவ்வாறு நடைபெறப் போகின்றது? இவை அனைத்தும் சமாதான ஒப்பந்தம் எதிர்கொள்ளும் மிகப் பாரிய சவால்களாகும். இவற்றைத் தாண்டிச் செல்வதில் பல நடைமுறைச் சிக்கல்களும் பிரச்சினைகளும் உள்ளன. எனினும், யெமனில் மேற்கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்தம் ஓர் சிறந்த ஆரம்பம் என்றே கருதப்படுகின்றது.

கூர்மையடைந்து செல்லும் மனிதாபிமான நெருக்கடியை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது இதன் பிரதான நோக்கமாகும். அந்நோக்கம் ஒப்பந்தத்தின் மூலம் ஈடேறியுள்ளது என்றே கருதப்படுகின்றது. ஆயினும் போரினால் சிதறிப் போயுள்ள யெமனைக் கட்டியெழுப்புவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உஸ்தாத் மன்ஸூர், அகுரணை உலமா சபை முரண்பாடு:

## நிலைப்பாடுகள் பற்றிய பார்வை

• தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி



## "இளைஞர்கள் பிழையாக வழிநடாத்தப்படுவார்கள் என்ற அச்சத்திலேயே மக்களை தெளிவூட்டினோம்"

ஏ.ஜே. மார்சூக் மௌலவி -
செயலாளர், அகுரணை ஜம்மிய்யதுல் உலமா

எமது ஜம்இய்யாவைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 36 பேர் ஷூறாவில் உள்ளனர். அதில் 8 பேர் நிறைவேற்றுக் குழுவில் உள்ளனர். எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் இதற்குள்ளும் 4 பேர் பேர் கொண்ட மேல் சபை உள்ளது. நீண்ட காலமாக புகைந்து புகைந்து வந்த இந்தப் பிரச்சினையை நாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கும் இந்தக் காலத்தில் நாமும் அவர்களும் கவனமாக கருத்துச் சொல்ல வேண்டும்.

ஜம்இய்யதுல் உலமா என்பது ஒரு சமூகம். அதாவது இது மக்களுடைய சபை. கிட்டத்தட்ட 350க்கு மேல் உலமாக்கள் அங்கம் வகிக்கும் சபை. 63 மஹல்லாக்களில் ஒரு உறுப்பினரே அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி. இப்படியிருக்கும் போது உஸ்தாத் மன்ஸூர் (நளீமி) என்பவர் ஒரு நபர். இந்தப் பிரச்சினையை இரண்டு சாரார் என்று பேச முடியாது. ஏனெனில் முழுக் கருத்தையும் வெளியிட்டதில் கருத்துக்குச் சொந்தக்காரர் அவர். ஜம்இய்யா வெளியிடு வது 350 பேர் சார்பில் வெளியிட்ட கருத் தாக இருக்கும். அதனால் கவனமாகவும் தெளிவாகவும் கருத்துச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருந்த இந்தப் பிரச்சினையை எங்கு ஆரம்பித்து எங்கு முடிப்பதென்கின்ற பிரச்சினை உள்ளது. அவர் ஒரு ஆலிம். நாம் அவரைப் பாதுகாத்தே எமது விடயங்களைப் பேச வேண்டும். மொத்தமாக அவரது கருத்தை, சிந்தனையை, ஆளுமையை, குரலை நசுக்கி விடுதல்ல. இரண்டு கருத்துக்கும் இடையிலுள்ள இடைவெளியை சமநிலைப்படுத்துவதற்கான பல முயற்சிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்த நேரம் அதற்கான வழியை அவர் திறந்து தரவில்லை. காரணம் அவராகவும் இருக்கலாம், அவரைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம்.

அப்படியே இந்தப் பிரச்சினை புகைந்து புகைந்து காலவோட்டத்தில் பூதாகரமானது. உலமாக்கள் என்பவர்கள் சமூகத்திற்காக இருப்பவர்கள். சமூகம் என்று வரும்போது சாதாரண பாமர மக்கள் முதல் புத்திஜீவிகள் வரையில் எல்லோருக்கும், எல்லா இயக்கங்களுக்கும் வழி காட்டக் கூடிய பாரிய பொறுப்பு உலமாக்களுக்கு உள்ளது. அந்த வகையில் இவரது கடந்த கால தஃவாப் பணி எப்படியிருந்ததென்றால் கல்விசார் சமூகத்தை மாத்திரம் கவரக் கூடியதாக இருந்தது. அவர்களுக்கும் உலமாக்களுக்கும் மத்தியில் சில விடயங்களில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியது.

இதன் விளைவுகளில் ஒன்றாக உலமாக்களுக்கு ஒன்றும் தெரியாது, அவருக்கு (உஸ்தாத் மன்ஸூருக்கு) மாத்திரம் தான் எல்லாம் தெரியும் என்ற அளவுக்கு இளைஞர்களில் சிலர் ஊடகங்களில் பிழையான ரவுடிசத்தைப் பின்பற்றினார்கள். இனி எப்படி உலமாக்கள் இந்நாட்டில் வேலை செய்வது. 4500 இற்கு மேற்பட்ட உலமாக்கள் இருக்கிறார்கள், 350 இற்கு மேற்பட்ட மத்ரஸாக்கள் உள்ளன. இதில் எத்தனையோ தொழில்வல்லுனர்கள் உள்ளார்கள். இவர்கள் எல்லோரையும் கொச்சைப் படுத்தும் வகையிலேயே கடந்த கால வரலாறு அமைந்தது.

அதுவொரு கறைபடிந்த வரலாறு. இது இன்னும் காலம் செல்லச் செல்ல இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப் படுமோ என அஞ்சினோம். எல்லாவற்றையும் சிந்தித்தோம். இதற்கு மூன்று வகையான சந்தர்ப்பங்களில் பேச முனைந்தோம். அது சாத்தியப்படவில்லை. அவரும் நாங்களும் நேரடியாகப் பேசி எங்களுக்குள் முடித்துக் கொள்ளும் நிலை ஏற்படவில்லை. பிரச்சினை ஒரு பக்கம் இருக்க சாதாரணமாக அவரது வகுப்புகளில் அவரைப் பின்பற்றக்கூடியவர்கள் அளவு கடந்த அன்பு வைத்ததனால் எங்களை அவர்களுக்கு விளங்கவில்லை. எதைப் பேச வேண்டும், எதைப் பேசக் கூடாது என்பதெல்லாம் மீறி தாறுமாறாகப் பேசினார்கள். இது எமக்கு ஒரு தாக்கமும் கூட.

மறுபக்கத்தில் எம்மைக் குற்றஞ்சாட்டினார்கள். நீங்கள் பகிரங்கமாக மக்கள் மத்தியில் பள்ளியில் வைப்பதை விட குறிப்பிட்ட சாராரை வைத்து செய்திருக்கலாமே என்று. மன்ஸூர் (நளீமி) அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்து அப்படியானதொரு போக்கைக் கடைப்பிடித்திருந்தால் நாம் நூறு வீதம் அதைச் செய்திருப்போம். அவரது பாட வகுப்புக்களுக்கு வந்தவர்களில் சாதாரணமாக படித்தவர்கள் மாத்திரமல்லாமல் வர்த்தகர்களும் இருக்கிறார்கள். சாதாரண சராசரி மட்டத்திலுள்ளவர்கள் போயிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் அந்தச் செய்தி போகிறது.

சாதாரணமாக ஒருவர் எப்படி அழைக்கப்படுகிறார் என்றால் நீங்கள் வாருங்கள் புதிய இஸ்லாத்தைப் படிக்க, இஸ்லாம் பாடத்தை பரீட்சைகளில் எழுதியிருந்தாலும் கூட அதைக் கூட மீள திரும்ப எழுத வேண்டிய நிலையும் வரும் என்றெல்லாம் சொல்லும் அளவுக்கு இருந்தது. அளவுக்கு அதிகமாக பேசிய இடங்களும் உள்ளன. தற்போது இந்த விடயங்கள் களத்திற்கு விட்டவுடன் விடயங்களை இன்னும் ஒவ்வொன்றாக வந்துகொண்டுள்ளது. எமக்கும் அவருக்கும் இடையில் தனிப்பட்ட எவ்வித பிரச்சினைகளும் இல்லை. அவர் நல்ல மனிதர்.

கருத்து வேறுபாடு என்றொரு விம்பத்தை வெளியில் விடுகிறார்கள். கருத்து வேறுபாடு என்கின்ற சொல் வந்து ஆழ் கடலில் உள்ள சிப்பியில் இருக்கும் முத்துக்கள் போன்றது. இமாம்கள் திருமணம் முடிக்காமலும் இருந்து இரவு பகலாக நீண்ட ஆய்வுகளையும் (பக்.15)

## உலமாக்கள் இணைக்கும் பாலமாகவே செயற்பட வேண்டும்



உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்
- தலைவர், ஜமாஅதுஸ் ஸலாமா

அகுரணை ஜம்இய்யதுல் உலமா உஸ்தாத் மன்ஸூர் விடயத்தில் கூறிய கருத்துக்கள் பல சர்ச்சைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் பலருக்கு மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் எனது சில கருத்துக்களை இங்கு கூறுவது பொருத்தம் எனக் கருதுகின்றேன்.

உலமாக்களுக்கு மத்தியில் இத்தகைய சர்ச்சைகள் வரலாற்றில் நடந்திருப்பதை நாம் அறிகின்றோம். இதற்கு காரணம் உலமாக்களின் வேறுபட்ட சிந்தனை முகாம்களாகும். அனைத்து அறிஞர்களும் ஒரே தரத்தில் இல்லாதிருப்பது போன்று அனைவரும் ஒரே அமைப்பில் சிந்திக்காமையும் விடயங்களை பல்வேறு கோணங்களில் பார்க்கின்ற பார்வையும் ஆகும்.

இதன் காரணமாக கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. நான்கு மத்ஹப்கள் தோற்றம் பெற்றன. ஏன் மத்ஹப்களைச் சாராது இஸ்லாத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற சிந்தனைகூட காணப்படுகின்றது. இவை அனைத்தும் இஸ்லாத்தின் பரந்த சிந்தனை வட்டத்திற்குள் உட்பட்டவை. இவை எதுவும் ஷரீஆவுக்கு முரணானதல்ல. ஆனால் அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை எப்படிப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதில் உலமாக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய சிந்தனை காணப்படுமாயின் கருத்து வேறுபாடுகளின் மூலமாக ஆரோக்கியமான விளைவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த இடத்தில் மாற்றுக் கருத்துக்களை உள்வாங்கும் மனோநிலை உலமாக்களிடம் உயர்ந்து இருக்க வேண்டும். தனது கருத்து அல்லது நிலைப்பாடு மாத்திரமே சரியானது என்பது பரந்த ஷரீஆவின் பார்வைக்கு முரணானது. ஆரம்ப கால இமாம்களுக்கு மத்தியில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகளை அவர்கள் இவ்வாறு கையாளவில்லை.

கருத்து வேறுபாடுகள் உலமாக்களுக்கு மத்தியில் ஏற்படுவது இயல்பானது. ஆனால் அது பற்றி மாற்றுக் கருத்துக்களை தெரிவிக்கும் போது கௌரவமான கற்புள்ள வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். தரக்குறைவான சொற்களைக் கையாண்டு பிழையான முன்மாதிரியை உலமாக்கள், புத்திஜீவிகள் சமூகத்திற்கு காட்டக்கூடாது. உலமாக்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை மையப் படுத்தி சமூகத்தில் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படாமலும், உள்ளங்களுக்கு மத்தியில் தூரங்கள் தோன்றாமல் இருப்பதிலும் சமூகத் தலைமைகள் கவனம் எடுக்க வேண்டும்.

எந்தளவுக்கு அகுரணை ஜம்மிய்யதுல் உலமா உஸ்தாத் மன்சூரின் ஆற்றல்களை இனங்கண்டு பயன்படுத்தியுள்ளது? உஸ்தாத் மன்சூர் குறிப்பாக அகுரணை ஜம்இய்யாவை பலப்படுத்துவதற்கு எவ்வளவு பிரயத்தனம் எடுத்தார் என்பது தொடர்பில் இருசாராரும் சிந்திப்பது பொருத்தம் என நான் கருதுகிறேன். ஒதுக்குவதன் மூலமும் ஒதுங்குவதன் மூலமும் நல்ல விளைவுகளை எதிர்பார்க்க முடியாது.

உலமாக்கள் சமூகத்தை இணைக்கும் பாலமாக செயற்பட வேண்டும். ஒரு தரப்பு கருத்துக்களுக்கு நியாயங்கள் இருந்தாலும், அவற்றின் மூலமாக பயனற்ற பிரச்சினைகள் ஏற்படுமாயின் அவற்றை விட்டுக் கொடுப்பதே ஷரீஆவின் சட்ட விதிகளுக்கு உடன்படக்கூடியது. அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்.

## "கூட்டம் நடத்த வேண்டாம் என்று கூறினோம்"



அஷ்ஷெய்க் முபாரக் மௌலவி
பொதுச் செயலாளர் - அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா, அஸ்னா பள்ளியில் கூட்டம் கூட்டுவதை நிறுத்துவதற்கு எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டது. தனிப்பட்ட முறையிலும் சிலரைத் தொடர்பு கொண்டும் கூட்டம் நடத்த வேண்டாம் என்று சொல்லியிருந்தோம். தெரிந்த வழிகளில் இதனை நடத்த வேண்டாம், விட்டு விடுங்கள் என்று கூறினோம். உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி, பொதுச் செயலாளர் ஆகிய நான் உள்ளிட்ட பலர் அங்குள்ள உலமாக்களைத் தொடர்பு கொண்டு கூட்டம் நடத்த வேண்டாம் எனக் கூறியிருந்தோம். ஆனால் அகுரணை உலமா சபை எமது ஊரிலுள்ள பிரச்சினை எமக்குத்தான் தெரியும், அதற்காக வேண்டி சில விளக்கங்களை கொடுக்க வேண்டியுள்ளோம். அதற்காக வேண்டி நாம் அவரை (உஸ்தாத் மன்ஸூரை) ஏசவோ, காபிர் என்றோர கூற மாட்டோம் என்றனர்.

அவர்கள் நடத்திய கூட்டத்தின் வீடியோவைப் பார்த்தாலும் கூட அதில் ஏசியதாக இல்லை. தற்போது இந்த விடயம் முடிவடைந்துள்ளது. மீண்டும் கருத்துச் சொல்லப் போனால் விடயம் இன்னும் பெரிதாகும். இன்று ஜம்மிய்யதுல் உலமாவுக்கும் நிர்வாக சபைக்கும் ஏசுகிறார்கள். நாம் பொறுமையோடும் மனவருத்தத்துடனும் உள்ளோம். இந்தச் சம்பவம் நடந்து முடிந்துள்ளது. ஒவ்வொரு தரப்பும் அவரவர் கருத்துக்களை சொல்லியுள்ளனர். இந்த விடயத்தை பூதாகரப்படுத்த வேண்டாம். மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மக்கள் சத்தியத்தின் பக்கம் இருக்க வேண்டும்.

## "நாம் பிளவுபடுவதும், கடுமையாக முரண்படுவதும் எம்மையே பலவீனப்படுத்தும்"



உஸ்தாத் மன்சூர் (நளீமி)
- பணிப்பாளர், அல்குர்ஆன் திறந்த கல்லூரி

நாம் ஓர் உயர்ந்த சிந்தனைக்காக உழைப்பவர்கள், பாடுபடுபவர்கள். எனவே, வார்த்தைகளிலும், நடத்தைகளிலும் எம்மிடம் ஆழ்ந்த கண்ணியம் காணப்பட வேண்டும். இந்தப் பின்னணியில்

அஸ்னாப் பள்ளியில் நடந்த கூட்டத்தை எதிராளிகளின் கூட்டமாக நாம் பார்க்கத் தேவையில்லை. அது ஒரு விமர்சனம். அதனை நாம் சமூகப் பிளவுகள் ஏற்படாமல், பாரிய மனக் கசப்புகள் ஏற்படாமல், எந்தவித வன்முறைகளும் இல்லாமல் எப்படி எதிர்கொள்வது என்பதைத் திட்டமிடுவோம்.

எமக்கு அவர்கள் முன்வைத்த விமர்சனங்களுக்குப் பதில் சொல்லும் உரிமை எமக்குள்ளது. அது பகிரங்கமாக முன்வைக்கப்பட்டமையால் பகிரங்கமாகவே எம் பதிலை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் உட்படுகிறோம்.

ஆனால், நாம் அதனை மிகவும் கண்ணியத்தோடும் மோசமான வார்த்தைகள் கடுமையான பிரயோகங்களைத் தவிர்த்தும் வெளியிடுவோம். அறிவுபூர்வமான வாதத்தையே முன்வைப்போம். எம்மிடம் தவறுகளிருந்தால் அதனை ஏற்றுக் கொள்வோம்.

எம்மை விமர்சித்துக் கூட்டம் நடாத்தியவர்கள் எமது சகோதரர்களே. அவர்களை நாம் மதிப்போம். ஏற்றுக் கொள்வோம். நாம் சிறுபான்மை சமூகம். நாம் பிளவுபடுவதும், கடுமையாக முரண்படுவதும் எம்மையே பலவீனப்படுத்தும். உங்கள் எல்லோர் மீதும் எனக்கு அதிகாரம் கிடையாது. ஆயினும் உங்களிடம் நான் இதனை வினயமாகவும், பணிவோடும் கேட்டுக் கொள்கிறேன்.

அல்லாஹ் எம்மை நேர்வழி நடாத்தி எம்மைப் பலப்படுத்துவானாக.

## "உலமா சபையின் நம்பகத் தன்மையில் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது"



உஸ்தாத் உஸைர் (இஸ்லாஹி)
அமீர் - இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

இலங்கையில் ஜம்மிய்யதுல் உலமா சபை போன்ற பலமான அமைப்பு தேவை. ஆனால் ஜம்மிய்யதுல் உலமாவின் நம்பகத் தன்மையில் சந்தேகத்தை உண்டாக் கின்ற பல நிகழ்ச்சிகள் தொடராக இடம்பெற்று வருகிறது. பொதுவாக இஸ்லாமிய சட்டத் துறையின் வளர்ச்சி கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனை இஸ்லாம் தொடர்ந்து பாதுகாத்து வந்துள்ளது. அந்த வகையில் இஸ்லாம் கருத்து வேறுபாடுகள் கொள்வதற்குரிய எல்லைகளை வகுத்து, அந்த எல்லையில் நின்று கருத்து வேறுபாடு கொள்வதற்குரிய உரிமையையும் உலமாக்களுக்குக் கொடுத்து, அதற்கு மாற்றுக் கருத்து சொல்பவர்கள் பேண வேண்டிய ஒழுங்குகளையும் சொல்லிக் கொடுத்து, அதனூடாக இஸ்லாமிய சட்டங்கள் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இந்தப் பின்னணியில் வரலாற்றில் உலமாக்கள் எப்போதும் சமூகத்தில் இஸ்லாம் பற்றிய கேள்விகள் மற்றும் சமூகத்தில் தோன்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை சொல்லும் போது ஷரீஆ சட்டங்களைப் பேணி, குர்ஆன் ஹதீஸ் வழிமுறைகளுக்கமைய வாழும் நாடு, காலப் பகுதி மற்றும் தீர்மானம் எப்படியான விளைவுகளைக் கொண்டுவரும் என்பதைப் பார்த்து முடிவுகளைச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் இஸ்லாம் எல்லாக் காலத்திலும் உயிர்ப்புடன் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. (பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடம் தண்ணீருக்காக போராடும் உடதலவின்ன ரடகஹவத்த மக்கள் !



எனது மயிர்கள் நரைத்தும், 65 வயதாகியும் நடையாகவே சென்று ஒரு குடம் தண்ணீரைப் பெறவேண்டிய அவலம் என் மரணத்திற்கு முன்னாவது மாறுமா? இதற்கான தீர்வுதான் என்ன? என்று உடதலவின்ன ரடகஹவத்தை யைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான ''உம்மு ஜிஹான்'' வருந்துகிறார்.

நீர் இணைப்பைப் பெறுவதற்காக ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் தலா 10,000 ரூபா வீதம் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபைக்குச் செலுத்துவதற்காக அக்கிராமத்தின் சங்கங்களில் ஒன்றான 'தியவர பிரஜாமுல சங்விதான' என்ற சங்கம் பெற்றுக் கொண்டுள்ளது.

அது சம்பந்தமாக அவர்களைத் தொடர்பு கொண்டபோது அவ்வமைப்பின் தலைவர் ஜீ. வீரசிங்க தெரிவிக்கையில், ''வேலைத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் மூன்று மாதங்களில் பணிகள் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. ஆனால் தற்கால இலங்கையின் அரசியல் சீரற்றதன்மை காரணமாக இவ்வேலைத் திட்டம் நடைபெறவில்லை. மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பணத்தின் மூலம் தேவையான நீர்க் குழாய்கள், கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஆரம்பிக்கவிருக்கிறது'' எனத் தெரிவித்தார்.

குடிப்பதற்கு மட்டும் ஒரு குடம் தண்ணீரைப் பெறுவதற்காக இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று இதே போல் ஏழு தடவை நீரைப் பெற நடக்க வேண்டிய அவல நிலை உம்மு ஜஹானுக்குப் போலவே ஏனைய ரடகஹவத்தை மக்களும் தண்ணீரைப் பெற அவதிப்படுகின்றனர். மற்றும் மழை நீரையும் வீணாக்காமல் சேமித்து அன்றாடத் தேவைகளுக்கு உபயோகப் படுத்துகின்றனர்.

இவ்வூரிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள அயல் கிராமங்களான மீகமன சந்தி மற்றும் வியனமுல்ல போன்ற கிராமங்களுக்கு நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் தமக்கான நீர் கிடைக்கவில்லையென இக்கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மேலும் குடிநீர் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கான நீர் கொஸ்வத்த சமுர்த்தி கிணற்றிலிருந்து பெறப்பட்டு ஒரு குழாய் மூலமே முழுக் கிராம மக்களுக்கும் நீர் விநியோகிக்கப்படுகின்றது என அக்கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஜானியா கூறினார்.

இது குறித்து கலதெனிய பிரதேசத்திற்கு உட்பட்ட கிராம சேவகரிடம் தொடர்பு கொண்டபோது, ''ஐம்பது குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் ரடகஹவத்த எனும் பிரதேசத்திற்கு பொல்கொல்ல அணையிலிருந்து தொரகமுவ வீதி வழியாகவே நீர் விநியோகிக்க வேண்டியுள்ளது. இருப்பினும், அப்பகுதி மேடாக இருப்பதனால் நீர் மேல்நோக்கிச் செல்வது சிரமமாக இருக்கின்றது. அத்துடன் எமது பிரதேச சபை உறுப்பினர் A.M.J.M. நவ்பர் அவர்களிடமும் இது குறித்து முறையிட்டிருந்தோம். அவரும் செய்து தருவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார். இருப்பினும் எவ்வித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

மேலும் சுகாதார மத்திய நிலையம் மற்றும் கல்விக் காரியாலயம் சார்ந்த உறுப்பினர்கள் சேர்ந்து ''கொட்டாஸ தினய'' என பிரதேச சபையில் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் நீரில்லாத பிரச்சினைகள் பற்றிப் பேசிய போது நீர் விநியோக வண்டி மூலம் மட்டுமே அக்கிராமத்திற்கு நீர் பெற்றுக் கொடுத்தனர்'' என அவர் தெரிவித்தார்.

குழாய் நீர் மற்றும் தண்ணீர் தாங்கியிலிருந்து ஒரு நாளைக்கு ஒரு குடும்பத்திற்கு ஆறு கொள்கலன்களில் மட்டுமே நீரைப் பெற்றுக் கொள்ள முடியும் என திருமதி ஜானியா கூறுகிறார்.

இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினரான A.M.J.M. நவ்பர் என்பவருடன் தொடர்பு கொண்டபோது அவர் இது குறித்து விளக்கமளிக்கையில், ''நீர் விநியோக மற்றும் வடிகால் அமைப்பிடம் மனுத்தாக்கல் செய்திருந்தேன். 2016 ஆம் ஆண்டு ரடகஹவத்த பிரதேசத்திற்கு நீர் விநியோகிப்பதற்காக மதிப்பீடு செய்திருந்தனர். இருப்பினும் அப்பிரதேசம் மேடாகக் காணப்படுவதால் நிதி ஒதுக்கீடு பற்றாக் குறையாக இருக்கின்றது. மேலும் மீண்டும் ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். மேலும் தற்கால அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இத்திட்டம் நடைபெறுவது பற்றி நம்பிக்கை குறைவாகக் காணப்படுகின்றது'' எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் மத்திய மாகாணத்தில் ஊடகத் துறையை வளர்க்கும் நோக்கில் அமெரிக்க நிதி உதவியுடன் நடத்தப்பட்ட பயிற்சிக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை. பங்களித்தோர் - எம்.எம்.ஏப் ஸீனியா, எம்.வை.ரிகாஸ், பீ.டப். சதர்ஷினி.எம்.ஜே. எம்.ஸூபியான், என்.ரசிகுமார், பஸ்னா பாயிஸ், அப்துல் ரஹீம்

---

# முசலியின் அபிவிருத்தி

## யாரால், எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும்...?

• இஸ்ஸதீன் றிழ்வான்

30 வருட யுத்தம், யுத்த காலத்தில் அகதியாக வாழும் காலத்தில் அகதி முகாம்களின் சோகங்கள் பேசி இரண்டு தசாப்தங்களை கடத்தினோம். வாழ்ந்த ஓலைக் குடிசைகளுள் வடிந்த மழைத் துளிகள் பற்றிக் கதை பேசினோம்.

யுத்தம் முடிவுற்று மீள்குடியேற்றம், வட்ஸ்அப் குழுக்களில்தான் அதிகமாக மீள்குடியேற்றம், அபிவிருத்தி என்று பல விடயங்களை பேசிப் பேசி காலம் கடந்துபோகிறது.

அரசு நியமிக்கும் அரச அதிகாரிகள், மீள்குடியேற்ற செயலணிகள் தங்களுக்கு கிடைக்கும் நிதியை அடிப்படையாகக் கொண்டு அல்லது அவர்கள் அழைத்து வரும் நிதி நிறுவனங்கள் விரும்பும் வேலைத் திட்டங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகிறது.

ஆனால் அபிவிருத்தியடைந்த நகரங்களை அடிப்படையாக் கொண்டு ஒரு பிரதேசத்திற்கு தேவையான திட்ட வரைபு ஒன்றை மேற்கொள்ளும் முறைமை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முசலிப் பிரதேசத்தில் அங்கம் வகிக்கும் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கிய கல்விமான்கள், அனுபவசாலிகள், பல்துறைசார் சிந்தனையாளர்களையும் இணைத்த குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

சிவில் சமூகத்தை மையமாகக் கொண்டு, முசலிப் பிரதேச அபிவிருத்திக் குழு அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி, கள ஆய்வுகளை மேற்கொண்டு தேவைகளைப் பட்டியலிட வேண்டும்.

முசலிப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்தின் சிறப்பம்சங்கள், வசதி வாய்ப்புக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

குறுகிய, நீண்டகால வேலைத் திட்டங்கள் பட்டியலிடப்படல் வேண்டும், அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் ஒதுக்கப்படும் நிதியை இந்த அடையாளப்படுத்தப்பட்ட பட்டியலினூடாக ஊர், கட்சி என்ற பாரபட்ச மற்று முன்னெடுத்தல் வேண்டும்.

முசலிப் பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், வாழ்வாதாரம், கலை, கலாசாரம், கிராமிய உட்கட்டமைப்பு என்று எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியதான முன்மொழிவுகள் இடம்பெறல் வேண்டும்.

விளையாட்டு மைதானம் தேவை என்பதற்காக எல்லா ஊரிலும் விளையாட்டு மைதானம் அமைக்கத் தேவையில்லை.



கைத்தொழில் பேட்டை வேண்டும் என்பதற்காக எல்லா ஊர்களிலும் கைத்தொழில் பேட்டை நிர்மாணிக்கத் தேவையில்லை,

துறைமுகம் தேவை என்பதற்காக எல்லா ஊர்களிலும் துறைமுகம் கட்டத் தேவையில்லை,

உயர்கல்விக் கூடங்கள் தேவை, அதற்காக முசலிப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு ஊர்களுக்கும் ஒவ்வொரு உயர் கல்விக்கூடம் தேவையில்லை.

குறுகியகால (Short Term), நீண்டகால (Long Term), அவசர கால (Very urgent and very important) வேலைத் திட்டங்கள் என்று தேவைக்கேற்ப திட்டங்களைப் பிரிப்பதனூடாக திட்டங்களை வேலைகளை மக்களுக்குச் சரிவரக் கொண்டு சேர்க்க முடியும்.

ஊரில் பாதை இல்லை எனும் போது விளையாட்டு மைதானத்திற்கு சுற்று மதில் கட்டுவது எப்படி நியாயம்..?

குடிநீர் இல்லை எனும் போது மரநடுகை திட்டம் எதற்கு..? என்ற கேள்விகள் இந்த நேரத்தில் நினைவுக்கு வருகிறது.

கடந்த காலங்களில் பிரதேச அபிருத்திக்கு என வந்த நிதி சில முறை[illegible] ஆலோசனைகள், கட்சி பேதம், ஊர் வாதம் என்ற காரணங்களால் திரும்பிச் சென்றுவிட்டதை நாம் அறிவோம். ஆனால் இது தொடர்ந்தும் நடைபெறக் கூடாது என்பதால் இந்த விடயங்களை நினைவுபடுத்துகின்றேன்.

பிரதேச அபிவிருத்தி என்று சிந்திக்கும் போது கீழ்வரும் விடயங்களை கவனத்தில் கொள்வோம். குக்கிராமங்களை கட்டியெழுப்புவதற்கான ஆலோசனையாக சிலவற்றை இங்கு பட்டியலிட்டிருக்கின்றேன், எதிர்காலங்களில் மீதியை சமர்ப்பிப்பேன்.

1. இதுவரை வீடில்லாத, ஓலைக் குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு வீடு வழங்குதல்,
2. இலவச மின்சாரம் மற்றும் தண்ணீர் இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டும், (சூரிய சக்தி மற்றும் காற்று ஆலைகள் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்தல், இவற்றின் மூலம் எமது பிரதேசங்கள் அனுபவித்து வரும் தொடரான வரட்சிக்கு முடிவு காணலாம்)
3. பாடசாலைகள் தரமுயர்த்தப்படல் வேண்டும், (அடிப்படைத் தேவைகள் கூடநிறைவேற்றப்படாமல் பல பாடசாலைகள் இயங்கிக் கொண் [illegible])
4. வடக்கு அகதிகளின் மீள்குடியேற்றம் துரிதகதியாக அனைத்து வசதிகளுடன் உத்தியோகபூர்வமாக இடம் பெற நடவடிக்கை எடுத்தல், (மீள் குடியேற்றத்திற்குத் தேவையான போதிய அத்தியவசிய, அடிப்படை வசதிகள் இன்மையால் பலர் அகதி முகாம்களிலேயே இன்னும் வாழ்ந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது).
5. கிராமிய மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஸ்தாபித்தல், (Small industrial hub)
6. சுற்றுச் சூழல், நாகரிகம் மற்றும் கலாச்சாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை கிராமங்களில் முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல்,
7. தொழில்வாய்ப்பு, மேற்படிப்புக்குத் தேவையான வட்டியில்லா கடன் முறையை அறிமுகம் செய்தல்,



8. பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் செல்லும் முறைமையைத் தடுத்தல்,
9. பிரதேச மட்டத்தில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தல், (play ground / stadium with full facilities)
10. பிரதேச மட்டத்தில் சந்தைத் தொகுதிகளை கட்டுதல்,
11. ஒவ்வொரு பிரதேசங்களையும் ஏதாவது ஒரு துறையில் அபிவிருத்தி சார்ந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தல் வேண்டும்.
12. பிரதேச மட்டத்தில் வங்கிக் கிளைகளைத் திறக்க நடவடிக்கை எடுத்தல்,
13. மாவட்ட மட்டத்தில் கல்லூரிகள் / பல்கலைக்கழகங்கள் அல்லது அதன் அலகுகளை நிர்மாணித்தல், (college of educations, Universities or its units)
14. புதிய தலைமுறையினர் விரும்பி வாழும் வகையில் கிராமிய உட்கட்டமைப்பு பணிகளை அவசர அவசியமாக ஆரம்பிக்க வேண்டும்.
15. வருடத்தில் ஒரு பருவமாய் மழையை மட்டும் நம்பி வாழும் விவசாயிகளுக்கு ஏனைய காலங்களில் வருமானம் ஈட்டும் வகையில் புதிய பயிற்சிகள், வழிகாட்டல்களை வழங்குதல், (Attracting good-paying non-agricultural jobs to the community to provide diversification and additional income opportunities),
16. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை முழுமையாக நம்பி வாழும் கிராமங்களுக்கு அதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய / கற்பிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,
17. பிரதேச மட்டத்தில் நூலகம், கலாசார மண்டபம் அடங்கிய நிலையங்களை நிர்மாணித்தல்.
18. சுகாதாரத்துறையை மேம்படுத்த அவசர நடவடிக்கை எடுத்தல், (சில பிரதேசங்களில் வாரத்தில் ஒரு நாள் மாத்திரம் வைத்தியர் விஜயம் செய்வதால் சுகாதார ரீதியாக வறிய மக்கள் பாரிய சவால்களை முகங்கொடுக்க நேரிடுகிறது).
19. கிராமிய, பிரதேச மட்டத்தில் லங்கா ஒசுசல போன்ற அரச மருந்தகங்களின் கிளைகளை நிறுவி ஏழை மக்களுக்கு உதவுதல்,
20. கடலுடன் இணைந்த கிராமங்களுக்கு கடற்தொழிலை மேம்படுத்தும் வகையில் துறைமுகங்களை உருவாக்கல், தரமுயர்த்தல் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

மொத்தத்தில் சாதாரண மக்கள் நிம்மதியாக வாழும் மாதிரிக் கிராமங்களை கட்டியெழுப்புவதே இந்தப் பரிந்துரையின் முழு நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• முஹம்மத் பகீஹுத்தீன்

# யானைகளுக்கு இடையில் சிக்கித் தவிக்கும் நாணல்

கொந்தளிக்கும் கடலில் இலங்கை முஸ்லிம் சமூகம் பயணிக்கிறது. வழிகாட்டும் அறிஞர்கள் சபையின் கருவறையில் அறியாமை சூல் கொண்டுள்ளதாக பொதுக் கருத்து நிலவுகிறது. அது உண்மையும் கூட. எதில் வழிகாட்ட வேண்டுமோ அந்த விடயத்தைப் புறந்தள்ளி விட்டு வேறு விடயங்களில் கூடுதல் கரிசனை காட்டுவதையும் அவதானிக்க முடிகிறது.

நாடு கொந்தளிப்பான நிலையில் இருக்கும் போது அறிஞர்கள் சீர்கெட்டுப் போனால் சமூகம் குட்டிச் சுவராகும். இந்நிலையில் குர்ஆனிய வழிகாட்டல்களையும், சுன்னாவின் போதனைகளையும் கடைப்பிடித்து சமூக ஒற்றுமைக்காக நடவடிக்கை எடுப்பதே தற்போதுள்ள முதன்மைத் தேவையாகும். நதியினில் வெள்ளம் என்று கரையொதுங்கும் போது கரைதனில் தீப்பற்றி எரிகிறது. இதுதான் முஸ்லிம் சமூகத்தின் பரிதாப நிலைமை. இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் அறிஞர்கள் சபை வழிகாட்டும் ஒளி விளக்காகவே இருக்க வேண்டும். ஒருபோதும் மக்களுக்கு நெருப்பு வேலியாக அமையக் கூடாது.

பன்மைத்துவ சமூகத்தில் வாழும் போது சிறுபான்மை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கிற்கான சட்டத்துறை வழிகாட்டல்கள் கால, இட, சூழலை கவனித்து தீர்மானிக்கப்பட வேண்டும். ஒரு மத்ஹபின் சிந்தனை வட்டத்தில் மாத்திரம் சார்ந்து நின்று அந்த இலக்கை அடைய முடியாது. ஸஹாபாக்கள் மத்தியிலே பல மத்ஹபுகள் காணப்பட்டன.

இறை தூதரின் நேரடி வார்ப்பில் பயின்ற முதல் பரம்பரையிடம் காணப்படும் நெகிழ்வுத் தன்மையையும் கருத்து வேறுபாடுகளையும் கவனத்திற் கொண்டால் மாத்திரமே இலங்கை சிறுபான்மைக்கான சட்ட வழிகாட்டல்களுக்கான பெரும் பகுதியைப் பெற்றுக் கொள்ள முடியும். நெருக்கடிகள் தோன்றும் போது, தாம் சார்ந்துள்ள சிந்தனை முகாம்களின் வட்டத்தின் நிழலில் நின்று பிரச்சினையை அணுகாமல் சத்தியம்-அசத்தியம், நீதி-நேர்மை, நன்மை-தீமை, உண்மை-பொய் சமூக எழுச்சி-வீழ்ச்சி, சமூகநலன்கள் என்ற விரிந்த அடிப்படையில் நின்று நிதானமாக பிரச்சினைகளை நிறுத்துப் பார்க்கும் போது தான் சரியான நிலைப்பாடுகளின் பக்கம் சார்ந்து பயணிக்க முடியும்.

நுணுக்கமும், சாணக்கியமும் இல்லாத அரசியல் தீர்மானங்கள், முட்டாள் தனமான நிலைப்பாடுகள், கண்மூடித் தனமாக ஒத்தோதும் பழக்கங்கள் யாவும் நிச்சயமாக முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சோதனையே.

இந்த வேளையில் திசைமாறிய அறிஞர்களும் சீர்கெட்ட உலமாக்களும் சோதனை மேல் சோதனையாகும். வேதனையை பங்குபோட வேண்டியவர்கள் மக்களுக்கு சோதனையாகவும் சுமையாகவும் மாறியுள்ளார்கள். சீர்கெட்ட இந்த உலமாக்கள் சமூக எழுச்சிப் பயணத்தில் பேரனர்த்தம் மட்டுமல்ல தோல்வியின் நிழலாகவே மதிக்கப்படுகின்றனர்.

முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: துணிமணி இத்துப் போவது போல் சிலரின் உள்ளங்களில் மனனம் செய்யப்பட்ட குர்ஆன் வசனங்களும் இத்துப்போகும். அவர்கள் அதனை ஓதுவார்கள். ஆனால் அதற்குச் சுவை இருக்காது. ஓதுவதில் ஆர்வமும் இருக்க மாட்டாது. அவர்கள் செம்மறித் தோல் போர்த்திய ஓநாய் உள்ளம் கொண்டவர்கள். (பசுத் தோல் போர்த்திய புலிகள்) அவர்களின் செயற்பாடுகளுக்குப் பின்னால் பேராசைதான் இருக்கும். இறை பயம் இருக்காது. குறைகள் விட்டால் சரிசெய்யலாம் என்பர். தவறுகள் செய்தால் அல்லாஹ்வுக்கு நாம் இணை வைப்பதில்லை. எனவே எங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும் என்பர்.'' (ஆதாரம் தீர்மதி 3356, தாரமீ 3251)


நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸவ்பான் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''நான் எனது சமூகம் குறித்து மிகவுமே பயப்படக் கூடிய விடயம் எனக்குப் பிறகு வரும் வழிகெடுக்கும் இமாம்கள் பற்றியேயாகும்.'' (ஸில்ஸிலா ஸஹீஹா -அப்லானி (ரஹ்), பா:4, பக்:109)

வழிகெடுக்கும் இமாம்கள், கதீப்மார்கள், தலைவர்கள் அசத்தியத்தை சத்தியமாகக் கூறும் போது மக்கள் அவர்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாக பொய்யை உண்மை என ஏற்றுக் கொள்வார்கள். சத்தியம் எது அசத்தியம் எது எனத் தெரியாத நிலையில் பொதுமக்கள் தடுமாறுவார்கள். இது சமூகத்தில் தோன்றும் மிகப் பெரிய சாபக்கேடு. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் சர்ந்தர்ப்பவாத அறிஞர்கள் குறித்து மிகவும் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

கொந்தளிக்கும் இந்த நேரத்தில் கரை சேர எத்தனிக்கும் பயணிகள் நாம். கடலில் கொந்தளிப்பு என்று கரைக்கு வந்தால் அங்கு நெருப்பு பற்றி எரிகிறது. இப்போது என்ன தேவை?

1. இலங்கை முஸ்லிம் சமூகம் கொந்தளிக்கும் கடலில் பயணிக்கிறது. எனவே திறமையான ஒரு புதிய மாலுமி தேவை. அறிஞர்கள் சட்ட சபை வித்தியாசமான சிந்தனைகளை உள்வாங்கி சூரா செய்யும் நிலைக்கு இன்னும் வளரவில்லை. அந்தப் பகுதி அங்கு ஒரு இருட்டறையாக மாறியுள்ளது. எனவே மக்கள் மொத்தமாகவே அறியாமை வாழும் வீடாக அறிஞர்கள் சபையைப் பார்க்கின்றனர். அதுவும் ஒரு பக்கப் பார்வையே. இரு பக்கமும் ஒளிபெற வேண்டிய தேவை உள்ளது. இருப்பதை சிதைப்பது எமது நோக்கமல்ல. சிதையாமல் பாதுகாக்கவே தலைமைத்துவ மாற்றத்திற்காகக் குரல் கொடுக்கின்றோம்.

இந்த மாற்றத்திற்கு முஸ்லிம் சமூகம் துணியாவிட்டாலும் கூட பயணம் தொடரும். காலம் பல மாற்றங்களைச் செய்யும். அது பல சமயங்களில் கசப்பாக அமையலாம். இதற்கு வரலாறு சான்று. காரணம் அல்லாஹ் வகுத்த நியதிகள் மாறுவதில்லை. ''ஒரு முஃமினும் காபிரும் கடலில் விழுந்தால் நீச்சல் தெரிந்தவர் மட்டுமே தப்பித்துக் கொள்வார். அறியாமைக்கு அல்லாஹ்வின் ஆதரவு கிடையாது. கல்லாத முஸ்லிம் மூழ்கிவிடுவார். கற்றுக் கொண்ட காபிர் தப்பித்து விடுவார்'' அறிஞர் முஸ்தபா மஹ்மூத்



2. நாட்டில் ஆயிரத் தெட்டு பிச்சினைகள் உள்ளன. ஒவ்வொன்றும் முஸ்லிமின் இருப்புக்கே ஆபத்தானது. ஆனால் சவால்களை எதிர்கொள்வதற்கு முன்னர் உள்முற்றத்தில் ஒற்றுமையும் கூட்டிணைப்பும் தேவை. அந்த ஒற்றுமை களத்தில் உள்ள பல்வேறு சிந்தனை முகாம்களாக அல்லது இயக்கங்களாக அல்லது கட்சிகளாக அல்லது சமூக நிறுவனங்களாகப் பிரிந்து செயற்படுபவர்களுக்கு மத்தியில் ஏற்பட வேண்டியுள்ளது.

3. கருத்து வேறுபாடுகள், சிந்தனைப் பிரிவுகளுக்கு அப்பால் பொதுத் தளத்தில் இணைந்து செயலாற்றுவதற்கும், கருத்து வேற்றுமைகளைப் பண்பாட்டுடன் அணுகுவதற்குமுரிய இஸ்லாமிய பிக்ஹு கலை பிக்ஹுல் இக்தி லாஃப் எனப்படுகிறது. அறிஞர்கள் சட்ட சபை தனது அடிப்படை வேலையாகச் செய்ய வேண்டிய இந்த விடயத்தில் கோட்டை விட்டுள்ளது.

எமக்குத் தேவை செயற்பாட்டுக் களமே. இதன் மூலம் கருத்தில் உள்ள மோதல்கள், தனிமனிதர்களுக்கிடையிலான மோதல்களாகவும் குழுக்களுக்கிடையிலான மோதல்களாகவும் மாறும் அபாயத்தைக் கண்டிப்பாகத் தடுக்கலாம்.

4. சமூக தளத்தில் மாற்றத்திற்காகப் பணியாற்றுவது நாம் மட்டுமே என்ற எண்ணம் அடியோடு களையப்பட வேண்டும். ஒவ்வொரு சிந்தனை முகாம்களும் இந்த விடயத்தில் வெளிப்படையாக நடந்துகொள்ள வேண்டும்.

5. கிளைத் தலைமைகளுக்கு பொறுப்பு வழங்கப்படும் போது அத் தலைமைகள் ''விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல'' என்ற புரிதலுடன் பணியாற்ற வேண்டும். தலைமை என்பது ஒரு சேவை. அது ஒரு பொறுப்பு. அது கௌரவமோ அல்லது கட்டிக் காக்கும் பதவியோ அல்ல. நன்மை செய்து துன்பம் வாங்கும் மனதுள்ளவர்கள் தான் அங்கு வரவேண்டும். ஈகோ மனதில் இருந்தால் உறவுகள் வளராது. அதை அர்ப்பணிக்கத் தெரியாவிட்டால் தலைமைக்கு வரக் கூடாது.

6. தலைமைத்துவம் விடுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது மக்களுக்கு வாஜிப். அச்சந்தர்ப்பங்களில் மக்கள் மௌனமாக இருப்பதுவே துரோகம் என்ற புரிதல் தலைமைக்குத் தேவை.

7. விமர்சனங்கள் என்பது யாருடைய மனதையும் புண்படுத்துவதற்கு அல்ல. அவ்வாறே விமர்சிக்கப்பட்டவரை வெறுக்கிறோம் அல்லது குற்றவாளியாகப் பார்க்கிறோம் என்ற அர்த்தமும் கிடையாது. அது ஒரு வளர்ச்சி. அதை ஏற்க முதிர்ச்சி தேவை. இங்கே பெரிய நிறுவனங்கள் சிறிய நிறுவனங்கள் என்ற பாகுபாடும் கிடையாது. எனவே விமர்சனங்களை உள்வாங்கப் பழகுங்கள்.

8. சேவைக்காகப் பதவிக் கதிரையில் ஏறி அமர்ந்த தலைவர்கள் தக்க சமயத்தில் இறங்கி வருவதற்கும் ஒத்துக் கொள்ள வேண்டும். சிம்மாசன நோயுள்ளவர்கள் தான் கீழே இறங்கி வர மாட்டார்கள்.

9. நாங்கள் மனிதர்கள். மனிதர்கள் பலவீனமானவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். நமது செயற்பாடுகள் சரியாக இருப்பது போலவே தவறாகவும் இருக்கலாம். எனவே தவறு நிகழ்வது தீமையன்று. ஆனால் தவறுகள் தொடராமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

10. சட்ட சபை அல்லது அது போன்ற சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவின் போது ஊரில் உள்ள சகலரும் நமக்குத் தேவை என்ற மனோபாவம் வளர்க்கப்பட வேண்டும். பலர் பல்வேறு வழிகளில் நமது இலக்குகளுக்கு உதவியாகப் பணியாற்றலாம். அவற்றை நாம் அங்கீகரிக்க வேண்டும். நமது மத்ஹபுக்கு வெளியில் உள்ளார் என்பதற்காகப் புறந்தள்ளக் கூடாது.

11. அனைத்து விவகாரங்களையும் நாமே செய்வோம் என்ற நிலை மாற வேண்டும். துறை சார்ந்தோருக்கு அந்தத் துறைகளில் இடம் கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் தாமே செய்ய வேண்டும் என்று எண்ணுவது கொந்தளிக்கும் கடல் பயணத்தில் அழிவைக் கொண்டு வரும்.

அசட்டுத் தனமான சிந்தனைகளைப் பரவவிட்டு பின்னர் கைசேதப்படுவதில் அர்த்தமில்லை. கருத்து முரண்பாடுள்ள விவகாரங்களில் ஒரு சாராரின் கருத்தைக் கட்டாயப்படுத்தும் நிலைப்பாட்டை அறிஞர்கள் சபை மீள்பரிசீலினை செய்ய வேண்டும். இதில் ஏற்படும் பிடிவாதம் 90 வருடம் பழைமை கொண்ட சட்ட மன்றம் சொந்தங்களின் கைகளாலேயே இடிக்கப்படும் ஆபத்தைக் கொண்டு வரும்.

சிந்தனை சீர்திருத்தம் குறித்து கவனத்தைக் குவிப்போம். சிந்தனைத் தீவிர வாதம் பொல்லாதது. நாட்டை, வீட்டை அழிக்கக் கூடியது. வரமுன் காப்போன் புத்திசாலி. கோழைகளாகச் செத்து மடிவதற்கு இடம்கொடுக்கமால் நாட்டையும் வீட்டையும் காப்போம்.

சவூதி சட்டமன்றம் வழங்கிய இறுக்கமான பத்வாக்கள் தீவிரத்தை வளர்த்தது என்று இன்று தெளிவாகிறது. இது குறித்து அறிஞர் பஷீர் ஹஸன் கூறுவதை கேளுங்கள்: ''சட்ட வசனங்களைப் புரிந்து கொள்வதில் குறுகிய பார்வையும் நடைமுறையைப் புரிந்துகொள்ளாத தீர்ப்புக்களும் ஷரீஆவின் இலக்குகளுக்கு இடம் கொடுக்காமல் சட்ட வசனத்தை நேரடியாகப் பின்பற்றியமையும் பல பிறழ்வுகளுக்கு இட்டுச் சென்றன. அதன் விளைவால் இன்று உலக முஸ்லிம் உம்மத் பெரும் அவஸ்தைப்படுகிறது.''

இலங்கையின் அறிஞர்கள் சபையும் அலட்சியப் போக்கில் பத்வாக்களை தொடர்ந்தால் முதலில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் சிந்தனைச் சிக்கலில் சீரழிவார்கள். இரண்டாவதாக பஷீர் ஹஸன்கள் சுட்டு விரலாக உருவாகுவார்கள். அப்போது சட்ட சபை புனிதமானது என்று பேசி அர்த்தம் கிடையாது.

## பாராளுமன்றத்தின்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஆதரவான தரப்பினர் பாராளுமன்ற நடவடிக்கைகளைச் சீர்குலைக்கும் வண்ணம் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டிருந்தனர். சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற விடா மல் இவர்கள் தடை செய்தனர். இதன்போது சபாநாயகர் தாக்குதலுக்கு உள்ளானார். பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்கள் தாக்கப்பட்டனர். பொதுச் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இவை தொடர்பில் சபாநாயகர் உட்பட பல அமைப்புக்களும் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனை அடுத்தே பொலிசின் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இந்த முறைப்பாடு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சபாநாயகர் கரு ஜயசூரியவால் பிரதம நீதியரசர் நளின் பெரேராவுக்கு வரையப்பட்டதாக சமூக ஊடகங்களில் உலாவிய கடிதம் தொடர்பிலும் சிஐடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## நிறைவேற்றதிகாரத்தை... (01 ஆம் பக்கத் தொடர்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 19ஆவது திருத்தத்தின் கீழ் மீண்டும் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்குப் போட்டியிட முடியாது. எனவே அவர் நிறைவேற்று அதிகார முறை ஒழிப்பதை வரவேற்கிறார். மறுபக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடவில்லை. இதனால் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரத்தை வழங்கி அதனூடாக செயற்படுவதற்கு முயற்சிக்கிறார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக உறுதியளித்து பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இரண்டாவது முறையும் ஜனாதிபதி பதவியில் இருப்பதற்கான நிலைப்பாட்டை மாற்றியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு அரசியல் தலைவர்கள் தமது தேவைகளுக்காக அரசியலமைப்பைத் தயாரிக்க முற்படக்கூடாது. அரசியலமைப்பு என்பது நாட்டு மக்களின் சமூக ஒப்பந்தத்தைக் கொண்ட புத்தகமாகும்.

அதேநேரம், நாட்டில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது. இவ்வாறு இரு அதிகார மையங்களுடன் நாட்டைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வது பொருத்தமானதாக இருக்காது. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குமாறு காலிமுகத்திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அதே கூட்டத்தில் உரையாற்றிய ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, அடுத்த தேர்தல் பற்றிக் கதைத்தபோதும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது பற்றிப் பேசவில்லை. இவ்வாறான முரண்பட்ட நிலைமைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வடக்கு கிழக்கில்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசம் இருந்த 52.14 ஏக்கர் அரச, தனியார் காணிகள் 18 ஆம் திகதி விடுவிக்கப்பட்டன. இதற்கான ஆவணங்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் பாதுகாப்புப் படைகளின் முல்லைத் தீவு படைத் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுருவினால் கையளிக்கட்டன்.

இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை பகுதியில் 06 ஏக்கர் தனியார் காணியும் சிலாவத்தை பகுதியில் 01 ஏக்கர் தனியார் காணியும் உப்புமாவெளியில் 10.05 ஏக்கர் தனியார் காணியும் செம்மலைப் பகுதியில் 10 ஏக்கர் தனியார் காணியும் கோம்பாவில் பகுதியில் 03 ஏக்கர் காணியும் வள்ளி புனம் பகுதியில் 02 ஏக்கர் காணியும் புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியில் 01 ஏக்கர் காணியும் உள்ளடங்கலாக 52.14 ஏக்கர் காணி படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் வசமுள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி முன்னர் தெரிவித்திருந்தார்.

## தமிழ் கூட்டமைப்புக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

பல தரப்புக்களுடனும் நாம் நீண்ட நாட்களாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்ற தொடரில் நாம் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். அதில் எமது கோரிக்கைகளுக்கு எழுத்துமூல இணக்கப்பாட்டை வழங்குமாறு கோரியிருந்தோம். அதற்கமைய எழுத்து மூல இணக்கப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந் [illegible] தலைவர் வழங்கியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

முக்கியமாக அரசியலமைப்பு மாற்றம், சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணிப் பிரச்சினைகள், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணிகள் கையகப்படுத்தப்படுவதை நிறுத்துதல், ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீள வழங்குதல், ஐ.நா 30/1 தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதாக அரசாங்கம் இணங்கியவற்றை துரிதமாக நடைமுறைப்படுத்தல் போன்ற கோரிக்கைகளுக்கு நாம் எழுத்துமூல உத்தரவாதத்தைக் கோரியிருந்தோம். அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்ததுடன், அவற்றை எழுத்துமூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் கையளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் பல்கலைக்கழகத்தை நிறுவிய பாத்திமா அல் ஃபிஹ்ரி



உலகின் முதல் பல்கலைக்கழகமான அல் கரவைன் பல்கலைக்கழகத்தை நிறுவியவர் பாத்திமா அல் ஃபிஹ்ரி எனப்படும் அறிவுஜீவி ஆவார். இப் பல்கலைக்கழகம் சாதாரண கல்வி நிலையமாகவே தொடங்கப்பட்டது. அதில் பல்வேறு தத்துவஞானிகளும், கல்விமான்களும் தமது கல்வியைப் பூர்த்தி செய்துள்ளனர்.

தூனிசியாவிலுள்ள கரவைன் பல்கலைக்கழகமே உலகில் முதன் முதல் உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகமாகும். தூனிசியாவிலுள்ள கைரவான் நகரில் பிரசித்தி பெற்றிருந்த முஹம்மத் அல் ஃபிஹ்ரி அல் கைரவான் எனும் செல்வம் கொழித்த செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்த ஒருவரே பாத்திமா அல் ஃபிஹ்ரி எனப்படும் உயிர்த்துடிப்புள்ள பெண்.

கைரவான் நகரம் கி.பி. 670 இல் உமையா வம்சத்தினரால் நிர்மாணிக்கப்பட்டது. 1300 ஆண்டுகளுக்கு முன்னர் கரவைன் இஸ்லாமிய புலமைத்துவம், கலாசாரம், மற்றும் நாகரிகம் என்பவற்றின் தலைநகராய் விளங்கியது. பள்ளிவாயலை ஒட்டியே இக்கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கரவைன் நகரம் தற்போது யுனெஸ்கோவினால் உலக மரபுரிமை நகராகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் கரவைன் அப்பாஸியக் கலீபாக்களால் ஆட்சி செய்யப்பட்டது. அவர்கள் ஆபிரிக்காவுக்கு அமைதியைக் கொண்டு வந்து சிசிலியை வெற்றி கொண்டார்கள்.

பாத்திமா அல் ஃபிஹ்ரியின் வாழ்க்கை வரலாறு குறித்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. இத்ரீஸிகளினுடைய தலைநகராய் விளங்கிய பாஸ் நகரின் குடிமக்களாக பாத்திமா ஃபிஹ்ரியின் குடும்பம் இருந்தது. 9 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கரவைனிலிருந்து பாத்திமா ஃபிஹ்ரியின் குடும்பம் பாஸுக்கு புலம்பெயர்ந்தது.

கரவைனில் இஸ்லாமிய பல்கலைக்கழகமொன்றை நிர்மாணிப்பதில் பாத்திமா ஃபிஹ்ரி அவரது குடும்பத்தின் சொத்துக்களை பெருமளவு செலவு செய்தார். பிரமாண்டமான கட்டங்கள், விசாலமான வீதிகளோடு உருவாக்கப்பட்டன. கரவைன் பல்கலைக்கழகம் ஒரு கோட்டை போன்று 14 வாயில்களைக் கொண்டிருந்தன.

இப்பல்கலைக்கழகத்தில் பாத்திமா ஃபிஹ்ரியின் கணவரும் தந்தையும் சகோதர்களும் மரணித்ததன் பின்னர் அவருக்கும் அவரது சகோதரி மர்யத்திற்கும் பெருந்தொகை செல்வம் வாரிசுரிமையாகக் கிடைத்தது. அவர்கள் இருவரும் சிறந்த கல்விமான்கள். இதனால் தமது முழுச் சொத்துக்களையும் முஸ்லிம்களின் கல்விப் பணிக்காக ஒதுக்குவதற்குத் தீர்மானித்தனர்.



பாஸிலுள்ள பள்ளிவாயல்கள் போதுமான இட வசதியற்றவை என்பதை உணர்ந்த அவர்கள் கி.பி. 859 இல் பாஸிலும் கரவைனிலும் அந்தலூசியாவிலும் பல பள்ளிகளை நிர்மாணித்தனர். இவ்விடயத்தில் மர்யம் அவர்களின் சொத்துக்கள் பெருமளவு பயன்பட்டன. பாத்திமா அல் ஃபிஹ்ரி தூனிசியாவில் அல் கரவைன் பள்ளிவாயலையும் பல்கலைக்கழகத்தையும் நிர்மாணித்தார்.

பெரும்பான்மையான உலக வரலாற்றாசிரியர்களின் கருத்தில் அல் கரவைன் பல்கலைக்கழகமே உலகில் தோன்றிய கலைமானிப் பட்டம் வழங்கிய முதல் பல்கலைக்கழகமாகும். இப்பலைக்கழகத்தில் நிர்மாணப் பணிகளில் பாத்திமா அல் ஃபிஹ்ரி மேற்பார்வை செய்துள்ளார். கலைத் திட்டத்தை வடிவமைப்பதிலும் அவர் பங்களித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பல்கலைக்கழக நிர்மாணப் பணிகள் முடியும் வரை அதன் வெற்றிக்காக ஒவ்வொரு நாளும் தொழுகையிலும் பிரார்த்தனையிலும் அவர் ஈடுபட்டதாக வரலாற்றில் அறியப்படுகின்றது. வட ஆபிரிக்காவிலுள்ள மிகப் பெரும் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக அல் கரவைன் பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்பட்டது.


அபுல் அப்பாஸ் மற்றும் முஹம்மத் அல் பாஸி போன்ற இஸ்லாமிய அறிஞர்களும் புகஹாக்களும் கரவைன் பல்கலைக்கழகத்தில் கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய உலகில் புகழ்பெற்ற சூபி மற்றும் பகீஹ் எனக் கருதப்படும் இப்னு அல் அறபி, வரலாற்றாசிரியரும் சமூகவியலாளருமான இப்னு கல்தூன், புவியியலாளரான முஹம்மத் அல் இத்ரீஸி, வானியலாளரான நுருத்தீன் அல் பித்ரூஜி போன்றோர் அல் கரவைன் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள்.

ஆரம்பத்தில் அல்குர்ஆனும் இஸ்லாமிய சட்டமும் போதிக்கப்பட்டன. பின்னர் கணிதம், அறபு மொழி, மருத்துவம், வானியல், இயற்பியல், வரலாறு, புவியியல் பாடங்களை முஸ்லிம் மாணவர்கள் மட்டுமன்றி, கிறிஸ்தவ யூத மாணவர்களும் பயின்றனர்.

முழுப் பல்கலைக்கழகக் கல்வியும் பாத்திமா அல் ஃபிஹ்ரியின் அனுசரணையில் இலவசமாக வழங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இன்றும் இயங்குகின்றது.




# மனச்சோர்வுக்கான சிகிச்சைகள்



### 1. மனச்சோர்வு நீக்கிகள்

கடுமையான மனச்சோர்வுக்கு மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும். இவை மூளையிலுள்ள மனச்சோர்வோடு தொடர்பான வேதிப் பொருட்களைப் பாதிக்கின்றன. இம்மருந்துகள் அவற்றுக்கு அடிமையாக்கச் செய்யாது. சில மருந்துகள் தூக்க உணர்வு, கைநடுக்கம், வாய் உலர்தல் போன்ற சில பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். வேறு சில மருந்துகளுக்கு பாலாடைக் கட்டி, அவரைக் காய் போன்ற சில உணவுப் பொருட்களைத் தவிர்க்கும் பத்திய உணவு தேவைப்படலாம்.

கவனிக்கத் தக்க விளைவுகளைக் காண்பதற்கு சில மருந்துகள் இரண்டு வாரங்கள் வரை எடுக்க வேண்டியிருக்கும். அதற்கு நல்ல விளைவுகள் ஏற்படும். நோயாளிகளில் 70 சதவீதம் வரை இம்மருந்துகளுக்குக் குணமடைகிறார்கள். மனச்சோர்வு நீங்கிய பின்னரும் பல வாரங்கள் அல்லது சில மாதங்களுக்கு இம்மருந்துகளைத் தொடர வேண்டி ஏற்படலாம். பின்னர் மருத்துவரின் வழிகாட்டலின் கீழ் மருந்துகளைப் படிப்படியாக நிறுத்த வேண்டும்.

மனச்சோர்வு நீக்கி மருந்துகள் அந்த நோயின் காரணங்களை அகற்றி விடாது. அதே சமயம், அதனால் ஏற்படும் நோய்க் குறிகளிலிருந்து நிவாரணம் அளிக்கும். இதனால் நோயாளி மனச்சோர்வுக்குக் காரணமான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான திறன் பெற்றிருப்பார்.

### 2. மின்தூண்டல் சிகிச்சை

மனச்சோர்வு நீக்கிகள் போதுமானளவு நிவாரணம் தராவிட்டால் அல்லது மனச்சோர்வின் வலி தற்கொலைக்குத் தூண்டும் அளவுக்கு அதிகமானதாக இருந்தால் அவரை ஆழ்ந்த மனச்சோர்விலிருந்து தூக்கி விடுவதற்காக மின்தூண்டல் சிகிச்சை (Electro Convalsive Theraphy) பரிந்துரைக்கப்படுகின்றது.

மின்தூண்டல் சிகிச்சை கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளான ஒன்று. ஏனெனில், முன்னர் அதன் தீய விளைவுகளை கருத்திற் கொள்ளாது கட்டுப்பாடற்ற முறையில் பயன்படுத்தப்பட்டது. இப்போது அது பாதுகாப்பான சிகிச்சை முறையாக மாறி விட்டது. கண்டிப்பான மருத்துவ மேற்பார்வையின் கீழ் இந்த சிகிச்சை வழங்கப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை மின்தூண்டல் சிகிச்சை வழங்கப்படுகின்றது. பொதுவாக, 6 சிகிச்சைகள் போதுமானதாக இருக்கும். சில நேரங்களில் இரண்டு சிகிச்சைகளுக்குப் பின்னரே வியப்பூட்டும் முன்னேற்றங்களைப் பார்க்கலாம்.

கட்டுப்படுத்தப்பட்ட மின்னோட்டத்தை நோயாளியின் மூளையில் பாய்ச்சுவதற்கு முன்னர் மிதமான மயக்க மருந்தும் தசைகளை தளர்வுறச் செய்யும் மருந்தும் கொடுக்கப்படுகின்றது. நோயாளி சிலவேளை தலைவலியோடு அல்லது குழப்ப உணர்வோடு தடுமாற்றத்தோடு விழிப்பார். ஆனால் அது விரைவில் சரியாகி விடும்.

மின்தூண்டல் சிகிச்சை எவ்வாறு செயல்படுகின்றது என்பது பற்றிய நல்ல புரிதல் இப்போது இருக்கிறது. மின்சாரத்தின் திடீர்த் தாக்குதல் மூளையிலுள்ள நரம்பு மண்டலத்தில் வேதி மாற்றங்களை உருவாக்குகின்றது. இதனால், தற்காலிக மிதமான நினைவாற்றல் இழப்பு ஏற்படலாம். இது சிலருக்கு இரண்டு வாரங்கள் அல்லது அதற்கு மேலாகவும் நீடிக்கலாம்.

### 3. குணப்படுத்தும் முறைகள்

மூளையிலுள்ள வேதிப் பொருட்களின் ஒப்பமைவை மாற்றி, சோர்வடைந்த மனநிலையை மேம்படுத்த மருந்துகள் உதவினாலும், மனச்சோர்வு ஏற்படக் காரணமாக இருந்த பிரச்சினைகளை அவை சரி செய்யாது. இத்தகைய நோயாளிகளுக்கு உதவ மருத்துவர்களின் உதவியும் தேவைப்படலாம். நோயாளி தங்கியிருக்கும் இடத்திலேயே அவர்களுக்கான செயல்பாட்டுத் திட்டம் ஒன்று இருக்கும். நோயாளி அதில் ஈடுபட்டு அவருடைய மனதை அமைதிப்படுத்தி, நம்பிக்கையையும் சுயமரியாதையையும் அதிகரிக்க உதவும்.

பராமரிப்புக் குழுவிலுள்ள கலை வழி மருத்துவர் (Art Theraphist) தொழில் வழி மருத்துவர் (Occupational Theraphist) உடல் வழி மருத்துவர் (Physio Theraphist) போன்றோரின் உதவி மனச்சோர்வாளர்களுக்குத் தேவைப்படும். சமூக மனநலச் செவிலியர்கள் வாரத்திற்கு ஒருமுறையேனும் நோயாளிகளை வந்து பார்க்க வேண்டும்.

நோயாளி கிசிச்சைக்காக ஓர் உளவியலாளரையோ (Psychologist) உளநல மருத்துவரையோ நெருங்கி சிகிச்சை பெற அவரது குடும்பம் துரிதமாக உதவ வேண்டும். மனநோய் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் நோயாளியின் குழந்தைப் பருவ பேரதிர்ச்சிகள், நோய்க்கு வழிவகுத்த நிகழ்வுகள் அல்லது உறவுகள் பற்றிப் புரிந்துகொள்ள முயற்சிப்பார்கள். இதனால் மனச்சோர்வுக்கு உட்பட்டவரின் கடந்தகால வாழ்க்கைப் பதிவை சிகிச்சை அளிக்கும் உள மருத்துவர்களோடு முறையாகப் பகிர்ந்து கொள்ளும் பொறுப்பும் மனச்சோர்வு நோயாளியின் குடும்பத்தாருக்கு உள்ளது.

# முகாமையாளர் என்ற வகையில் அதிபர்களின் வகிபாகம்

பாடசாலை அதிபர்கள் முகாமைத்துவம், தலைமைத்துவம், நிருவாகம் ஆகிய மூன்று எண்ணக்கருக்களின் விளக்கம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவற்றுக்கான வரைவிலக்கணங்கள் ஒருபுறம் இருக்க, பாடசாலை அதிபர்கள் இம்மூன்று பணிகளுக்கும் இடையே எவ்வாறு சமரசம் காண்பது எனும் விடயத்தில் தெளிவு பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

- தலைமைத்துவம் என்பது ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை என்பவற்றின் செயலாற்றத்தை அதிகரிக்க உதவும் உயர் நிலைப் பணிகளை (High Order Tasks) குறிக்கின்றது.
- முகாமைத்துவம் என்பது நாளாந்த பராமரிப்புப் பணிகளை தொடர்ந்து முன்கொண்டு செல்வதைக் குறிக்கின்றது.
- நிருவாகம் என்பது கீழ்நிலைப் பணிகளை (Law Order Tasks) முன்னெடுத்துச் செல்வதைக் குறிக்கின்றது.

இம்மூன்று எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளை துல்லியமாக ஆராய்ந்த Dimmock எனும் அறிஞர், பாடசாலை அதிபர்கள் இம்மூன்றையும் ஒருங்கே முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது என்கிறார்.




20 ஆம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற நிருவாகக் கோட்பாட்டாளர்களுள் ஒருவரான ஹென்றி ஃபயோல் (1841 - 1925) நிருவாக செயன்முறைக்கு வழங்கிய வரைவிலக்கணம், முகாமைத்துவ சிந்தனையில் ஒரு முக்கிய பங்கினை வகித்து வருகிறது.

''நிறுவனங்கள் வினைத்திறனுடன் இயக்க வேண்டுமாயின், முகாமையாளர்கள் பின்வரும் பணிகளில் பின்வரும் ஒழுங்கில் செயல்பட வேண்டும். திட்டமிடல் (Planning) ஒழுங்கமைத்தல் (Orga nizing), கட்டளையிடல் (Commanding), இயைபாக்கம் செய்தல் (Co-ordinating), கட்டுப்படுத்தல் (Controling)

- திட்டமிடல் என்பது எதிர்காலம் பற்றி ஆராய்ந்து ஒரு செயல் திட்டத்தை வகுப்பதாகும்.
- ஒழுங்கமைத்தல் என்பது நிறுவனத்தின் பொருள் வளம், மனித வளம் ஆகிய இரண்டையும் கொண்ட அமைப்பைக் கட்டியெழுப்புதல்.
- கட்டளையிடல் என்பது ஊழியர்களுக்கிடையேயான செயற்பாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- இயைபாக்கம் என்பது நிறுவனத்தில் இடம்பெறும் சகல முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க முயற்சிப்பதாகும்.
- கட்டுப்படுத்தல் என்பது தீர்மானிக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்ப அனைத்தும் நடைபெறுகின்றதா என்பதைப் பார்ப்பதாகும்.

பாடசாலை நிருவாகத்தில் பலராலும் பயன்படுத்தப்பட்ட மற்றொரு முகாமைத்துவக் கோட்பாடு லூதர் கூலிக் என்பவருடையது. முகாமையாளரின் பணிகள் என்ன என்ற கேள்விக்கு POSDCORB எனும் சுருக்கக் குறியீட்டின் மூலம் லூதர் விளக்கமளித்துள்ளார்.

P - (Planning) **திட்டமிடல்:** நிறுவனத்தின் குறிக்கோள்களையும் அவற்றை அடைவதற்கான நடைமுறைகளையும் திட்டமிடல்

O - (Organizing) **ஒழுங்கமைத்தல்:** நிறுவனத்தின் முறையான அமைப்பொன்றை (Formality) ஏற்படுத்தல். அவ்வதிகார அமைப்புக்கான துணைப் பிரிவுகளை உருவாக்கல், பணிகளை வரையறுத்தல், குறிப்பிட்ட இலக்குகளை நோக்கி அவற்றை இயைபாக்கம் செய்தல்.

S - (Staffing) **பதவியாளர்களை அமர்த்தல்:** பதவியாளர்களை நியமித்தல், அவர்களுக்குப் பயிற்சி வழங்கல்.

D - (Directing) **இயக்குதல்:** தொடர்ச்சியாகத் தீர்மானங்களை மேற்கொள்ளல், அவற்றைக் கட்டளைகளாத் தயாரித்தல், நிறுவனத்தின் தலைவராகச் செயற்படல்

C - (Co-ordinating) **இயைபாக்கம் செய்தல்:** பணிகளின் பல்வேறு பகுதிகளை தொடர்புறுத்தும் பிரதான பணி.

R - (Reporting) **அறிக்கையிடல்:** நிறுவனத்தில் நடப்பது பற்றி உரிய மேலதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

B - (Budjeting) **பாதீட்டுப் பணி:** நிதித் திட்டமிடல், கணக்குகளை வைத்தல், அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்தல் போன்ற பணிகள்.

பாடசாலை முகாமைத்துவத்தை மார்க்ஸ் வெபர் என்பவர் ஒரு பணிக் குழு ஆட்சியாக விபரித்துள்ளார். அதிகாரப் படிநிலை அதில் செயல்படுவது முக்கிய பண்பாகும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக வட கிழக்கு பிரதேசங்களின் காணி, பாதைகள், மற்றும் பாடசாலைகள் விடுவிப்பு, ஆனையிறவு உப்பளம், குறிஞ் சைத்தீவு உப்பளம், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வாழைச் சேனை கடதாசித் தொழிற்சாலை பரந்தன் இரசாயன தொழிற்சாலை, முல்லைத்தீவு ஓட்டுத் தொழிற்சாலைகள், வட கிழக்கு பிரதேசங்களின் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்கள், படையினரால் நடாத்தப்படும் முன்பள்ளிகளின் சமூகத் தாக்கங்கள், கேப்பாபிலவு காணி விவகாரம், வட்டகச்சி விவசாயப் பண்ணை விடுவிப்பு, ஒலுவில் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட மேலும் பல முக்கிய விடயங்கள் பற்றி இதன்போது விரிவாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், அத்துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.ஸ்ரீதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, கே.கோடீஸ்வரன், அங்கஜன் ராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பின் போது, வடக்கு கிழக்கு பிரதேசத்தில் காணப்படும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றியும் அதன்போது எழுகின்ற தடைகள் பற்றியும் விரிவாக சுட்டிக்காட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சிறிசேன, இனங்காணப்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வுகளை பெற்றுத் தரக்கூடிய வகையில் அவற்றை புதிய அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீட்டினை செய்வதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு தனியாருக்குச் சொந்தமான காணிகளில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய செயற்பாடுகள் மேலும் தொடரப்படுவதை அனுமதிக்க முடியாது என்பதனால் அத்தகைய காணிகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, யாழ் இராணுவக் கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாரச்சி, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரச அதிபர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## முகாமையாளர்... (13 ஆம் பக்கத் தொடர்)

பாடசாலைகள் பணிக்குழு ஆட்சி அமைப்புக்களில் காணப்படும் பல அம்சங்களைக் கொண்ட முறையான நிறுவனங்களாகும். பாடசாலை நிருவாகத்தை வெபரின் கருத்தை வைத்து ஆராய்ந்த மார்க்ஸ் எலொட் என்பவர் பாடசாலைகளை பணிக்குழு ஆட்சி அமைப்பாக விபரிக்க முடியும் என்றும், இராணுவ மற்றும் அரசாங்கத் துறையில் பயன்படுத்தப்படும் நிருவாக முறைகளை பாடசாலைகளும் அப்படியே பின்பற்றுவதாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், பணிக்குழு ஆட்சியமைப்பு எனும் கருத்தை நிராகரிக்கின்ற முகாமைத்துவக் கோட்பாட்டாளர்களும் உள்ளனர். அவர்களின் கருத்தில், பாடசாலைகள் தனியாட்களுக்கு சான்றிதழ் வழங்கும் சமூக முகவர் நிலையங்களாகும். தரப்படுத்தப்பட்ட பாட ஏற்பாடும் மற்றும் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் ஒரே தன்மை வாய்ந்த மாணவர்களை உருவாக்குகின்றனர். இவர் தமது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப பொருளாதார, சமூக அடுக்கமைவுகளுக்கு ஏற்ப பொருத்தமான இடத்தை வகிக்கின்றார்.

பரந்துபட்ட சமூகத்தின் நியமங்களுக்கு ஏற்ப பாடசாலைகள் இயங்கும் போது அவை சமூக அங்கீகாரத்தைப் பெறுகின்றன. இலங்கையின் பிரசித்தி பெற்ற பாடசாலைகளை இதற்குச் சிறந்த உதாரணங்களாகக் கொள்ளலாம். அத்தகைய பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்பாடுகள் மீது குறைந்தளவு கட்டுப்பாடே செலுத்தப்படுகின்றது. ஏனெனில், கடுமையான மேற்பார்வையும் மதிப்பீட்டு ஏற்பாடுகளும் பல குறைபாடுகளை வெளிக்கொணர்ந்து நிச்சயமற்ற தன்மைகளை ஏற்படுத்துகின்றன. இதனால், பாடசாலைகள் நம்பிக்கை அடிப்படையில் இயங்க முற்பட்டு இருக்க வேண்டிய இணைப்புக்களை தளர்த்தி விடுகின்றன. இது நவீன கால முகாமைத்துவக் கோட்பாட்டாளர்களின் கருத்தாகும்.

## ஜனநாயகத்தைத்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியவற்றவராகத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

இந்த வருடம் ஏப்ரலில், பாகிஸ்தானின் உயர்நீதிமன்றம் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் நாட்டின் உயர்ந்த பதவியில் அமர்வதற்கான தகுதியில்லை எனக் கூறி பிரதமர் நவாஸ் ஷரீபின் பதவியைப் பறித்தது. சட்டமன்றத்துக்கு முன்னால் யாப்பின் சரத்துகளில் உள்ளடங்கியுள்ளவற்றுக்கு ஏதுவாக தனது நேர்மையையும் நம்பிக்கையையும் நிரூபிக்கத் தவறுகின்ற எவரும், வாழ்நாள் தடையை எதிர்கொள்ள நேரிடும் என நீதிமன்றம் விதித்திருக்கிறது. பனாமா பத்திரிகைகள் வெளியிடப்பட்ட போது நவாஸ் ஷரீபுக்கு இருந்த இரகசிய வங்கிக் கணக்குகள் தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட்டதால் ஷரீப் தூக்கி எறியப்பட்டார்.

பாகிஸ்தானின் நீதிக்கான போராட்டம், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இராணுவப் புரட்சி செய்வதை மறுபரிசீலிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டிருக்கிறது. முஷர்ரப் தற்போது சட்டத்திலிருந்து தப்பியோடியவராகக் காணப்படுகிறார். அவர் தற்போது உயர்நீதிமன்றிலும் உச்சநீதிமன்றிலும் பல வழக்குகளை எதிர்நோக்கியிருக்கின்றார். அரசியலமைப்பைக் கவிழ்க்கும் தேசத்துரோகக் குற்றச்சாட்டு இதில் முக்கியமானது.

நீதிக்கான போராட்டம் ஜனநாயகத்தின் ஒரு பகுதி. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையை மலை உச்சியில் தற்கொலைக்காகக் கொண்டு நிறுத்திய போது, நீதிக்கான போராட்டமே நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க முடியுமான ஆயுதமாக இருந்தது.

அரசியல் யாப்புக்கு உடலும் இருக்கிறது. ஆன்மாவும் இருக்கிறது. எழுத்துக்களும் வசனங்களும் அதனுடைய உடலாக அமையும் பொழுது, அதனுடைய ஆன்மா என்னவென்பதை அரசியல் யாப்பின் அத்தியாயம் 01 எடுத்துரைக்கிறது. ''இலங்கை சுயாதீனமான, சுதந்திரமான, இறைமையுள்ள ஜனநாயக சோஷலிஸக் குடியுரசு. இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு என்றே அது அறியப்படும்.'' இதில் உள்ள ஒவ்வொரு அடைமொழியும் இலங்கை என்னவாக இருக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டுச் சொல்கிறது. இதில் ஜனநாயகமும் குடியரசும் மிக முக்கியமானது.

இங்கு மக்களிடம் தான் உச்ச அதிகார பலம் இருக்கிறது. தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் இதற்குப் பொறுப்பானவர்கள். அவர்கள் தான் சட்டத்தின் அடிப்படையில் ஆள வேண்டும். அந்த வகையில் ஜனநாயகத்தைக் குறைத்து மதிப்பிடும் எந்த நகர்வும் யாப்பைக் கவிழ்ப்பதற்கான அதனுடைய ஆன்மாவைச் சிதைப்பதற்கான முயற்சியாகவே கொள்ளப்பட வேண்டும். எனவே ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்பது நீதிக்கான போராட்டம் மட்டுமன்றி, நீதித்துறையினதும் பிரஜைகளினதும் புனிதமான பணியுமாகும்.

## ஜனாதிபதியின்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆளுநராக நியமித்தேன். அப்படி தெரிவு செய்யப்பட்ட அர்ஜுன் மகேந்திரனின் இத்தகைய செயற்பாட்டினால் இந்த நிகழ்வுகள் இடம்பெற்று நாட்டில் பாரிய பிரச்சினையொன்று உருவானது.

எனவே இன்று கூட ஆயிரம் பில்லியனுக்கும் அதிகம் எனக் கூறும் இந்த மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி நான் மிகவும் கவலையடைகிறேன்'' என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதனால் அர்ஜுன் மகேந்திரனைக் கைதுசெய்து சட்டத்தின் முன்நிறுத்துவது பிரதமரின் பொறுப்பாகவுள்ளது. அர்ஜுன் மகேந்திரனை இந்த நாட்டுக்கு அழைத்து வந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒக்.26 உரையில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

திருத்தப்படாதிருக்கும் லஞ்ச உழல் சட்டமூலம் பற்றியும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ''நான் மஹிந்த ராஜபக்ஷவை ஒக்டோபர் 26ஆம் திகதி பிரதமராக நியமித்தேன். அதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மத்திய வங்கி மோசடியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டியது கட்டாயம் எனக் குறிப்பிட்ட சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்த இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு திருத்தச் சட்டத்தில் சில வசனங்களே திருத்தப்பட வேண்டியிருந்தது. பாராளுமன்றத்திற்கு அது அனுப்பப்பட்டு 05 மாதங்களுக்கும் அதிகமாக அலுமாரியிலேயே வைக்கப்பட்டிருந்தது. நான் இது பற்றி பல தடவை நீதியமைச்சர் தலதா அதுகோரளவிடம் கூறினேன். அமைச்சர் கிரியெல்லவிடமும் கூறினேன். மிகுந்த சிரமத்துடனேயே அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

என்றாலும் இறுதியில் அது மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவிப் பிரமாணம் செய்வதற்கு நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், அத்திருத்தம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது. அவ்வாறு பிற்போடப்பட்டமையினால் அச்சட்டம் திருத்தப்படப் போவதில்லை. இன்னும் 15, 20 ஆண்டுகளுக்கு ஆயிரம் பில்லியனுக்கும் அதிகம் எனக் கூறப்படும் இந்த மோசடி பற்றி விசாரணை இடம்பெறப்போவதில்லை. குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கப் போவதும் இல்லை. அந்த நிதியை மீட்கவும் முடியாது. இது இன்னும் பாரதூரமான பிரச்சினையாகும்'' என ஜனாதிபதி குறிப்பிட்டார். இதுவும் பிரதமரின் கவனத்தில் இருக்க வேண்டும்.

பெரிதும் பேசப்பட்ட சிங்கப்பூர் உடன்படிக்கை தொடர்பிலும் ஜனாதிபதி சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். ''சிங்கப்பூர் ஒப்பந்தம் பற்றி நான் ஆணைக்குழு ஒன்றை அமைத்தேன். அதன் பரிந்துரைகள் கடந்த வாரம் எனக்கு கிடைக்கப் பெற்றன. இந்த ஒப்பந்தத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பது பற்றி அந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் இப்போது அது பற்றி விரிவாக விளக்கப் போவதில்லை. அந்த அறிக்கையில் குறிப்பாக அந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள் வர்த்தகம், துறைமுகம், கைத்தொழில், நிதி உள்ளிட்ட குறித்த அமைச்சுக்கள் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குப் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பல்வேறு நிறுவனங்கள் அந்தப் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளாது இருப்பது பாரிய தவறு என இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. எனது கருத்து அதனை அரச தலையீட்டுடன் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்பதாகும். அது திருத்தப்பட வேண்டும். அந்தத் திருத்தங்களின் போது நிபுணர்களைக் கொண்டு முழுமையாகவே நீக்கப்பட வேண்டுமா? திருத்தங்களுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பது பற்றி சட்ட, பொருளாதார நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் என்றே நான் பார்க்கிறேன்'' என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மையை பிரதமர் நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

''பாராளுமன்றத்தில் ஊழல் செய்யும் அரசியல் குழுவொன்று உள்ளது. அமைச்சரவையிலும் ஊழல் செய்பவர்கள் இருக்கிறார்கள். நாம் மக்களுக்கு வழங்கிய நல்லாட்சி அரசியல் வாக்குறுதிகள் கண்ணெதிரே அழிக்கப்பட்டுள்ளன. இந்த செயலுக்கான குற்றவாளி நான் இல்லை என்பதை தெளிவாகக் கூறிகொள்ள விரும்புகின்றேன்'' என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் இந்தச் செயலுக்கான குற்றவாளி யார் என்பதைத் தெளிவுபடுத்துவதோடு, அமைச்சரவையில் இருந்த அந்த ஊழல் பேர்வழிகள் யார் என்பதையும் பிரதமர் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி மீதான கொலை முயற்சி பற்றி ஜனாதிபதி பல இடங்களிலும் பேசியுள்ளார். இதில் உண்மையாகச் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதைத் தெளிவுபடுத்தும் வேலையும் பிரதமருக்கு இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க பொதுவாகவே கூட்டுச் செயற்பாடற்ற, தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும், மிகவும் முரட்டுத்தனமான, பிடிவாதமிக்க ஒருவராகவே அரசாங்கத்தில் செயற்பட்டார் என ஜனாதிபதி ஒக்.26 உரையில் கூறியிருந்தார். அதேபோல, தனக்கும் ரணிலுக்கும் இடையில் பாரிய கலாசார வேறுபாடு இருப்பதையும் அவர் அன்று சுட்டிக் காட்டியிருந்தார்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதிலாக மேற்கு நாடுகளுக்கு வக்காலத்து வாங்கும் பொருளாதாரக் கொள்கையையே ரணில் கடைப்பிடித்தார் எனவும் ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார். ரணிலுடன் சேர்ந்து மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு தம்மால் வேலை செய்ய முடியாது எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார். ஆகவே வேறு வழியின்றி ரணிலிடம் பிரதமர் பதவியை ஒப்படைத்தமையை ஜனாதிபதி தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ரணில் மீது ஜனாதிபதி முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் இந்தியாவுடனான தனது உறவைத் தூரமாக்குவதற்கு அவர் முயன்றதாகவும், அமைச்சரவை ரகசியங்களைக் கூட வெளிப்படுத்தியதாகவும் (நவம்பர் 05 உரை) குற்றம் சாட்டியிருந்தார். இது உண்மையில் பாரதூரமான குற்றச்சாட்டாகும். இதனுடன் சேர்த்து ஜனாதிபதி தனது பிரதமர் தொடர்பில் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உண்மையை வெளிக் கொணரும் பணி பிரதமருக்கு இருக்கிறது. அடுத்து வரும் காலங்களில் அவர் இதனை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இத்தனை குற்றச்சாட்டுக்களும் இருந்தாலும் ஜனாதிபதி ரணிலைப் பிரதமராக்கியிருக்கிறார். இந்த நிலையில் அவர் இதே விடயங்களைத் தொடர்ந்து தனக்கிருக்கின்ற கால அவகாசத்தில் இதற்கும் அதிகமாகக் கொள்ளையடித்தாலும் ரணில் தான் நாட்டின் பிரதமர். ஏனெனில் தான் கொள்ளையடித்தது போதும் என திருடனாய்ப் பார்த்து ஒதுங்கிக் கொள்வதேயல்லாமல், ஜனாதிபதியால் ஒருபோதும் பிரதமரை பதவியில் இருந்து நீக்கவும் முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலிருந்து அவரை நீக்கவும் முடியாது. இந்த வகையில் தற்போது கிடைத்திருக்கும் தீர்வு போராடிப் பெற்ற தோல்வியாகவும் அமைய முடியும்.

## காலா காலமாக... (07 ஆம் பக்கத் தொடர்)

சமூக, பொருளாதார, அரசியல் சவால்களுக்கு பதில் தரக்கூடிய எல்லோரையும் உள்ளடக்கிய செயல்முறையை கொண்ட தேசிய செயற்திட்டமொன்றினை உருவாக்க முடியாமல் போயிருக்கிறது. பரவலான ஆலோசனை மற்றும் பங்கேற்புச் செயன்முறையின் மூலம் புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கிக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

உள்நாட்டில் தொழில் வளர்வதற்கான நிலையான சூழல் ஏற்படுத்தப்படவில்லை. தேசிய ஒற்றுமை, இன மற்றும் மத நல்லிணக்கத்தை ஊக்குவிக்க முடியாமல் போயிருக்கிறது. தேசத்தை கட்டியெழுப்ப புதிய அரசியல் தலைமையினையும் அரசியல் பண்பாட்டினையும் கட்டியெழுப்ப முடியாமல் போயிருக்கிறது. எனவே நாம் ஒன்றுபட்டு இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாமையின் விளைவே சமகால அரசியல் நெருக்கடியாகும்.

காலம் காலமாக புரையோடிப் போன பிரச்சினையின் அறிகுறிகளில் ஒன்றே தற்போதைய அரசியல் நெருக்கடி. இதே முறைமைக்குள் நின்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்கின்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். இந்தப் பிரச்சினை தீர வேண்டுமெனில் இந்நாட்டில் இலங்கையர் என்ற அடையாளம் உருவாக்கப்பட வேண்டும். அதனைச் சூழ கட்டியெழுப்பப்பட்ட கலாசார ரீதியில் உயர்ந்த நிலையிலுள்ள மக்கள் கூட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போது நுகர்வுப் பொருளாதாரத்தை மையப்படுத்திய சமூக அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. மக்கள் எப்போதும் முதலீட்டவே ஆசைப்படுகின்றனர். எனவே இம்மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இவ்வாறு பரந்ததொரு மாற்றம் உருவாக வேண்டும். நாளையே ஆட்சியைக் கைப்பற்றி ஒரே நாளில் தீர்த்து விடக்கூடிய பிரச்சினைகள் அல்ல இவை. எமக்கு உற்பத்திப் பொருளாதாரம் ஒன்றில்லை. எனவே இந்த விடயங்களில் அவதானம் செலுத்தாமல் இதற்குத் தீர்வு காண முடியாது.

- **சிவில் சமூக அமைப்பில் இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்?**

எமது இயக்கத்தில் இளைஞர்களையும் பெண்களையும் உள்ளடக்கிய இளையோர் முன்னணியொன்றுள்ளது. (Youth League) அவர்கள் எமது செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளார்கள். இளைஞர்களுக்குச் சரியான இடத்தை அமைத்துக் கொடுக்கவே நாம் முயற்சிக்கிறோம். இது இளைஞர்களின் அமைப்பு. அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாகவே நாம் இதனை முன்னெடுத்து வருகின்றோம்.

எதிர்வரும் காலத்தில் நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் போது இளைஞர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்கும் சந்தர்ப்பத்தையும் உங்களால் கண்டுகொள்ள முடியும். எவருக்கும் எம்முடன் இணைந்து கொள்ள முடியும். எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அல்லது எமது இணையதளத்தில் பிரவேசித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் எழுந்த முஸ்லிம் கலாசார உடைகள் தொடர்பான விவாதம்

• வ.ஐ.ச. ஜெயபாலன்

இலங்கையில் குறிப்பாக கிழக்குப் பாடசாலை அலுவலகங்களில் முஸ்லிம் பெண்கள் அணியும் உடைகள் தொடர்பான விவாதம் மீண்டும் எழுந்துள்ளது. இது பற்றி என்னிடம் கேட்கப்பட்டபோது என் கருத்தை உறுதியாக முன்வைத்தேன்.

ஒரு பெண் நிர்ப்பந்திக்கப்படாமல் சொந்த விருப்பத்தின் பேரில் முக அடையாளத்தை மறைக்காமல் அணியும் ஆடையைச் சிலர் கேள்விக்குரித்தாக்குவதை அனுமதிக்க முடியாது. அதேபோல மாற்று மதத்தவர்களின் உடைகளை காமத்தைத் தூண்டுவது என வக்கிரமாகச் சிலர் குறிப்பிடுவதையும் அனுமதிக்க முடியாது.

எங்கள் இளமையில் சேலை முக்காடு என முஸ்லிம்களின் கலாசார உடைகள் ஒருபோதும் கேள்விக்குள்ளானதில்லை. 1980 களின் பின்னர் முஸ்லிம்கள் அரேபிய வடிவ உடைகளுக்கு மாற ஆரம்பித்தபோது உலகளவில் உருவான/ உருவாக்கப்பட்ட சூழல் இதுவாகும்.

மரபு இஸ்லாமிய ஆடைகளா அல்லது அரபுமயமாதலா என்கிற விவாதம் உலக மட்டத்திலும் இலங்கையிலும் அதிகரித்து வருகிறது. எனினும் இது சார்ந்த விவாதங்களும் முடிவுகளும் உள்வாரியாக முஸ்லிம் மக்கள் மத்தில் மட்டுமே இடம்பெறுதல் வேண்டும். ஏனையோர் விலகி இருப்பதே சரியானது என்பதை வலியுறுத்துகிறேன்.

முஸ்லிம் பெண்களிடமிருந்து உடைகள் தொடர்பான விதிகள் மற்றும் இலங்கை முஸ்லிம் தனியார் சட்ட தீர்ப்புகளால் தாம் தனிப்பட்டமுறையில் பாதிக்கப்பட்டதாக முறைப்பாடு வராத பட்சத்தில் இவ்விடயத்தில் சட்டமும் அரசும் விலகி இருப்பதே ஜனநாயகமாகும்.

முஸ்லிம்கள் பற்றி இன்று உலகம் முழுவதும் விவாதிக்கப்படுகிற விடயம் அரேபியமயமாதலாகும். துரதிஷ்டவசமாக இது பற்றிய தொடர் விவாதங்களும் உலக நாடுகளின் விவாதங்களில் அதன் மூலம் பங்களித்தலும் முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிகம் இல்லை. இந்தத் தசாப்தத்தில் இலங்கை ஐலண்ட் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரைகள் பலவற்றுக்கு இன்று வரை பதிலளிக்கப்படவில்லை. உலகில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் நாடுகளில் ஆய்வு கலந்துரையாடல் விவாதங்கள் இல்லாத முரட்டுத்தனமான நியாயப்படுத்தல்கள் பகை வளர்க்குமே யன்றிப் பதில்களாகிவிடாது.



சிறுபான்மையினராக வாழும் நாட்டில் விசேட சட்டங்களைக் கோரும் இனமாக முஸ்லிம்கள் இருக்கிறது தொடர்பான முரண்களை மென்போக்குடனும் சரியான கலந்துரையாடல்கள் மூலமும் ஞானத்தோடு அணுகுவது முஸ்லிம் அறிஞர்களின் கடமையாகும். உலகம் முழுவதும் முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டங்கள் முஸ்லிம் பெண்களுக்கான இயற்கை நீதியை மறுக்கும் வகையிலும் பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் பெருகி வருகின்றன. காதிமன்றுகள் சிலவற்றின் மீது முஸ்லிம்களே அத்தகைய குற்றச் சாட்டுக்களை வைத்திருக்கிறார்கள். விஷேட சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் போது விஷேட சட்டங்களை நெடுநாட்கள் பாதுகாப்பதே போராட்டமாகி விடும் ஆபத்துள்ளது.

விவாக விவாகரத்துச் சட்டங்கள் முஸ்லிம் பெண்களுக்கு எதிராகவே பிற மதப் பெண்களை மணப்பது தொடர்பாகவோ துஷ்பிரயோகம் செய்யப்படும் போது அது அநீதியாகும். அது நிச்சயம் முஸ்லிம்களின் உள்விவகாரமல்ல என்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும். அதனை மனித உரிமை ஆர்வலர்களும் பெண்ணியவாதிகளும் எதிர்ப்பார்கள். அது முஸ்லிம்களையல்ல முஸ்லிம் விரோதிகளையே பலப்படுத்தும்.

விசேட சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது முஸ்லிம் விரோதிகளுக்கு கோட்டை மதில் கதவுகளைத் திறந்து வைக்கிற துரோகச் செயலாகும். இவையும் முஸ்லிம்கள் அரசுக்குள் அரசாக இயங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்களோ என்கிற பெரும்பான்மையினரின் சந்தேகங்களையே வலுப்படுத்துகிறது. அடிப்படையாகும். இந்த விடயத்தை நான் முஸ்லிம் சான்றோரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தயவு செய்து எனக்குக் கற்பிக்கவும். மரபு சார்ந்த சேலை முட்டக்கு பிஜாமா தலை நாடியை சுற்றிய முட்டாக்கு இவை புனித நூல் நெறிப்படுத்தலுக்கு விரோதமானதா? அறேபிய ஆடைகள் மட்டும் தான் புனிதநூல் நெறிப்படுத்தலுக்கு அமைந்ததா? இஸ்லாத்தில் ஷரீஆ போன்றவை புனித நூலுக்கு இணையானவையா? புனித நூலில் சொன்னவற்றை பின்பற்றினால் அதை இஸ்லாத்துக்கு ஒவ்வாத ஆடையென சொல்லலாமா? தயவுசெய்து எனக்கு கற்பிக்க வேண்டுகிறேன்.

**ஷேகுதாவூத் நஸீர் (முகநூல் நண்பர்):** பெண் விருப்பின் பேரில் முகத்தை மூடினால் அதைத் தடை செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது.

**ஜெயபாலன்:** முஸ்லிம் நாடுகள் பல அந்த உரிமையைக் கொண்டுள்ளதை நீங்கள் அறிவீர்களா? முகம் மூடுவது தடை செய்யப்பட்டால் அதை எதிர்த்து போராடுவேன் என்று சொல்கிறீர்கள். நிச்சயமாக முகம் மூடுவதை ஆதரித்து நான் போராட மாட்டேன் நண்பா.

மத்திய ஆபிரிக்க நாடான சாட் முஸ்லிம் பெரும்பான்மை நாடாகும் 2015ல் இரண்டு தற்கொலைத் தாக்குதல்களின் பின் முகமூடும் உடைகள் தடை செய்யப்பட்டது. இது ஒரு உதாரணம் மட்டுமே. நண்பா, பெண்கள் முகம் திரையிட்டு மூடல், தடுக்கப்பட்ட அல்லது கட்டாயமாக்கப்படாத முஸ்லிம் நாடுகளின் சேதிகளை வாசியுங்கள் .

**ஷேகுதாவூத் நஸீர்:** தானாக விரும்பி பெண்கள் முகமூடுவதை யாரும் தடை செய்ய முடியாது என்பதுதான் எனது வாதம். தவிர எந்த முஸ்லிம் பெரும்பான்மை நாடோ அல்லது முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடோ முகம் மூட வேண்டும் என்றோ அல்லது வேண்டாமென்றோ கட்டளையிட முடியாது. அல்லாஹ்வின் தூதரும் அதை வழி மொழிந்ததாக இல்லை.

முகமூடியணிந்த நாடுகளில் முகமூடியணிந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்ற வாதம் முன்வைக்கப்பட்டால் அதற்காக விரும்பி முகமூடியணியும் பெண்களைத் தடைசெய்வதென்பது முகமூடியணியும் பெண்களின் சொந்த உரிமையை, அவர்களுடைய ஜனநாயக உரிமையை தடைசெய்ய சோடிக்கப்படும் ஒரு புறக்காரணியே அன்றி வேறில்லை, அப்படித் தடைசெய்வதை விடுத்து பெண்களுடைய உரிமையை நாசகார வேலைகளுக்குப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக தொழில்நுட்ப உதவியைக் கையாண்டு மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி குற்றத்தைத் தடுக்க வேண்டுமே தவிர உரிமையை மறுத்து அடிமைத்துவத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது.

**ஜெயபாலன்:** உங்கள் அளவுக்கு இந்த விடயங்கள் எனக்குத் தெரியாது. ஆனபடியால் நான் உங்களோடு வாதிட வரவில்லை. ஆனால் உங்களைப் போல அன்று முஸ்லிம் பிரதர்கூட் தலைவர் பேசிய போது அவருடைய இதுபோன்ற ஒரு கேள்விக்கு எகிப்தின் பிதாமகன் அப்துல் நாசார் அளித்த பதில் எனக்கு நினைவு வருகிறது. இது உங்களுக்கும் பொருந்தி வரக்கூடும். நாசரின் பதில் (1943) இதோ:

«Your daughter is studying medicine. She does not wear the veil. If you can›t impose the veil on your daughter, what makes you think I can impose the veil on 10 million Egyptian women?»

தமிழில்: ''உங்கள் மகள் மருத்துவம் பயில்கிறார். அவர் முகத்திரை அணிவதில்லை. உங்களால் உங்கள் மகளுக்கு முகத்திரை அணிய நிர்ப்பந்திக்க முடியாத போது எதனால் ஒரு கோடி எகிப்திய பெண்களை முகத்திரை அணியுமாறு என்னால் நிர்ப்பந்திக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்கள்.'' இது அரை நூற்றாண்டுகளுக்கு முந்திய நிலமை. அப்போது உங்களைப் போல சிந்திக்கிறவர்கள் இருந்தார்கள். (https://www.youtube.com/watch?v=TX4RK8bj2W0)

**முஸ்லிம்களின் கலாச்சார அடையாளம் அடிப்படை உரிமை.**

ஆனால் 1980களில் பணிப்பெண்கள் பணியாளர்கள் அரபு நாடுகளில் இருந்து கொண்டு வந்த கண்ணீர் கதைகளும் செல்வமும் அரபிய மயமாதலும் வேறு. இது பற்றிய விவாதங்கள் சிங்களவர் மத்தியில் நடப்பதுபோல முஸ்லிம் மக்கள் மத்தியில் இடம்பெறாதமையும் சிங்களவருக்கு பதில் கூறாமையும் இன்றைய சோகங்களின் அடிப்படை. உலகம் முழுவதிலும் முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளா அரபியமயமாதாலா எதற்கு முக்கியம் என்கிற பூதாகரமான கேள்வியை முஸ்லிம்கள் எதிர்கொள்கிறார்கள். அரபியமயமாதல்பற்றி எனக்கு எந்த அக்கறையுமில்லை. ஆனால் முஸ்லிம் பெண்கள் ஏற்றுக்கொள்கிற முஸ்லிம்களின் கலாச்சார அடையாளங்களை பாதுகாக்கிறதுக்காக

என்னுடைய உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளேன்.

(வ.ஐ.ச. ஜெயபாலனின் முகநூலில் இருந்து)

## ரணில் பிரதமர்... (01 ஆம் பக்கத் தொடர்)

''இந்தோ பசுபிக்கில் இலங்கை எமது பெறுமதி மிக்க பங்காளர், இலங்கை அரசாங்கத்துடனும் மக்களுடனும் எமது உறவுகளைப் பலப்படுத்த விரும்புகிறோம்''

- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ்

''நீதித்துறை சட்டத்தின் ஆட்சியை உறு திப்படுத்தியிருக்கிறது. இலங்கையின் ஜனநாயகத்தை மதிப்பிழக்கச் செய்த யாப்புக்கு முரணான செயற்பாடுகள் முடிவுக்கு வந்துள்ளன. இதனைப் பயன்படுத்தி அரசாங்கம் தனது பொறுப்புக் கூறலை வெளிப்படுத்துவதோடு யாப்புச் சீர்திருத்தத்தையும் நல்லிணக்கத்தையும் முன்னெடுக்க வேண்டும்.''

- கனேடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கிறிஸ்டியா பிரீலன்ட்

''அரசியல் நெருக்கடிக்குக் கிடைத்த தீர்வு இலங்கையின் நிறுவனங்களின் ஸ்திரப்பாட்டையும், சட்டம் பின்பற்றப் படுதலையும், ஜனநாயகத்தின் பாலான மக்களின் அர்ப்பணத்தையும் காட்டுகிறது.''

- பொதுலநவாய நாடுகளின் பொதுச் செயலாளர் பட்ரீசியா ஸ்கொட்லன்ட்

''நீண்ட கால நண்பனும் இந்து சமுத்திரத்தின் அயலவருமான இலங்கையின் அரசியல் ஸ்திரமின்மை யாப்பு ரீதியாகத் தீர்க்கப்பட்டிருப்பதை அவுஸ்திரேலியா வரவேற்கிறது. சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும்.''

- இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதரகம்

''நெருக்கமான நண்பன் என்ற வகையில் இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு ஜனநாயகமானதும் சுமுகமானதுமான தீர்வு யாப்புக்கு உடன்பட்ட வகையில் கிடைத்திருப்பதையிட்டு சந்தோஷமடைகிறோம். தேசிய நல்லிணக்கத்துக்கான அதனது முயற்சிக்கு எங்களது ஆதரவை தொடர்ந்தும் வழங்குவோம்.''

- ஐரோப்பிய ஒன்றியம்

''நெருங்கிய அயலவரும் உண்மையான நண்பனும் என்ற வகையில், இலங்கையின் அரசியல் தீர்வையிட்டு இந்தியா மகிழ்கிறது. இது அனைத்து அரசியல் சக்திகளினதும் முதிர்ச்சியைக் காட்டுகிறது. ஜனநாயக நிறுவனங்களின் ஸ்திரப்பாட்டைக் காட்டுகிறது. இலங்கை மக்களுக்கான தனது உதவித் திட்டங்களை இந்தியா தொடர்ந்து முன்னெடுக்கும். இலங்கை இந்திய உறவு இனிமேல் முன்னோக்கிப் பயணிக்கும்.''

- இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார்

## உலமா சபையின்... (10 ஆம் பக்கத் தொடர்)

வரலாற்றில் வித்தியாசமான கருத்துகள் வந்துள்ளன. இது சஹாபாக்களின் காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது. இதற்காக வேண்டி சஹாபாக்கள் மத்தியில் முரண்பாடு வராத அளவுக்கு இஸ்லாமிய தலைமைத்துவம் கருத்துரிமைகளைப் பாதுகாத்து வித்தியாசமான கருத்துக்களை சொல்வதற்கு அதற்கான ஆதாப்களையும் போட்டு இன்று வரையில் இஸ்லாம் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது.

தற்பொழுது நாம் வாழும் இந்தக் காலப்பகுதியில் இலங்கையில் தாருஷ் ஷஹாதா சான்று பகர்கின்ற சமூகத்தில் வாழ்கின்ற கருத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எமது ஒவ்வொரு கருத்தும் நடவடிக்கைகளும் இந்த நாட்டிலுள்ள எல்லோராலும் பார்க்கப்படுகின்றன என்கின்ற சிந்தனை இஸ்லாத்தைப் பற்றி பேசுகின்ற அறிஞர்களுக்கு இருக்க வேண்டும். அதேபோன்று நாம் உம்மது வஹ்தஹ் ஒரே உம்மத் என்று பாதுகாக்க வேண்டிய தேவையும், ஹைர உம்மத் என்று பாதுகாக்கப்பட வேண்டிய தேவையும் எங்களுக்கு உள்ளது. இதெல்லாம் பாதுகாப்பதற்கு இந்தச் சுதந்திரம், உரிமையைக் கொடுப்பது இந்த உரிமையுடன் உலமாக்கள் கருத்துச் சொல்வது அதற்கு மாற்றுக் கருத்து சொல்பவர்களும் அதற்குரிய ஆதாபுகளை பேணிப் பேசுவது தொடர்ந்து விளக்கப்படுத்தப்பட வேண்டும்.

இந்த உரிமைகளைக் கொடுத்தே ஜம்இய்யதுல் உலமாவின் ஒற்றுமைப் பிரகடனம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஜம்இய்யதுல் உலமாவின் ஒற்றுமைப் பிரகடனம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஜம்இய்யதுல் உலமா முஸ்லிம் சமூகத்திற்கு தலைமைத்துவத்தை கொடுக்கும் ஒரு நிறுவனம். ஆனால் ஜம்இய்யதுல் உலமாவின் ஒரு சில உலமாக்களின் செயற்பாடுகளும், அது தொடர்பில் உலமா சபை பேசாமல் இருக்கும் விடயங்களும் ஜம்இய்யதுல் உலமாவின் நம்பகத் தன்மையிலும் பக்கச் சார்பிலும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இது ஜம்இய்யதுல் உலமாவுக்கு அவ்வளவு நல்லதல்ல.

ஜம்இய்யதுல் உலமாவில் அங்கத்துவம் பெற்ற சில உலமாக்கள் நாட்டின் சுகாதாரத்துறைக்கு சவால் விடும் அளவுக்கு பெரும் கருத்துக்களைப் பேசினார்கள். இது இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கும் இஸ்லாத்திற்கும் அவப்பெயரை ஈட்டித் தரும் விடயமாக அமைந்தது. இது விடயம் தொடர்பில் உலமா சபைத் தலைமையகம் மற்றும் பிராந்திய உலமா சபை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால் தனது எல்லைக்குள் நின்று கருத்துச் சொல்லும் அறிஞருக்கு எதிராக பள்ளிவாசலில் மக்களைக் கூட்டி நடவடிக்கை எடுத்திருப்பது உலமா சபையின் நம்பகத்தன்மையில் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பக்கச் சார்பாக நடந்துகொண்டமையினால் அதன் நீதமான போக்கில் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று (ஜம்இய்யதுல் உலமா போன்ற அமைப்பு) நடுநிலையாக நிற்கக்கூடிய அறிஞர்களாலேயே இஸ்லாம் பாதுகாக்கப்படுகிறது என்ற கருத்துக்கு ஒப்பான வகையில் அமையப் பெற வேண்டும். இந்தப் பொறுப்பை ஜம்மிய்யதுல் உலமா எடுக்க வேண்டும். இப்படியான கருத்து வேறுபாடு வரும் போது இஸ்லாமிய வரையறைக்குள் பேசுகின்ற அறிஞர்களை ஒரு சபைக்கு அழைத்து அவர்களைப் பேச வைத்திருக்க வேண்டும். அந்த கருத்துகளில் மக்களை முடிவெடுக்கச் சொல்லியிருக்க வேண்டும். வரையறை பேணுவதன் நன்மையை மக்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்க முடியும்.

உஸ்தாத் மன்சூரின் கருத்தா மற்ற உலமாவின் கருத்தா என்பதை விட கருத்து சொல்லும் உரிமையை இஸ்லாம் வழங்கியிருக்கும் போது, இந்தக் கருத்துக்களுக்கான மாற்றுக் கருத்துச் சொல்லும் ஒழுங்குகளை இஸ்லாம் வழங்கியிருக்கும் போது, இவையனைத்தையும் ஏற்றுக் கொண்ட உலமா சபையின் ஒற்றுமைப் பிரகடன மும் இருக்கும்போது இதை மீறி நடப்பது ஆரோக்கியம் இல்லை. நாட்டில் இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாமிய வரையறைக்குள் நின்று கருத்துச் சொல்லும் உரிமை வழங்கப்பட வேண்டும். இதுவே இலங்கையில் இஸ்லாத்தை பாதுகாக்கும் விடயமாகும்.

## இளைஞர்கள்... (10 ஆம் பக்கத் தொடர்)

தேடல்களையும் செய்த விடயம் அது. அதை சாதாரண மனிதர்களின் கரங்களில் அவசரமாகக் கொடுத்து விட முடியாது. நடந்த பிரச்சினை கருத்து வேறுபாடு (இஹ்திலாபுல் மஸாஇல்) சார்ந்த விடயமல்ல. அவர் வெளியிட்ட கருத்துக்களில் உள்ள முரண்பாடு. அதாவது சென்ற வருடம் ஒரு கருத்தைச் சொன்னால் அதே கருத்தை மாற்றமாக அடுத்த வருடங்களில் பேசியிருப்பார். அல்லது ஒரு கிதாபில் ஒரு பகுதியில் ஒரு இமாம் மேற்கோள் காட்டிப் பேசியிருந்தால் அவருக்குத் தேவையான பகுதியை எடுத்து விட்டு அதிகமான பகுதிகளை அப்படியே தணிக்கை செய்திருப்பார்.

இப்படியாக கிட்டத்தட்ட ஒரு Slide எம்மிடம் உள்ளது. இதை Presentation வடிவில் செய்வதாக இருந்தால் எமக்கு 12 மணித்தியாலங்கள் தேவைப்படும். மறுபுறத்தில் இதனை நாங்களாக வரிந்து கட்டிக்கொண்டு செய்யவில்லை. ஜம்இய்யதுல் உலமா என்கின்ற பொதுச்சபையிலுள்ள பலராலும் அனுப்பப்பட்ட கடிதங்கள், தொலைபேசி உரையாடல்கள் மூலம் ஏன் நீங்கள் வாய்மூடி மௌனமாக இருக்கிறீர்கள்? என்ற கருத்துச் சொல்லப்பட்டது. உங்களுக்கு சக்தியில்லையா இதைத் தட்டிக் கேட்க? என்றெல்லாம் கேட்கப்பட்டது.

ஏனென்றால் பள்ளி நிர்வாகிகள், புத்திஜீவிகள் என்று சொல்பவர்கள் கூட இதைப் பார்த்து நகைச்சுவை கொள்ளக் கூடியவர்களாகவே இருந்தார்கள். கருத்துக் களுக்கு உள்ள இடைவெளிகளை நீக்கி அதை சமநிலைப்படுத்துவதற்கான முயற்சிகளை யாரும் செய்யவில்லை. நாளுக்கு நாள் இளைஞர்கள் இன்னும் பிழையாக வழிநடாத்தப்படுவார்கள் என்ற அச்சத்திலேயே இதை இன்னும் மக்களுக்கு தெளிவூட்ட முற்பட்டோம். அவருடைய வகுப்புக்களில் அல்லாஹ்வைப் பயந்து ஹக்கானதைச் சொல்ல வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதேநேரம் அவர் மற்றுமொரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். என்னை ஒரு சமூகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனது ஆய்வை கருத்துக்களை, ஆழமான வாசிப்புக்களை. இதை சரியான வழியில் நின்று ஆய்வு செய்து சரியான கருத்துக்களை மக்களுக்கு முன்வைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.


பொதுமக்கள் என்பவர்கள் குருடர்களைப் போல. அவர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை அல்லாஹ் எங்களுக்கு தந்துள்ளான். இது ஒரு அமானிதம். இந்த அமானிதத்தை சரியாக சமூகத்திற்கு முன் வைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். அவரது குரலை நசுக்குவது எமது நோக்கமல்ல. அவர் ஒரு ஆலிம். அவரது திறமையை நாம் பாராட்ட வேண்டும். எங்களுக்குள் காழ்புணர்ச்சியோ பொறாமையோ கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

# விளையாட்டு


இப்பொழுது விற்பனையில்




Published by:
**Salamah Publication**
No. 1 A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12 Contact: 0777 386364

வெளிவந்து விட்டது





# இளைஞர் விளையாட்டு விழாவுக்கான தேர்வுகள் பெப்ரவரியில்



தேசிய மெய்வல்லுனர் அணியைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாத இறுதிப் பகுதியில் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மெய்வல்லுனர் அணிக்கான சிரேஷ்ட வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் பெப்ரவரி 23 முதல் 25 வரை நடைபெறும். 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞர் மெய்வல்லுனர் அணிக்கான தெரிவுப் போட்டிகள் ஜனவரி 19 ஆம் திகதி நடைபெறும்.

அடுத்த வருடம் ஏப்ரல் 21 இலிருந்து 24 வரை கட்டாரில் நடைபெறவுள்ள ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக சிரேஷ்ட மெய்வல்லுனர் அணி தெரிவு செய்யப்படவுள்ளது. அதேபோல அடுத்த வருடம் மார்ச் 14 முதல் 17 வரை ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள ஆசிய இளைஞர் மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான இளைஞர் மெய்வல்லுனர் அணியும் இந்தத் தேர்வுப் போட்டிகளின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளது.

**அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள்**

- ஆசிய இளைஞர் சம்பியன்ஷிப் மெய்வல்லுனர் போட்டி - மார்ச் 14-17 ஹொங்கொங்
- ஆசிய நடை சம்பியன்ஷிப் போட்டி - மார்ச் 17 - ஜப்பான்
- ஆசிய சிரேஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டி - ஏப்ரல் 21-24 - கட்டார்
- ஆசிய க்ராண்ட் ப்ரீ மெய்வல்லுனர் போட்டிகள் - ஜூன் 4-7 - சீனா




கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் இயங்கி வரும் Kids First Step பாலர் பாடசாலையின் 10 ஆவது வருட கலைவிழா நிகழ்வுகள் மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக சிவில் செயற்பாட்டாளர் மும்தாஸ் மௌலானா, பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி உயர் தரப் பிரிவின் பொறுப்பாளர் பியாஸா ரபீக்குல்லாஹ், ஜாமியா நளீமியாவின் அரபு மொழி பீடத் தலைவர் பீ.எம்.எம். இர்பான், இந்தோனேசியாவின் Indo Bintang Rezki பணிப்பாளர் இஸ்மத் இஸ்மாயில் ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.


O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேடமான பாடநெறிகள்

Real Access Program
இப்பாடநெறின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
✔ Diploma in Computer studies
✔ Diploma in Graphic designing
✔ Diploma in Web designing
✔ Diploma in Hardware Engineering
✔ Diploma in English
3 மாதம் Weekly 05 Days 8:30 to 4:30
பாடநெறி ஆரம்பம் Next Batch Jan-3
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
02 சர்வதேச ISO தரச் சான்றிதழ்கள் உட்பட
05 DIPLOMA (TVEC) தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN
COMPUTERIZED ACCOUNTING
Contents
Free Study Pack With Software CD
★ Petty cash & Day book ★ General ledger, journal
★ Bank reconciliation statement ★ Debtors and creditors ledger
★ Sales and purchase registers ★ Fixed asset registers
★ Inventory ★ Profit and loss accounts
★ Balance sheets Payroll
Individual Classes
Next Batch Jan-3
Duration: 1-3 Months Full Time/Part Time (Weekdays/Weekends)
PACKAGES
MS Excel | MS Access | MYOB
Quick Books | ACCPAC | SAGE-50
Peactree | Tally

DIPLOMA IN
HOTEL MANAGEMENT
▼ COURSE CONTENTS
► Front Office
► House Keeping
► Food & Beverages
► Pastry & Bakery
► International Cookery
► Travel & Tourism Management
► Languages - French & English
► IT (Information Technology)
உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்களில் உறுதியளிக்கப்பட்ட ஆறுமாத கொடுப்பனவுகளுடன் கூடிய தொழில் பயிற்சி.
பாடநெறி முடிவில் (TVEC) Sri Lanka தரச் சான்றிதழ் வழங்கப்படும்.
Duration : - 04 Months
Next Batch Jan-3 & 10

Diploma In
Islamic Banking & Finance
100% JOB TRAINING GUARANTY
Conducted By :-
A world prize winner & an IBSL Lecturer with 10+ years of industrial experience.
Globally over 01 Million Jobs available by 2020
Duration
02 Months Full Time
04 Months Part Time
Next Batch :- 7 Jan
இப்பாடநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற (TVEC), ISO தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Diploma in Professional
TEACHER TRAINING PROGRAM
-Early Childhood Education-
Modules
o Association Montessori International (AMI) - Methodology
o Preschool Education
o Child Psychology
பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட ISO / TVEC Sri Lanka தரச் சான்றிதழ் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்
Duration:- Full Time 03 / Part Time 06 Months
Next Batch Jan 4
Industrial Training Will be Provided
With a more than 600 hrs of Theory with Industrial Training

DIPLOMA IN
AIR CONDITIONING & REFRIGERATION
100% வேலைவாய்ப்பு
✦ A/C Repairing
✦ Refrigeration Repairing
✦ House wiring
Next Batch Jan-3

ஆண் / பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

Golden College
Learning For Success
GOLDEN COLLEGE CITY CAMPUS
An ISO 9001: 2015 Certified Institute
www.goldencollege.lk
#548, Peradeniya Road, Kandy. Hotline :- 0777 222 529 / 0812 205 544
#138/C, Kandy Road, Thihariya. Hotline :- 0777 222 528 / 0332 245 515



Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org